


# பரராசசேகரம்

## ஏழாம் பாகம்

7







மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்
வட மாகாணசபை

# பஞ்சாக்ஷரம்

[illegible]

([illegible])

[illegible]

[illegible]

# பரராசசேகரம்

## ஏழாம் பாகம்

(மீள்பதிப்பு)

மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்

வட மாகாணசபை.

**நூல்** :- பரராசசேகரம் (ஏழாம் பாகம்)

**முதற்பதிப்பாசிரியர்** :- ஏழாலை ஐ.பொன்னையா

**மீள்பதிப்பு** :- மாகாண சுதேச மருத்துவத்திணைக்களம்
வட மாகாணசபை.

**பதிப்பு** :- டிசம்பர் 2016

**பிரதிகள்** :- 1000

**அச்சுப்பதிப்பு** :- வைரஸ் பிறிண்டேஸ்

# வடமாகாண கௌரவ ஆளுநரின் ஆசிச்செய்தி

**"பரராச சேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள்பதிப்புக்கு எனது ஆசிச்செய்தியை அனுப்புவதில் பேருவகையடைகிறேன்.

நூலின் மீள்பதிப்பு முயற்சி வெற்றிபெற இறைவனின் ஆசியை வேண்டுகிறேன்.

**"பரராசசேகரம்"** என்பது யாழ்ப்பாண பரராசசேகரன் மன்னனால் 12 மருத்துவர்களின் உதவியுடன் இயற்றப்பட்ட மருத்துவத் தமிழ் நூல் ஆகும் எனவும் பரராசசேகரன் என்ற பட்டப்பெயருடன் பல அரசர்கள் இருந்துள்ளனர் எனவும் இந்த நூல் 14 - 16 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியை சேர்ந்ததாகவும் இதன் நூல் 12000 செய்யுள்களால் அமைந்தது என்று கூறப்படினும் 8000 செய்யுள்களே அச்சில் வந்துள்ளன. என்பதையும், இந்த நூல் அகத்திய வைத்திய சிந்தாமணி, தந்வந்திரி வைத்திய சிந்தாமணி ஆகியவற்றைத் தழுவியே எழுந்தது என்றும் "பரராசசேகரம்" எனும் மருத்துவத் தமிழ் நூல் பற்றிய தகவல்களை வேறு தமிழ் அறிஞர் நூல்களின் மூலமாக பெறமுடிந்தது.

ஆகையினால் இத்தகைய மருத்துவப் பெறுமதியும் வரலாற்று விழுமியமும் நிறைந்த **"பரராசசேகரம்"** எனும் மருத்துவத் தமிழ் நூல் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றப்படுவதுடன் அதன் உள்ளடக்கமாகவுள்ள மருத்துவக்குறிப்புக்களும் விளக்கங்களும் சந்ததி சந்ததியாக கையளிக்கப்படுவதன் மூலமாக தமிழர் மருத்துவப் புலமை அனைத்து மக்களுக்கும் பயன்படவேண்டும். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள் பதிப்பு செய்வதன் நோக்கமும் அதுதான்.

மீள்பதிப்புப் பணியை பொறுப்பேற்று நிறைவேற்றும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தைப் பாராட்டி வாழ்த்துகிறேன். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூலின் மீள்பதிப்பு நூல்கள் மருத்துவர்களையும் மாணவர்களையும் அத்துறையில் அறிவை வளர்க்க விரும்பும் ஏனைய மக்களையும் சென்றடைந்து அவர்கள் பயனடையவேண்டும் எனவும் வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

நன்றி

றெஜினோல்ட் கூரே,
ஆளுநர்,
வடமாகாணம்.

## வடமாகாண கௌரவ முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் மன்னர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக பரராஜசேகரன் ஆட்சி புரிந்த காலத்தில் இயன் மருத்துவத்தின் மீது கொண்டுள்ள உவகையினால் பல்வேறு திக்குகளிலும் மருத்துவத்தில் சிறப்புற்று விளங்கிய மருத்துவப் புலமை மிக்க பண்டிதர்களை அழைத்து அவர்களின் மருத்துவக் குறிப்புக்களைப் பெற்று பன்னிரண்டாயிரம் பாடல்களுடன் பாடல் வடிவில் "**பரராசசேகரம்**" எனும் பெயரில் நூலொன்று உருவாக்கப்பட்டது. அவற்றை ஏழு பாகங்களாகத் தொகுத்து திரு.ஐ.பொன்னையா என்பவர் வெளியிட்டார். அவை சிதிலமடைந்து மேலதிக பிரதிகள் கைவசமின்றி அவற்றின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் இம் மருத்துவக் குறிப்புக்கள் அழிந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் அவற்றை மீள் பதிப்பு செய்ய முன்வந்திருக்கும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு எமது வாழ்த்துக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மேலைத்தேய மருத்துவத் துறைகளில் நாட்டம் கொண்ட எம்மவர்களில் பலர் இரசாயனக் குளிகைகளிலும், ஊசி மருந்துகளிலும் நாட்டம் கொண்டு கீழைத்தேய மருத்துவ முறைகளில் இருந்து விலகி மேலைத்தேய மருத்துவத்தை நாடிச் செல்கின்றனர். அதே தருணத்தில் மேலைத்தேயத்தில் வாழ்கின்ற பலர் கீழைத்தேய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுகின்ற மருந்துகள், எண்ணெய்கள் மற்றும் குடிநீர் போன்றவை எந்தவித பக்கவிளைவுகளும் அற்றதாக, நிரந்தர வைத்திய முறைமையாக பூரண வைத்திய முறையாகவும் இருப்பதைக் கண்ணுற்ற இந்தியா போன்ற நாடுகளை நோக்கி அவர்களின் உடல் உபாதைகளைப் போக்கவும் நீண்ட நொடிய நோய்களை குணப்படுத்தவும் படை எடுத்து வருகின்றார்கள்.

இந் நிலையில் கீழைத்தேயத்திற்கே உரித்தான பக்க விளைவுகள் அற்ற மருத்துவ முறைகளை அழியவிடாது பாதுகாத்து எமது அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. அந்த வகையில் மீள்பதிப்பு செய்யப்படுகின்ற இந்த 07பதிப்புக்களும் எமது எதிர்காலத்தின் அரும்பெரும் சொத்தாக அமையவேண்டும் என வாழ்த்தி இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாண சபை.

## வடமாகாண கௌரவ சுகாதார அமைச்சரின் ஆசிச்செய்தி

பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த **"பரராச சேகரம்"** எனும் வரலாற்றுப் பொக்கிசமான வைத்தியநூலை வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மீள்பதிப்பு செய்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னோர்களால் ஏட்டில் பாடல்களாக எழுதப்பட்ட இந்நூல் யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த திரு.ஐ.பொன்னையா அவர்களினால் ஏழு பாகங்களாக தொகுக்கப்பட்டு 1928 - 1936ம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்டாலும் அவற்றை மீள்பதிப்பு செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்தின் தேவையறிந்து இவற்றை மீளப்பதிப்பதற்கு முயற்சி மேற்கொண்ட வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் (திருமதி) சி.துரைரட்ணம் அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

மேலைத்தேய மருத்துவத்தின் மோகம் மக்களிடையே அதிகமாக இருந்தாலும் அதனை உருவாக்கிய மேலைத் தேயத்தவர்களே தற்போது சுதேச மருத்துவ முறைகளில் அதிக நாட்டம் காட்டுவது அதன் சிறப்புகளைக் கோடிட்டு காட்டுகின்றது.

மீள்பதிப்பு செய்யப்பட்ட இந்த புத்தகம் எமது சுதேச மருத்துவத்துறை மாணவர்களுக்கும், மக்களுக்கும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர்.பத்மநாதன் சத்தியலிங்கம்,
சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

# பிரதம செயலாளரின் ஆசிச் செய்தி

ஒரு காலத்தில் சுதேச மருத்துவத்துறையில் இந்தியாவுக்கு இணையாக மிகவும் பயனுறுதியும் விளையபயனும் மிக்கதான மருத்துவ சேவையை வழங்குவதில் யாழ்ப்பாணம் முன்னணியில் இருந்தது. ஆயுள்வேத மற்றும் மூலிகை மருத்துவத்தில் மிகவும் நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட யாழ்ப்பாண இராஜ்யத்தை அரசாட்சி புரிந்த பரராஜசேகர மன்னன் அவனது காலத்தில் பல்வேறு புலமை மிக்க வைத்தியர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த இந்த மருத்துவத்தை அழியவிடாது பாரம்பரியமாக நடைமுறைப்படுத்தும் நோக்கோடு 12,000 மருத்துவப் பாடல்கள் அடங்கிய ஏட்டுப்பிரதிகளை தனது காலத்தில் இருந்த மருத்துவ வியலாளர்களைக் கொண்டு ஆவணப்படுத்தினார்.

1928 - 1936 காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு.ஐ.பொன்னையா என்பவரால் ஏட்டுப்பிரதியாக இருந்த இம் மருத்துவக் குறிப்புப் பாடல்கள், ஏழு பாகங்களாகத் தொகுக்கப்பட்டு முதன் முதலாக நூல் மயமாக்கப்பட்டது. இந் நூலை ஆதாரமாகக் கொண்டே இன்றும் பாரம்பரிய சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவம் செய்து வருகின்றனர்.

இயற்கை மூலிகைகளோடு இணைந்த சித்த ஆயுர்வேத மருத்துவமானது தற்போது அனேக நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற இக் காலத்தில் எமக்கு அரும்பொக்கிஷமாகக் கிடைக்கப்பபெற்ற **“பரராசசேகரம்”** மருத்துவ நூலானது அழிந்து விடாதபடி மீண்டும் மீண்டும் மீள்பதிப்புக்குட்படுத்தி காத்து அடுத்து சந்ததியினருக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டுப்பாடு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பாரிய பொறுப்பாகும்.

சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற **“பரராசசேகரம்”** மீள்வெளியீட்டின் முயற்சி யானது காலத்தோடொட்டிய அத்தியாவசியமானதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதென்றாகும். இந்நூலின் மூலம் தமிழ்கூறு நல்லுலகெங்கும் பயன்பெற எல்லாம் வலல் இறைவன் துணை வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடமாகாண சபை

## செயலாளரின் வாழ்த்துரை

கலை பண்பாடுகளினால் சிறப்புற்ற யாழ்ப்பாண இராச்சியம் செழிப்புடனிருந்த பரராஜசேகர மன்னனின் ஆட்சியின்போது, அவன் முன்னிலையில் பல மருத்துவப் புலமையாளர்களைக் கொண்டு உருவாகியதே பரராசசேகரம் என்னும் பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த மருத்துவ நூலென வரலாற்றாளர்கள் கூறுவர்.

அன்று முதல் முறைசார் கல்வியூடாக மருத்துவம் போதிக்கப்படும் வரை மருத்தவத்தையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த மருத்துவப் பரம்பரையினர் பரராசசேகரத்தின் ஏட்டுப் பிரதிகளை தமது அரும்பெரும் சொத்தெனவும், பிரதான உசாத்துணையெனவும் கொண்டு பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர்.

ஏழாலை ஐ.பொன்னையா எனும் மருத்துவரின் அயராமுயற்சியின் பயனாக ஏழு பாகங்களாக எண்ணாயிரம் பாடல்களுடன் அசேற்றப்பட்ட நூலாக பரராசசேகரம் கடந்த நூற்றாண்டில் கிடைக்கப் பெற்றிருப்பினும் காலவோட்டத்தால் அவற்றிலேற்பட்ட சிதைவுகளினாலும், கிடைத்தற் கரியனவாயி ருப்பதாலும் அவற்றை மீள்பதிப்பு செய்து எதிர்காலத்திற்கும் கிடைக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வடமாகாண சுதெச மருத்துவ திணைக்களத்தின் அரியமுயற்சி பாராட்டுக்குரியதாகும்.

. ஏழுபாகங்களாக உள்ள வெவ்வேறு ரோகங்களிற்கான நிவாரணம் தொடர்பான இந்நூலில் 1ம் 2ம் 5ம் 6ம் 7ம் பாகங்கள் மீள்பதிப்பு செய்யப்படுகின்றன.

நவீன காலத்தின் தேவைக்கேற்ப இந்நூலின் பித்தரோகம் என்ற பகுதியை இணையத்தில் ஒரு நண்பர் பதிவேற்றியிருந்தமையைக் காணுகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த முயற்சியின் பலன்கள் எமது சந்ததியனருக்கு நன்மை பயப்பதாக என வாழ்த்தி நிற்கின்றேன்.

சி.திருவாகரன்
செயலாளர்.
சுகாதார சுதேச மருத்துவ நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.
வடமாகாணசபை

# மாகாண ஆணையாளரின் செய்தி

சித்த மருத்துவமானது "தமிழர் மருத்துவம்" எனவும் "தமிழர் பாரம்பரியம்" எனவும் போற்றப்படும் மருத்துவ முறையாகும். ஏனைய சுதேச மருத்துவ முறைகளைப் போலவே சித்த மருத்துவமானது தமிழர் வரலாற்றில் பிண்ணிப்பிணைந்திருப்பதை வரலாற்று நூல்கள் மூலம் தெரிந்து கொள்ள கூடியதாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரை இலங்கையை ஆண்ட மன்னர்கள் பலர் சிறந்த வைத்தியர்களாக இருந்ததை பல வரலாற்று நூல்கள் எடுத்தியம்பி உள்ளன. இவர்களுள் "செகராஜசேகர மன்னன்", "பரராஜசேகர மன்னன்" ஆகியோரது பெயர்கள் ஈழத்து சித்த மருத்துவ வரலாற்றில் முக்கியத்தவம் பெறுகின்றன. இவர்களது காலத்தில் சித்த மருத்துவமானது சிறப்புற்று இருந்தமைக்கு "பரராஜசேகரம், செகராஜசேகர வைத்தியம்" எனும் நூல்கள் சான்று பகர்கின்றன. இந்நூல்களில் குறிப்பிடப்படும் மருத்துவ முறைகள் எமது நாட்டிற்குரிய தனித்துவமான சித்த மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்டதாக கருதப்படுகிறது. மேலும் "பரராஜசேகரம்" எனும் நூலானது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களது பாட நூல்களில் ஒன்றாக அமையப்பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த வைத்திய நூல்களில், பல சிதிலமடைந்து அரகிப் போய் வருவது சித்த மருத்துவத்தின் அபிவிருத்திக்கும் ஒரு பாரிய சவாலாகவே காணப்படுகிறது. எனவே *1928 - 1936*ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த ஐ.பொன்னையா என்பவரால் தொகுக்கப்பட்ட "**பரராஜசேகரம்**" எனும் ஏழு பாகங்கள் கொண்ட நூல்களுள், எமக்கு கிடைக்கப் பெற்ற ஐந்து பாகங்கள், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் மீள் பதிப்பு செய்யப்படுகின்றன..

இந்த மீள் பதிப்பின் போது ஐ.பொன்னையா அவர்களால் குறிப்பிடப்பட்டிருந்த பிழைகள் திருத்தப்பட்டிருப்பதுடன் எழுத்துச் சீர்திருத்தமும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் இதுவரை "ஒன்பது விஷ ஆரூடம் - பத்மநாம அய்யர், "நாடி தர்ப்பனம்" சிதம்பரநாத வைத்தியர்" ஆகிய நூல்களை மீள் பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இந்த வரிசையில் பரராசசேகரத்தின் ஐந்து பாகங்களை வெளியிடுவதில் திணைக்களம் என்ற வகையிலும், சித்தமருத்துவர்கள் என்ற வகையிலும் நாம் பெருமை கொள்வதோடு இந் நூலை வெளியிடுவதற்காக தம்மிடம் இருந்த பிரதிகளை எமக்கு தந்துதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்தக் கொள்கின்றோம்.

எமது சித்த மருத்துவத்தைப் பேணி பாதுகாத்த அனைவருக்கும் இந் நூலை நாம் சமர்ப்பணம் செய்கின்றோம்.

டாக்டர்.(திருமதி).சி.துரைரட்ணம்,
மாகாண ஆணையாளர்,
சுதேச மருத்துவ திணைக்களம்,
வடமாகாண சபை.

யாழ்ப்பாண வைத்திய நூல் வெளியீடு 12

உ
சிவமயம்

# பரராசசேகரம்

## ஏழாம் பாகம்

மூலம், அதிகாரம், கிரகணி, கரப்பன், கிரந்தி,
குட்டரோக நிதானங்கள்

**பதிப்பாசிரியர்**
**ஏழாலை**
**ஐ.பொன்னையா**

**திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை**
**மல்லாகம்**
**தாதுளு மார்கழி மீ**
**1936**
**விலை ரூபா 1.50**

உரிமை பதிவுசெய்யப் பெற்றது.

# பரராசசேகரம்
## பதினேழாவது
## மூலரோக நிதானம்

ஆல முண்டருள் கண்டனாரரு ளாயுண்மா மறையில்
மூல ரோகங்களுங் குணங்களுங் குறிகளு மொழியிற்
சால வுள்ளிலும் புறத்துமொன் பதுவிதஞ் சாற்றும்
மேலு முள்ளிலோர் நாலும்பின் வெளியினி லைந்தே 1

### பிறமூலம் - 5

ஆன்ற மூலமைந் தாம்பிறத் தவைபெய ரறியில்
நான்ற தோர்மூளை வரட்சியு மாணிநற் கண்டி
தோன்றி டுங்குத மைந்ததாம் வெளியினிற் றோன்றா
ஏன்ற ரோகங்க ணாலின்பே ரியம்புவோ மினியே 2

### உள்மூலம் - 4

அணங்க னாய்குதை சிரேட்டியொன் றெக்கண்ட மொன்று
துணங்கு நீளுதி ரஞ்சொரி மூலமு மொன்று
தணந்திடாதிழி சலமொன்று மாகநா லென்பர்
குணங்கள் சாத்திய மசாத்திய மாவன குறியே 3

அறிந்தி டுள்ளூறு மெக்கண்ட மழிசல மிரண்டும்
கறண்கொள் சேற்பமு மிரத்தம்வீழ் மூலமுங் கரையும்
பிறந்த நிலைந்து மூலத்திற் பேசிய குதமும்
துறந்து சீவிழு மாணியுந் துரிசறா தென்னே 4

கறண்கொள் மூலமு முளையொடு கண்டியிம் மூன்றும்
அறிந்தி டிக்குணந் தீர்ந்திடுஞ் சாத்திய மாகும்
செறிந்து தான்செய்யுங் குணங்களுஞ் சிகிச்சைசெய் விதமும்
பிறிந் திடாதறிந் துணர்ந்துகொள் பேசுவோம் விதியே 5

**மூலரோகத்தின்ஏது**

மூலமே முதல தாகும் ரோகங்கண் முழுதுக் கெல்லாம்
மூலநோய் முடிவுங் காணான் ரோகத்து முதலுங் காணான்
மூலநோய்க் கேதுத் தானே மொழிந்திடிற் றந்தை தாயின்
மூலமே மூல ரோக மண்ணுளோ ரெவர்க்கு மாமே 6

மாறுகொள் நீரினாலு மிரத்தத்தால் வாயு வாலும்
விறுள கிருமி யாலு மிகுந்தசைச் சீயி னாலும்
மாறிடா வெப்பி னாலும் வருந்திடு சுரத்தி னாலும்
கூறிடு மந்தத் தாலு மூலநோய் கூடு மன்றே 7

**உள்மூலம் பிறமூலங்களின்**
**ஒற்றுமை வேற்றுமை**

உள்மூலம் பிறமூல மிரண்டு மொன்றா
யோதியதோர் குணமதனை யுரைப்பக் கேண்மின்
உள்மூல மல்லாமற் பிறத்தே யில்லை
யுறும்பிறத்தில் வந்ததனை யோராய் நீயும்
உள்மூலங் குண்டலிக்கு முள்ளே யாகு
மோதுமதன் கிழங்கதுவே மூல மாகும்
உள்மூல நாலாகும் பிறத்தி லைந்தா
யோதுமினிக் குணமடைவே யுரைப்பக் கேளே 8

**பிறமூலம் - 5ல்**
**1 - முளை மூலத்தின்குணம்**

இதில் வாதமும் பித்தமும் தொந்திக்கும்
புல்லுமபா னத்தூடு குதத்தின் மீதே
புழைவழியே கவராக நாலைந் தாறாய்க்
கல்லுமிரத் தம்வீழுங் கறைநீர் பாயுங்
கண்டிதமாய் மலஞ்சிக்கி யுதரம் விம்மும்
நல்லவியல் பால்வளருந் தாது நாச
நாவாளும் வெறுப்புண்டாங் கிறுகி றென்னும்
சொல்லிலிது வாதபித்த மூலமாகுந்
தோன்றிலிது சாத்தியமாஞ் சிகிச்சை செய்யே 9

**2 - வரள்மூலம்**

**(வாத மூலம்)**

சொல்லுபா னப்புறத்திற் சுற்றின் மீதே
தோன்றியது சுரிமுகத்தின் வாயே போன்று
கல்லெனவே கறணாகி யிரத்தங் காலுங்
கடுத்துளையுங் கைகால்க ளோய்ந்து காட்டும்
வல்லியரே தொப்புழின்கீழ்ச் சூழ வாங்கி
மலஞ்சிக்கி யடிவயிறு கனப்பு மாகும்
புல்லுமரிப் புடனுலர்ந்து கடின மாகும்
பொருந்துமிது சாத்தியமாம் புவியுள் ளோர்க்கே 10

**3 - கண்டி மூலம்**

**(வாதசேற்பனதொந்தம்)**

பொருந்தியமூ லப்புறத்திற் கண்டித் தோங்கிப்
புடைத்திடுமென் மேலுமது பூணே போல
இருந்ததனி லிரத்தம்விழுங் கறைநீர் பாயு
மிருகாலுங் கடுத்துளையு மிடுப்பு நோவாம்
அருந்துமச னஞ்செரியா தூதை விம்மு
மடிவயிறு வலித்துமலஞ் சிக்கி வீழும்
திருந்துகுணம் வாதசேற் பனமா மூலந்
தீருமிது சாத்தியமாந் தெரிந்து கொள்ளே 11

**4 - ஆணிமூலம்**

**(பித்தவாத தொந்தம்)**

மருவுமபா னப்புறத்தே மத்தம் பூப்போல்
மடிந்தெழுந்து மலநடுவே வரண்டு வீழும்
பெருகியசீ வழிம்புவிழு முதிரங் காலும்
பேசுதரம் விம்மிமிக வலியுண் டாகும்
பருகுமச னஞ்செரியா மந்த மான
பதார்த்தமது வுஞ்செரியா சோபம் பற்றும்
அரிவையரே பித்தமதில் வாத தொந்த
மானகுண மசாத்தியமா மறிந்து கொள்ளே 12

**5 - குதமூலம்**

**(பித்தசிலேற்பன தொந்தம்)**

பொன்னனையீ ரபானத்திற் புறத்தே தள்ளிப்
புடைபுடைத்துப் பிடிகந்தம் போல நான்று
துன்னுதிர வடிவாகிக் கழிச்ச லுண்டாய்த்
துரப்பிளைப்பு மேன்மூச்சோ டிரும லுண்டாய்ப்
பின்னுமது சீயிரத்தம் வழிம்பு வீழும்
பித்தசேற் பனதொந்த மூல மாகும்
உன்னியவ ருரைத்தபெயர் குதமா மூல
மோதிலசாத் தியமாகு முணர்ந்து கொள்ளே 13

**உள்மூலம் - 4 -ல்**

**1 - குதைசிரேட்டிமூலம்**

**(இதுவும் பித்தசிலேற்பன தொந்தம்)**

இயம்பியவுண் மூலத்திற் குதைசி ரேட்டி
யெனுமூல குணமதனை யியம்பக் கேண்மின்
தயங்கியதோர் வாயுவது தங்கிச் சிக்கித்
தறுகிமலங் கடுத்துளையுந் தாது நாசம்
நயம்பெறுசீ ரத்தம்விழும் வெளியிற் காணா
நாவரளுஞ் சோபமதி சாராமாகும்
வயங்கியவேல் விழியாரே பித்த சேற்ப
மருவுதொந்த மூலமசாத் தியமென் றாரே 14

**2 - எக்கண்டமூலம்**

**(பித்தமூலம்)**

அரம்பையதின் முகைபோல வுள்ளே நின்றே
யதன் முளைசற் றேதோன்றிக் கனப்பு மாகும்
நெருங்குமச னஞ்செரியா மந்த மாகி
நெஞ்செரித்துப் புளித்தேக்காய்க் கழிச்ச லாகும்
உரம்பெறவே யிருமலுட னிளைப்பு மாகு
மோதுபெய ரெக்கண்ட மூல மென்று
நிரம்பவுணர்ந் தாருரைத்தார் பித்த மூல
நேருமது வசாத்தியமா நிகழ்த்தி னாரே 15

### 3 - இரத்தமூலம்
### (சிலேற்பனவாத தொந்தம்)

பொங்கியமூ லத்துள்ளே பொரிந்து காந்திப்
புடைபுடைத்துப் பொருமலுற்றுக் குருதி காலும்
தங்குமல மூதைவிம்மு மிடுப்பு நோவாஞ்
சந்துகைகா லுளைந்துவளர் தாது நாசம்
அங்கமெங்குங் கனப்புண்டாய் வாதம் பற்று
மாமிரத்த முலமது சேற்ப வாதம்
சங்கையுறு சாத்தியமாஞ் சிகிச்சை செய்யத்
தக்கபெரி யோருரைத்த தகவிதாமே 16

### 4 - இழிசலமூலம்
### (சிலேற்பனமூலம்)

முற்றுமபா னத்துள்ளே முளைபோ லுந்தி
முளைத்துவழும் பெனக்கொடிபோற் சீயும் வீழ்ந்து
வற்றிவிடுந் தேகமது வரண்டு நாளு
மந்தமே பற்றி நிற்குந் தாது நாசம்
துற்றுமலஞ் சிக்கியடி வயிறு விம்மித்
தோன்றுமிரத் தமுஞ்சற்றே துள்ளி யாகச்
சற்றுமிது தீராது சேற்ப மூலந்
தானுமசாத் தியமென்று சாற்றி னாரே 17

இனி, இவ்வாறன்றி வாதபித்த கபங்களில் தனித்தனி ஒவ்வொன்றும் தொந்தத்தில் ஆறும், சன்னிபாதத்தில் ஒன்றும், இரத்தத்தில் மூன்றும் ஆகப் பதின்மூன்று வகையாகவும் மூல ரோகம் பிரிக்கப்பட்டிருக்கின்றது. தொந்தம் - இரண்டிரண்டு தோஷங்கள் தொந்திப்பது : சன்னிபாதம் - மூன்றும் தோஷங்களும் தொந்திப்பது, தொந்தித்தல் தோன்றும் ஆறையும் ஒன்றாகவும் இரத்தத்தில் தோன்றும் மூன்றையும் ஒன்றாகவும் வைத்து ஆறு என்று கணக்கிட்டனர். 18

## மூலரோகத்தொகுப்பு

கண்டிடு மூல மாறுங் கழறுவன் வாதத் தொன்று
மிண்டிடு பித்தத் தொன்று விளைந்திடு சேற்பத் தொன்று
மண்டிடு தொந்தத் தொன்று வகுத்திடு சன்னி யொன்று
விண்டிடு முதிரத் தொன்று விளம்பின ராறு பேதம் 19

## 1 – வாதமூலம்

வாதத்தின் மூல மாகில் வருந்திடுந் தினவுண் டாகும்
தாதற்று விடுப்புக் கைகால் சந்துதோள் பொருத்து நோவாம்
பேதித்து மலம்வ ரண்டு பிதிர்விடு மிரத்த மென்மேல்
வாதித்த வுதரம் விம்மி மந்தமுண் டாகுங் காணே 20

காணுற்ற மலந்து ரைக்குங் கடுத்திடு மபான வாயு
வீணுற்றுப் பறியு மேப்பம் விடுமரோ சிகமு மாகும்
மாணுற்ற முகந கங்கண் மலம்விழி கறுத்துக் காட்டும்
பேணுற்ற குணங்கள் வாத மூலமாய்ப் பேச லாமே 21

## 2 - பித்தமூலம்

பித்தத்தின் மூல மாகிற் பெருகவே கடுத்து நோவாம்
ஒத்ததோர் மேனி தானு முலர்ந்துமஞ் சணித்துக் காட்டும்
மெத்தவே வெதும்பு மாக மபானமும் விரிந்து மென்மேல்
அற்றிடுந் தாது தானு மக்குண மறிந்து கொள்ளே 22

கொண்டிடு வெப்புத் தாகங் கூடுநா வரட்சி வேர்வை
கண்டிடு மலமு நீராய்க் கருகிமஞ் சணித்துக் காட்டும்
விண்டிடு குணங்கள் பித்த மூலமா மென்று மேலோர்
பண்டுரை செய்த வண்ணம் பார்த்துநீ யறிந்து கொள்ளே 23

## 3 - சிலேற்பனமூலம்

சேற்பன மூல மாகிற் செய்குறி யதனைக் கேளாய்
வேற்றுடல் பட்டுத் தேகம் வற்றியே வெளுத்துக் காட்டும்
தோற்றிடு மிருமல் வாந்தி துரப்புட னிளைப்பு முண்டாம்
சாற்றிய மலத்தி னோடே சியல்விழுங் குணங்க டாமே 24

## 4 - தொந்தமூலம் - 6

### 1 - வாதபித்தமூலம்

வாத பித்த மூலமது செய்யுங் குணத்தை மானேகேள்
ஊதை மிகுத்தே பொருமலுமா யுள்ளங் கால்கை யெரிவாகும்
ஓது மசனஞ் செரியாம லுவாந்தி யுண்டா மலமுலரும்
தாது வற்றி மூலத்துட்டழல்போ லெரியுங் கண்டாயே 25

### 2 - வாதகிலேற்பனமூலம்

அறிந்திடும் வாத சேற்ப மடுத்திடு மூல மானாற்
செறிந்திடு மலமுஞ் சிக்கிச் சீயுட னுதிரம் வீழும்
பிறிந்திடக் குத்தி நோவாம் பினமட்டிக் குறுக்கிற் சுற்றும்
அறிந்திடு மூலந் தானு மசாத்திய மென்ன லாமே 26

### 3 - பித்தவாதமூலம்

பித்த வாத மூலமது செய்யுங் குணத்தைப் பேசக்கேள்
சுத்த மாய்நீர் மஞ்சளதாஞ் சுரமும் வாய்வும் பொருமலுமாய்க்
குத்து முடலெண்சாண் பொருத்துக் குறுக்குமுதுகந் தண்டுளையும்
பற்றுந் தாக மலம்வரளும் பகருங் குணங்கள் பார்த்தறியே 27

### 4 - பித்தசிலேற்பன மூலம்

பித்த சேற்ப மூலகுணம் பேசக் கேளாய் பெய்வளையே
வற்றுஞ் சரீர மிருமலுமாய் வயிறு வலித்து நெஞ்செரிக்கும்
கற்றுங் கறணாய் மூலத்துட் டுரப்பும் வாந்தி வேர்வையுமாம்
நித்தஞ் சீலு மிரத்தமும்போ மிந்தக் குணங்க ணினைந்தறியே 28

### 5 - சிலேற்பனவாதமூலம்

சொல்லுஞ் சேற்ப வாதமது தொந்தித் திருக்கு மூலகுணம்
புல்லு மூலத் துண்மலமு முலர்ந்து பொருமும் புகைபுகையும்
சில்லென் றடைக்கு மிருகாதுந் தேகம் வெளுக்கு மிருமலுமாம்
அல்லையனைய குழலாளே யறைந்த குணங்க ளாய்ந்தறியே 29

### 6 - சிலேற்பனபித்தமூலம்

சேற்ப பித்த மூலமது செய்யுங் குணத்தைச் செப்பக்கேள்
தோற்றுங் குதத்தின் புழைவழியே சியலு நீருந்தொடந்தோடும்
மாற்ற மாக விளைப்பிருமல் மண்டித் தாது மலம் வரளும்
ஆற்ற நாளு மிகவருத்து மறைந்த குணங்க ளாய்ந்தறியே 30

### 5 - சன்னிபாதமூலம்

அங்கமுழு தும்பரக்குங் கைகா லோயு
மதனிடையே குருதிவிழுங் காந்திக் குத்தும்
பங்கமுற வேர்வையுண்டா முதரம் விம்மும்
பரதாபந் தாகமிகுங் கண்டுங் காது
சங்கையறக் குருதிவிழு மூலந் தூயே
தழலெனவே கடுத்தெரிந்து மலமுஞ் சிக்கும்
துங்கமுறு திரிதோஷ தொந்த மூலந்
தொல்லுலகின் முனிவார்முன் சொன்ன வாறே 31

### இரத்தமூலம் - 3

### 1 - வரட்சிமூலம்

சுரத்தினாற் காய்ந்து நொந்தே யபானவாய் சுருங்கி நாளும்
இரத்தமே யெடுத்துக் கைகா லிடுப்புளைந் துறுப்பு நோவாய்
உரத்துறு பெலமுங் குன்றி யூதையுண் டாய்ம லத்தை
வருத்தமா யுலர்த்து மூல வாயுவின் குணமி தாமே 32

### 2 - மூலவாயு

வற்றி மலந்தீயு மந்திக்கு மேல்வெளுக்கும்
சற்று மிரைச்சல் தணியாது – முற்றுமிது
மூலமாம் வாயுவென முன்னோ ருரைத்தபடி
சீலமாக் காண்பார் தெளிந்து 33

### 3 -அதிசாரசுரமூலம்

அன்ன மறுக்கு மடிவயிறு நொந்துளையும்
துன்னு மலமுலருஞ் போபமாம் - மின்னே
குருதிவிழு மந்தமாங் கொள்ளுமதி சார
சுரமூல மென்றே துணி 34

மலத்தை யிறுக்கி மந்தித்து வரண்டே யிரத்த மலத்தில்விழும்
உலர்த்தி வருவ துண்மையிது வூடே வயிறு வலித்திருக்கும்
தலத்திற் காணா துண்மூலந் தசையாய் முளைக்கு மபானத்திற்
பெலத்தைக் குறைக்கும் வியாதியெனப் பெரியோர்
முன்னம்பேசினரே 35

சில பிரதிகளில் வேறும் மூலரோகங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றை கீழேகாண்க.

### 1 - உள்மூலம்

நடைபெறா வுண்மூ லத்தை நவிலுவன் கலைவல் லோரே
அடிவயி றுளைவுண்டாகி மாகி யதனுடன் மலமுஞ் சிக்கி
மிடையுறு வாயு மிஞ்சி விழுமலத் துடனே சோரி
அடைவிதை யாய்ந்து பின்ன ராம்பரி காரஞ் செய்யே 36

### 2 - பிறமூலம்

பிறமெழு மூல *மன்றிப் பிறப்படு மலங்க டுக்கும்
திறமிட முதுகு நெஞ்சு சேர்விலா வலியுண் டாகும்
மறமற வென்றி ரைந்தே யெச்சவாய் கடுக்கு மென்று
துறவற முனிவ ராய்ந்து சொற்றனர் குறித்துக் கொள்ளே 37

### 3 - ஆணிமூலம்

ஆணிமூ லத்தைக் கேளு மதுமல மிரத்தம் வீழிற்
பூணவே யிரைச்சல் கொள்ளும் பொருந்துதட் கொண்டு கீறிக்
காணுமே யுடல்வெ ளுக்குங் கடுப்பது மிருகால் முக்கால்
நாண்மலஞ் சிறுக வீழு மனல்நண்ணிற் கடுப்பு மாறும் 38

### 4 - பக்கமூலம்

உற்றபக்க மூல முடம்பு மிளைப்பாகும்
பற்றிமிகுங் கோபம் பகரக்கேள் - செற்றமுற
வந்தவிழி யீரென்றும் வட்டப் படவிருக்கும்
இந்தநோய்க் குள்ள வியல் 39

*அன்றி - மாறுபட்டு

### 5 - பவுந்திரமூலம்

பவுந்திர மூல மெச்ச வாய்க்குளா ணிகள்போற் பார்க்கும்
குவிந்திடு மலம்பு பூக்கை போலவே குணமுண் டாகும்
உவந்துளே யிழுத்துக் கொள்ளு மோய்விலக் காற்றுண் டாகும்
இவர்ந்துதான் வழிம்பு வீழ்ந்து மிகுந்திடு மின்னுங் கேளே 40

கேளுமுட் டணமி குத்தாற் கிளர்சத்தத் துடனே சோரி
வீழுமே வயிறு தானு மிகநருக் கெனவ லிக்கும்
நாளுமே நடந்தா லெச்ச வாய்நடுக் கசிவு கொள்ளும்
வாள்விழி மடநல் லாய்மேல் வலியதி கரிக்குங் காணே 41

### 6 - சீமூலம்

வந்தசீ மூலந் தானும் வயிற்றினாற் சீக்க ழிந்து
சந்துக்குட் புரைந்தே பொடிச் சடங்கச ரோகி போலாம்
சுந்தர விழிமஞ் சட்போற் றுலங்கவே காத டைக்கும்
சிந்துவெந் நீரிலன்றிச் செழும்புளி தாக மாமே 42

தாகித்துண் ணாக்கு லர்ந்து சந்ததி னாற்ற முண்டாய்
ஆகமும் வற்றுங் கைகா லசந்துசோர் வாகு நெஞ்சு
வேகித்தே யுலரு மன்றி யிளைப்புண்டா மென்று முன்னாள்
மாகத்து முனிவர் கூறும் வகையுணர்ந் தறிந்து கொள்ளே 43

### 7 - இரத்தமூலம்

தொப்புழும் வலித்து நொந்து துலங்கிட விரத்தம் வீழ்ந்தும்
அப்பொழு திரத்த மூல மறியவே வெளியிற் றள்ளும்
தப்பற மேனி வற்றித் தறுகிடா திளைப்புண் டாகும்
இப்படி யிரத்த மூல மென்றுதா னியம்ப லாமே 44

1. உள்மூலம் - அடிவயிறு உளைந்து வலிக்கும். மலம் சுத்தியாகாது. வாய்வு அதிகப்படும். மலத்தோடு இரத்தம் விழும்.
2. பிறமூலம் - மூலம் வெளியிற் புறப்படும். மலம் தகடுபோல் தட்டையாய் விழும். வயிறும் இடதுபக்க முதுகும் உளையும். எச்சவாய் தினவு கொள்ளும்.

3. ஆணி மூலம் - மலமும் இரத்தமும் விழும்போது இரைச்சல் கொண்டு விழும். எச்சவாயில் முள்ளுக்கொண்டு கீறினதுபோலிருக்கும் உடம்பு வெளுக்கும், நாலு மூன்று முறை மலம் சிறுகச்சிறுக விழும். அனல் காட்டினாற் கடுப்பமரும்.
4. பக்க மூலம் - முதுகு விலாப்பக்கம் இரையும், வயிறு கழியும் உடம்பிளைக்கும், கோபமதிகப்படும்.கண்வட்டமிட்டிருக்கும்.
5. பவுத்திர மூலம் - மலம் புழுக்கைபோல விழும். எச்சவாயுளையும். சுருங்கும் காற்றுப்பறியும். வழிம்பு விழும். உட்டணமதிகப்பட்டால் இரத்தம் விழும். வயிறு நருக்கு நருக்கென்று வலிக்கும். வழிநடந்தால் எச்சவாய் சிவந்து வலிக்கும்.
6. சீமூலம் - வயிற்றினாலே சீக்கொட்டும். வயிறு கழியும். உடம்பு கயவாட்சி போலே வற்றும். கண் பஞ்சுபோலாகி சந்துக்குள்ளே புரையோடும். மலம் நாற்றமதிகப்படும். நெஞ்சுமுற்றும் புண்ணாயுலரும்.

### சிகிச்சை
### கருணைக்கிழங்கு சூரணம்

கரட்டுக் கருணை கறிக்கருணை காறும் வனத்துப் பிரண்டைவேர்
நாட்டு மருளின் கிழங்குகொடு வேலி சிவந்த நாயுருவி
கோட்டஞ் சிறிய தேக்கிவைகள் கூட்டிச் சமனாய்ப்பொடிசெய்து
வாட்டும் வெந்நீர் தனில்வெருகி னடிதூள் கொள்ள மாறிடுமே
உப்புப்புளி தவிரவும். 45

### சிவதைவேர்ச் சூரணம்

சுத்திசெய்த சிவதைவேர் பலமும் பத்துச்
சுக்குமல்லி கடுக்காய்த்தோல் பலமி ரண்டு
சித்திபெறுந் தேவதரு வெள்ளைக் கோட்டஞ்
சிறுதேக்குப் பலமொன்று வகைக்குக் கூட்டிச்
சத்திபெற விடித்தரித்துக் காலை மாலை
தருதேனி லிரண்டுவெரு கடியின் வீதம்
பத்தியுட னுண்டுவர மூல மாறும்
பலதோஷ மலபந்தம் பாறு மன்றே 46

**சாரணைவேர்ச் சூரணம்**

தாணிச் சாரணை மரற்கிழங்கு சதுரப் பிரண்டை யதிற்கிழங்கு
நாணிப் புளித்த புளிநடலை நன்றாய் முளைத்த கொடுவேலி
பாணிக் கொண்டு பொடிசெய்து பழமோ ருடனே பருகிடுகில்
ஆணிக் கொண்ட மூலமெலா மப்போ சாந்த மாய்விடுமே 47

**காட்டுக்கருணைச் சூரணம்**

காட்டிற் சேனை பதினாறு கடிய வேலி யதிற்பாதி
நாட்டிற் சுக்கு மவ்வளவு நல்ல கனக னதிற்பாதி
ஆட்டி யரைத்துச் சர்க்கரையி லளவாய்க் குழப்பித் தின்பீரேல்
மூட்டிலெழுந்த மூலமெலா முறையிட் டோடுஞ் சொன்னோமே 48

**சுக்குச் சூரணம்**

காரெட் சுக்குக் கடுகொடு திப்பிலி
நேரொக் கக்கொடு நித்தமுந் தேனுணில்
ஊரொக் கக்கெடுத் துண்டவன் சுற்றம்போல்
வேரொக் கக்கெடு மூல வியாதியே 49

**திரிபலைச்சூரணம்**

தான்றி நெல்லி தகுகடுக் காயெனும்
மூன்றி னோடு முதிர்ந்த சிவதைவேர்
ஆன்ற நாலு மவைசம னாகத்தூள்
ஏன்ற வெந்நீ ரிடமூல மேகுமே 50

**வச்சிரவல்லிச்சூரணம்**

பிரண்டை சாரடை புளிகடலை பேசுங் கருணை புனக்கருணை
திருந்தும் வெருகு முசலிமரல் சேரு மூலங் கொடுவேலி
முருந்து நகையாய் திரிகடுகு மூன்று பலைவெள் ளுள்ளிமஞ்சள்
பொருந்து மரிசி வகையாறும் பொருவுங் காந்தஞ் சிறுமூலம் 51

ஓமம் வசம்பு சீரியர்க ளுடனே விளங்க முறுமதுரம்
தாமஞ் சேருங் குழலாரே தகரங் கோட்டஞ் செண்பகப்பூ
ஆம மறுக்கு முரோகணியு மரிய சிவதை கச்சோலம்
நாமுன் புகன்ற வட்டவர்க்க கறைகொள் லகிரி வகைதானே 52

தானே கடுகு பெருங்குரும்பை சார்பே ரீஞ்சு முந்திரிகை
ஊனே யுறுரோ சினைபூர முரிய மாஞ்சில் சதகுப்பை
கானே யுற்ற கண்டில்வெண்ணெய் கடக சிங்கி யதிவிடயம்
தேனே யறுகு சிவன்வேம்பு திப்பிலி மூல மிவைசமனே 55

நேரா யடைவே யிடிபொடித்து நேரே சீனி யதிற்றூவிக்
காரே யனைய குழன்மடவீர் கருதுந் தேனெய் யிஞ்சியுறு
நீரே யிவையில் நாற்பதுநாள் நேர மிரண்டு மருந்திடுகில்
சீரா யுப்புப் புளிகைப்புச் சேர நீக்கிக் கொள்வதுவே 56

வேறுண் மூலம் பிறமூல மிகுந்த விரைச்ச லதிசாரம்
ஊறு மிரத்தஞ் சியலொடுக்க ளுண்டா லறாத புளிதேப்பம்
மீறுங் கடுப்பு வயிற்றுளைவு மிகுத்த வாய்வுப் பொருமலிவை
மாறும் படியே யாராய்ந்து மலையின் முனிவன் வகுத்தனனே 57

### வச்சிரவல்லிரசாயனம்

நன்னிலத்தில் வச்சிரவல்லி கருணை சேனை
நாடுமருள் புளிநறளை வேருஞ் சேம்பு
துன்னுநில வாகைவேர் *நறுக்கு மூலஞ்
சொல்லிலொன்று பலம்பத்துத் தூளே செய்து
இன்னமுங்கேள் திரிகடுகு பலையுங் காய
மிருசீரம் வசம்பரத்தை யேல மோமம்
மன்னுசத குப்பையொடு கோட்டங் குக்கில்
வாய்விளங்கங் கடுகுவெந் தயம தாமே 58

ஆமேநற் காரமைந்து சார மைந்து
மைந்துப்புப் பத்திரிமூன் றரிசி யாறு
பூமேவு சிவதைகடு ரோணி மாஞ்சில்
புகல்மதுரந் தேவதரு கண்டில் வெண்ணெய்
நாமேசொல் செங்காந்தஞ் சாதி யைந்து
நாடுசரக் கிடையொன்று முக்க ழஞ்சு
தாமேநீ யிடிபொடித்துச் சீனி தானுஞ்
சரிகூட்டி மேன்மருந்து சாற்றக் கேளே 59

*அறுகுமூலம் என்றும்

கேளாய்கற் கண்டுவெண்ணெ யீஞ்சு முந்த்ரி
கிளரரம்பைக் கனியுமா தளையி னீரும்
வாளாரும் விழிமடவாய் விரவிக் கொண்டு
மருவுமிர சாயனமோர் மண்ட லங்கொள்
தூளாகு மூலமொன்பா னோயு மன்றிச்
சொல்லியவா யுத்திரட்சி குன்மஞ் சூரை
கோளாரு முதிரநோய் சவுசி கெண்டை
குடகரிவா யுப்பொருமல் குலைந்து போமே 60

**வச்சிரவல்லி லேகியம்**

வச்சிரவல் லிச்சாறு வெருகின் சாறு
மரற்சாறு வெள்ளறுகு சேம்பின் சாறு
துச்சபொடு தலைச்சாறு மேனிச் சாறு
துலங்குகையான் சாரணையிற் றோன்றுஞ் சாறு
மிச்சமுறா தோரொன்று நாழி கூட்டி
மெல்லியரே யிவைவேர்கள் விரைந்தொ டொன்றாய்
அச்சமற விட்டளவி மேலுங் கற்க
மதிமதுர மேலமாஞ் சரத்தை யாமே 61

ஆமேமுன் ரசாயனத்துக் குரைத்த கற்க
மதிலொன்றும் வழுவாம லடைவாய்க் கூட்டி
மாமோக முடனிடித்த பொடியுஞ் சேர்த்து
வற்றவெரி சுவறியது பதமே யானாற்
பூமேவு மதுவுடனே யிஞ்சி நீரும்
பொருவுநறு நெய்யிவைகள் பொருந்த விட்டுக்
காமேவு குழலாய்மண் டலமே யுண்ணக்
கருதரிய மூலமொன்பான் கரைந்து போமே 62

**வச்சிரவல்லி வடகம்**

மூலபஞ்ச வர்க்கமுறு மூலந் தானு
முன் னுரைத்த கற்கவகை யிதினுங் கூட்டிச்
சாலவே பிரண்டைநீ ரதனிற் றூவித்
தறுசாம லேவடகம் வில்லை செய்து
மேலுமொரு மண்டலங்கொள் புளியுப் பன்றி
மேவரிய மூலமொன்பா னாச மாகும்
காலனைநேர் விழியாரே வாயுக் குன்மங்
கனத்தெழுந்த வாயுவெலாங் கடிதிற் போமே 63

**வச்சிரவல்லி லேகியம் - 2**

வச்சிரவல் லிச்சாறு பிரமிச் சாறு
மரற்கிழங்கு புளிநடலை யாடா தோடை
மெச்சியதூதிலையுமதன் பழமு மாக
விளம்பியவிச் சாறுவகை யுழக்குக் கூட்டி
நச்சுமிள நீர்கருப்பஞ் சாறு நெய்பால்
நாழிவகைக் குக்கூட்டிக் கற்கங் கேண்மின்
பச்சையுறு பெருமருந்து கண்டங் காரி
பகர்தூது சிறியகாஞ் சோன்றி யாமே 64

ஆமினுங்கேள் கான்றைசா ரணையி னோடே
யசுவகந்தி வேர்வகைக்குக் கழஞ்சு வீதம்
தாமின்னும் வெண்காரம் விடயஞ் சோலந்
தருகாய மேலமதி மதுரமிந்துப்
போமின்னுங் காராம்புதிரி கடுகு நற்சீ
ருறுகருஞ்சீ ரகம்வைக்குக் கழஞ்ச தாகும்
பூமன்னு கடுக்காயிற் பொடியுழக்குப்
புகலிரும்பின் பொடியுமரைப் பலமாக் கூட்டே 65

கூட்டிநெய்தேன் லேகியமாய்ச் செய்து கொண்டு
குறையாதோர் மண்டலத்துக் கந்தி சந்தி
நாட்டமுறு பாக்களவா யுண்டு நூலி
னவின் றபடி புளியுப்புக் கசப்பு
வாட்டமுறு முள்மூலம் பிறமூ லங்கள் நீக்க
மருவுமூ லாக்கினியி லிரும லீழை
கோட்டமுறு நீர்க்கடுப்பு ரத்த மாரி
குறையாத வரட்சி முதற் குறையு மன்றே 66

**வச்சிரவல்லிலேகியம் - 3**

குறைவதனுக் கின்னமொரு லேகி யங்கேள்
கூறுமரல் புளிநடலை பிரண்டை யோடு
செறிகருணை யிவைகிழங்கு பலமொவ் வொன்று
சேருமிந்து வெடியுப்புக் கல்லி னுப்பு
மறுவறுவெண் காரமொடு சவரின் கார
மருவுநவச் சாரமதி விடய மோமம்
நிறைமருவு பெருங்காய மமரர் தாரு
நிகழ்குலக்காய் திரிகடுகு கோட்ட மேலம் 67

ஏலமுட னிலவங்கஞ் செண்ப கப்பூ
விருசீர மதிமதுரங் கடுகு ரோணி
சீலமுறு கடுகுலுவா விரும்பின் றூளுஞ்
சிறக்கவொரு கழஞ்சுபசுப் பாலா லாட்டித்
தாலமுறு கட்டியுட னெய்யுந் தேனுந்
தாங்கூட்டி லேகியமாய்ச் செய்து கொண்டு
நாலுபத்து நாட்கொள்ள மூல ரோக
நவின் றவகை கிராணியுட னீங்கு மன்றே 68

### கருணைக்கிழங்கு

இன்னமொரு குழம்புபுனக் கருணை மூல
மியல்பிரண்டை புளிநடலை மருளின் மூலம்
சொன்னபடி பலம்பத்து வகைக்குக் கூட்டித்
தூணிநீ ரெட்டொன்றா யவித்தி றுத்து
மன்னுநிலப் பனைமுத்தம் பிரமி யோடு
வகுத்தகறிக் கருணையிவை பலமொவ் வொன்று
பின்னமற வேயுலர்த்தி யிடித்துத் தூளாய்ப்
பேசுபனை வெல்லமது பலமோ ராறே 69

வெல்லமதைக் கஷாயத்திற் கரைத்துக் காய்ச்சி
மேலுமதிற் றூள் தூவிக் கற்கங் கேண்மின்
நல்லேல மிலவங்க மிளகு சுக்கு
நாடுவிழால் வெட்பாலை யோமங் கோட்டம்
சொல்லுமிரு சீர்கடுக்காய் நெல்லி தான்றி
சுகமுதவுங் கராம்புசத குப்பை யோடு
வெல்லுமத்தித் திப்பிலியுங் கழஞ்சி ரண்டு
மிகுமெண்ணெய் நெய்தேனுங் குழம்பு கொள்ளே 70

### நந்தாதிகிருதம்

நத்தை சிப்பி யூமைச்சி நவிலும் பனறி வெள்ளாடு
இத்தின் தசைக ளவித்தநீ ரிதிலே நறுநெய் யிரண்டுபடி
முத்தக் காசு நன்னாரி முன்னே கூறு மிலாமிச்சுக்
கொத்தான் கொழுஞ்சி குறுற்தொட்டி குமரி வேருஞ் சீதேவி 71

சேரச் சமன்கொ ளெட்டொன்றாய்ச் சேர்க்குங் கற்கந் திரிகடுகு
ஆருங் கோட்ட மதிமதுர மரிய சாதி யைந்துடனே
நாரும் பச்சை யதிவிடய நாகம் பூச்செண் பகப்பூவும்
ஏர்முப் பத்ரி வாய்விளங்க மின்னு மருந்து விளம்பக்கேள் 72

விளம்பு முந்திரி பேரிஞ்சு விடய மோமங் கர்ப்பூரம்
வழங்கு மவினுஞ் சரிகூட்டி வடித்துப் பதத்தில் மண்டலங்கொள்
களங்க மறுக்கு மூலமொன்பான் கடிய கிராணி யதிசாரம்
துளங்கு மிதுவே நந்தாதி கிருத மென்று பேர்சொல்லே 73

**ஈருள்ளிநெய் (இரத்தமூலத்துக்கு)**

ஈரவுள்ளி தனைத்துவைத்துக் குறுணிச் சாறு
மிந்தளவு பசுவின்பால் நெய்யு நாழி
சேரவதி மதுரமொரு பலமு மாகுஞ்
செப்பியகோட் டம்பலமு மொன்று கூட்டி
ஒரளவா யரைத்ததனைக் கரைத்துக் காய்ச்சி
யெண்பதத்தில் வடித்துநெய்யை யுள்ளே கொள்ள
ஆருமுடல் தனிற்சேரு மிரத்த மூல
மகன் றுவிடு மெனமுனிவ னறைந்தா னன்றே 74

**நாயுருவிநெய்**

சிவந்திடுநா யுருவியினிற் சமூலந் தானுஞ்
சேருமிரு பான்பலத்தை யிடித்து நன்றாய்
உவந்திடுநீ ரொருதூணி யெட்டொன் றாக்கி
யுறப்பிழிந்து பசுவினெய் யிரண்டு கொத்து
நிவந்திடுபால் நாலுபடி கலந்து கற்க
நிகழ்த்தக்கேள் கொடுவேலி வேரின் பட்டை
இவர்ந்திடுநற் சிவதைவே ராயிற் பட்டை
யேற்றதொரு புன்னைவேர் புங்கின் பட்டை 75

பட்டையுறு தான் றியினற் பட்டை யோடு
பகர்முசுட்டை வேர்பிரண்டை மருட்கி ழங்கு
நட்டமறு புளிநறளைக் கிழங்கு மல்லால்
நவில்காட்டுக் கருணையின் கிழங்கு தானும்
திட்டமுறு காஞ்சொறிவே ரல்லிப் பூண்டு
சேங்கொட்டை திரிகடுகு பலைகண் மூன்று
கட்டமறு மிந்துப்பு வெட்டி வேருங்
கஸ்தூரி மஞ்சளுடன் வாளங் கூட்டே 76

கூட்டுகின்ற வாளமதைச் சுத்தி நன்றாய்க்
குறையாமற் செய்துவகை கழஞ்சு மூன்று
நாட்டமுடன் பசுப்பாலா லாட்டிச் சேர்த்து
நாலுநா ளூறியபின் வடித்துக் கொண்டு
வாட்டமறு திரிபலையின் விதைகள் நேராய்
வாங்கியொரு சட்டியிலே யிட்டு மூடிக்
கூட்டுசந்தில் மண்சீலை செய்து லர்த்தி
குறையாதே தீயெரித்து நீற தாக்கே 77

ஆக்கியதூள் வெருகடியி னளவ தாக
வறைந்தநெய்யி லிருகழஞ்சு கூட்டி யுண்ணப்
போக்குமது குருதிவிழு மூல மல்லாற்
புறமூல முள்மூலஞ் சீயின் மூலம்
தாக்குகின்ற வரள்மூல மிரத்த மாரி
தழல்மூலம் முளைமூலந் தவிர்ந்து போகும்
ஆக்கியளித் தழித்துயிருக் கலக்கண் டீர்க்கு
மாறுமுக வேலனரு ளாமென் றோரே 78

**பன்றிநெய் (உள்மூலத்துக்கு)**

சாரணைவேர் முதியசத்திச்சார ணையப்
பைக்கிழங்கு மானையினிற் றடிச்சல் மூலம்
வீறுவெரு கங்கிழங்கு காட்டிலுற்ற
வியன்கருணைக் கிழங்குலர்த்திப் பலமொவ்வொன்றாம்
கூறுகொற்றான் பிரண்டையிவை யிரண்டுஞ் சாறு

கொண்டிலவம் பிசினுமரைப் பலம தாகும்
தேறுகொத்த மலிகோட்ட மீர ரத்தை
திப்பிலிமூ லம்மிளகு சேரத்தேடே 79

தேடுபெருங் காயமொடு கரிய சீரஞ்
சிறந்திடுசா திக்காயுஞ் சேரு மற்றை
ஏடவிழும் பத்திரியும் வேர்ச ரக்கா
மிவையரைத்துப் பன்றிநெய்யி லிணங்க விட்டுக்
கூடுகிற மெழுகுபதந் தனிலி றக்கிக்
கொள்ளவுண்மூ லபெலன் குறையு மின்னும்
நீடிவெளிப் புறப்படுகி னெருஞ்சி யோடு
நீளுமிரும் புலிமணக்கின் கொழுந்து மூன்றும் 80

மூன்று கொழுந்து முதுவா மணக்கின்
தோன்று நெய்யிற் சூழ வரைத்து
ஆன்ற மூலத்தி லார மூன்றுநாள்
என்று கட்டக் கரைந்திடு மென்னே 81

**கருங்கோழிப்பற்பம்**

கரும்பெட்டைக் கோழியது குடலு ரோமங்
கால்போக்கி யதன்வயிற்றிற் கற்கங் கேண்மின்
திருந்தமுன்பு சொல்லியநற் கிழங்கின் வர்க்கந்
திரிகடுகு சாதியைந்து சிவதை ரோணி
பொருந்துமிரு சீர்விடய மோமங் காந்தம்
பொரிகார நவச்சாரம் வெள்ளை யுள்ளி
கருங்கடுகு வெந்தயம்வெட் பால்வி ளங்கங்
காயமுடன் சவர்க்காரங் கழஞ்சு மூன்றே 82

பொருந்தவிடி பொடித்தனந்தன் வயிற்று ளிட்டுப்
பூவையரே யோர்பாண்ட மதனி னுள்ளே
திருந்திய *தூதுளைச்சாறு மவுரிச் சாறுஞ்

*காணச்சாறு முவரிநீரும் என்றும்.

செறியவிட்டுச் சீலையினால் வேடு கட்டி
மருங்குறவே மருந்தைவைத்து மேலு மூடி
வற்றிவெரி யுலர்த்தியந்த மருந்தை வாங்கி
அருந்திடுமோர் மண்டலமும் புளியுப் பின்றி
யருங்கழிச்சல் நவமூல மகன்று போமே 83

**வச்சிரவல்லிச் சூரணம்**

பிரண்டைவேர் புளிநடலைக் கிழங்கு கொட்டி
பேசுவெரு கங்கிழங்கு சிவனார் வேம்பு
திரண்டகறிக் கருணைபுனக் கருணை யல்லாற்
செங்கழுநீர் தனிற்கிழங்கு முசலி மூலம்
வெருண்டவிழி யிருண்டகுழன் மடநல் லாரே
வெள்ளறுகு முந்திரிகை பேரீஞ் செல்லாம்
வரண்டவெயில தனிலுலர்த்தித் தூளே செய்து
மற்றிதிலே காந்தமதி விடய மஞ்சள் 84

திரிகடுகு கண்டில்வெண்ணெய் கடுகு ரோணி
தேவதரு வெண்கோட்டங் கடக சிங்கி
வருமுலுவா வெட்பாலை விழால்தற் கோலம்
வசுவாசி கச்சோல முலுவாப் பச்சை
கரியவகி லசமோத மேல மல்லி
கராம்புகுலக் காய்வாசி வெள்ளை யுள்ளி
சரிசமனா யுலர்த்தியிடி பொடியாய் முன்னர்ச்
சாற்றியதூளுடன் கலந்து நெய்தே னிஞ்சி 85

இஞ்சி சீனி யிவற்றிலோர் மண்டலம்
செஞ்ச வேயுணச் சேரும் வெருகடி
அஞ்சு நாலென் றறைந்திடு மூலநோய்
அஞ்சி யோடும் புளியுப் பகற்றிடே 86

**வெட்டுப்பெருமாள் சூரணம்**

மாதளை கோவை யத்தி வளருமா விரையே வில்வம்
தாதளை பருத்தி யாத்தி தக்கவேழ் பிஞ்சு தானும்
போதவே யுலர்த்தி நன்றா யிடித்திடு பொடியி னோடே
ஓதுசீ ரேல மாஞ்சி லுறுமில வங்க மாமே 87

இலங்குரோ சினைகர்ப் பூர மினியதோர் முத்தக் காசு
நலம்பெறு மதுரந் தார நாகணங் கல்நார் பச்சை
துலங்கபின் சாதியைந்து மடவிகச் சோலங் கஞ்சா
புலம்பெறச் சமனாய்க் கொண்டேயிடிபொடி பகர்தேனுண்ணே 88

உண்ணவே மூல மொன்பா னுள்ளுளை கடுப்பி னோடு
திண்ணமா யிரத்தம் வீழ்தல் சியல்வழும் பிவைக டீரும்
மண்ணுளோ ளெவர்க்கும் வந்த நீர்க்கடுப் பதுவுந் தீரும்
அண்ணலா ருரைத்த வுண்மை யாயுரு வேதமாமே 89

### மூலவிரேசனம்

மூலவிரே சனந்தனக்கு மருந்து கேளாய்
முதியசா திலிங்கமுட னிரசஞ் சுக்குச்
சீலமுறு திப்பிலிநன் மிளகே மிளகே ரண்டஞ்
சிறந்தபருப் புடனேவெண் காரந் தானும்
கோலமுட னோரொன்று கழஞ்சு வாளக்
கொட்டையுமோ ரேழுவா ழையின்பூச் சாற்றால்
வேல்விழியா யரைத்திதனைச் சட்டி யிட்டு
மேலுமொரு சட்டியைமல் லாத்தி மூடே 90

மூடியசட் டியிற்சந்திற் சீலைமண் தான்
முழுவதுமே செய்தபின்பு சட்டி மேலே
நீடியநீ ரினைவார்த்துச் சாம மொன்று
நின்றுநெருப் பெரியெரித்தாற் பற்ப மாகும்
கூடியதோர் குன்றியிடை யுள்ளே கொள்ளிற்
குறித்துரைத்த மூலமைந்துங் குணமர மென்றே
ஆடியதா ளானுதவுங் கதிரை வேல
னகத்தியனுக் குரைத்தவவு டதமி தாமே 91

### நாறுகரந்தையெண்ணெய்

உண்ணுமிதற் கின்னுமொரு முறைகேள் வெண்கா
யுள்ளியொரு பிடிநாறு கரந்தை தானும்
திண்ணியவோர் பிடிநன்றா யரைத்துக் கொண்டு

திரளவெடுத் தொருசிறங்கை யாம ணக்கின்
எண்ணெய் தனிற் கரைத்தெடுத்து வடித்துக் காசி
னிடையுள்ளே கொண்டுவரின் மூலந்தன்னில்
நண்ணியிடும் வியாதிபெல வீனந் தானு
நாடாது நாலாறு நாளுண் பீரே 92

### சிற்றாமுட்டியெண்ணெய்

சிற்றமட்டி பேரமட்டி பொன்னாங் காணி
சிவன்வேப்பு நீர்முள்ளி பூலா மூலம்
உற்றகடுக் காய்பிரண்டை சாய வேரு
முரைத்தகரு முருக்கியோ ரிலையின் பத்மம்
மற்றுமினி நீர்வள்ளி யுடன்காற் றோட்டி
வருசிவைக ளிளநீர்நாற் பங்கி லிட்டு
வற்றவெரி பிழிந்தெள்ளி லெண்ணெய் தானு
மருவவிரு படி கூட்டிக் கற்கங் கேளே 93

கொள்ளுநற்சீ ரதிமதுரங் கோட்ட மேலங்
குலவுமில வங்கமர மஞ்சள் தேவர்
தள்ளரிய தாருவிவை கழஞ்சு கூட்டித்
தரும்பதத்தில் வடித்துக்கா சிடையுட் கொள்ள
விள்ளரிய மூலமொன்பான் தீரு மென்று
விளம்பினார் தென்கதிரை வேலன் பாதம்
உள்ளமதிற் கொண்டுபொ தியத்தில் வாழு
முயர்தவத்துக் குறியமுனி யுவந்து தானே 94

### மாவிலங்கை யெண்ணெய்

மாவிலங்கை தனிற்பட்டை கொழுஞ்சிப் பட்டை
வன்னிதனிற் பட்டையிவை சமனாக் கொண்டு
பூவிலங்கு கோழியினிற் றசையு மொக்கப்
.புகலுமே ரண்டவெண்ணெ யெள்ளி லெண்ணெய்
கோவிலங்கு நறுநெய்யுஞ் சமனாய்க் கொண்டு
கொதிப்பித்துக் குடித்திடவே மூலத் துள்ள
நோவிலங்கு முளைவீழு மென்று முன்னோர்
நுவன்றனர்சண் முகவேல னருளி னாலே 95

**சதாவேரி யெண்ணெய்**

தண்ணீர்விட் டான் கிழங்கு சீந்திற் தண்டு
தாமரைமூ லங்காணி தாழை விழுது
மண்ணிலுறு தகரைகையா னொடுவல் லாரை
மாநிலத்திற் சிற்றமட்டி யிருவேல் மிச்சந்
தண்ணாரு நற்குமரி கீழ்காய் நெல்லி
சாறொன்று நாழியுட னெண்ணெய் நாழி
கண்ணாரு மாவின்பா லிளநீ ரோடு
கலந்திடுவை நெல்லியுறு கனியின் சாறே 96

சாற்றக்கேள் கற்கவகை சாதி யைந்து
தகரங்குங் குமப்பூநற் சடாமாஞ் சோடு
போற்றுமதி மதுரமுடன் றேவ தாரம்
புழுகுசட்ட நெரியரிசி சினையும் பூரம்
ஏற்றகரி யேலமிலவங்கங் குப்பை
யினியகிளி யூறலிவை கழஞ்சி ரண்டு
மாற்றமுறா தேயிடித்துப் பொடிய தாக
வாங்கியரைத் துக்கரைத்து வற்றக் காய்ச்சே 97

காய்ச்சியது மெழுகுபத மான வாறே
கடுகவடி முழுகிடுவை கடிய மூலம்
தீச்செறியும் பிரமேகஞ் சோம ரோகந்
தீராத வத்திசுர வரட்சி தீரும்
காய்ச்சலுறு சலக்கழிச்ச லீழை காசங்
கண்ணோவு நாசிரத்தங் கபால வாயு
ஒச்சமுடன் நீருமென முன்னோர் கூறு
முண்மையென வாயுள்மறை யுரைத்த வாறே 98

**காரம்**

கூட்டுமருந் தெருக்கலைபின் காம்பு மூன்று
குலவுவிர லளவுமது மத்தின் கம்பு
வாட்டமற வுலர்ந்து சுட்டுச் சாம்பலாக்கி
வாய்ந்திடமுக் கழஞ்சிரண்டு தானுங் கூட்டிச்

சூட்டியம்மி தனில்நடத்திச் செப்பில் வைத்துச்
சொல்லியவிம் மருந்து தனைச் செய்யும் போது
தேட்டமுறு மபானத்தின் முலைப்பா லோடு
திருந்துபசு வெண்ணெ புஞ்சா ரித்துக் கொள்ளே 99

கொள்ளுமிந்தக் காரத்தை யிருமுறைக்கு மேலே
கொண்டுதட விப்பின்னும் பிரமாணங் கையிற்
தெள்ளுதிரு நீறளவு கொண்டதனிற் சுற்றித்
தினமூன்றில் முலைப்பாலும் பசுவெண்ணெய் தானும்
முள்ளனைய மூலத்தி னுட்புறத்திற் சுற்றி
மூன்றுநா ளிப்படியே காரமதை வைத்துக்
கள்ளமறு முன்மத்த மிலையாவி னெய்யிற்
கருதியே யக்கினியில் வாட்டியே கட்டே 100

கட்டியபின் மூன்றாநாட் குப்பைக் கீரை
கருதியபூ மத்திலையும் விழுது நெய்யிற்
கொட்டியது குழைத்தாறு கட்டி யேழு
குறித்ததின மளவினிலுந் தண்ணீர் காட்டி
அட்டிலுறக் கால்கசியவெச் செனவே வாக்கி
லபானவா யிற்புறத்தே தண்ணீர் விட்டுச்
கட்டியநற் சோறெருமைத் தயிரி னோடு
சொல்லியவா ழைப்பழமுஞ் சாரித்துக் கட்டே 101

கட்டவிழு மளவுமந்த மருந்துவைத்த முதலாய்க்
காய்ந்த தண்ணீர் தனைக்கொண்டு கால்முகங்கள் கழுவி
மொட்டவிழு மூலந்தான் விழுந்ததனிற் பின்பு
முதிர்ந்தசிறு கீரைவேர் நிலக்குமுழின் வேரும்
மட்டவிழுஞ் சிறுநெருஞ்சி யிலைபூத விருக்க
மருவியமோ தகங்கருசீர் சிவந்தசந்தங் கூட்டிப்
பொட்டெனவே வடித்தவெண்ணெ யிருகழஞ்ச கொள்ளப்
புறத்தினிலும் பூசியுள்ளிற் சீராய்த்தூள் போடே 102

**இதுவும்காரம்**

கெவுரியுடன் றுரிசுதுத்தஞ் சீனக் காரங்
கிளர்சங்கு முடிதாரஞ் சுண்ணாம் புக்கல்
நவையறுசீர் காரமைந்து சாரந் தானு
நாடியொரு கழஞ்சுகொண்டே யெருக்கம் பாலால்
இவையரைத்து வட்டாக்கி யோட்டி லேவைத்
தெரியிட்டு நுணுக்கியது வெண்ணெய் கூட்டிக்
குவையுற்ற முளைமூல மதனின் மீதே
குறித்துவைப்பை பணத்தளவு கூறக் கேளே 103

வெள்ளெருக்கு நாரதனாற் சரடே யாக்கி
விளம்பியலம் மருந்ததனை மேலே தீற்றி
உள்ளகுத மளவுகண்டு மேலே சுற்றி
யுறுசரடு மூன்றுநாட் பகிர்ந்து கட்டி
நள்ளனைய தயிர்ச்சோறு மெழுநாட் கட்டி
நாலுமுளை யதுவிழுந்து நாச மானாற்
கள்ளவிழுங் குழலாரே நறுநெய் விட்டுக்
கைவிரலாற் சுற்றிடுவை கனப்புப் போமே 104

**இரட்சை**

நாகமா முனியு ரைத்த நமற்காரி மூன்றி னாலே
தோகையே குதத்தின் மேலுஞ் சுழித்திடு முந்திக் கீழும்
பாகமாம் விலாவி ரண்டும் பிடரிரு பதத்தின் மேலும்
மோகியா தறிவு செய்ய முனிவர்முன் மொழிந்த தாமே 105

**அபானசுத்தி**

நித்தியங் காலை மாலை நீர்மல வாதை போக்கிச்
சுத்தமாய்ப் பின்னி டக்கைத் தற்சனி விரலாற் சொல்லில்
உற்றதோ ராவினெய்யை யூட்டியே மூலத் துள்ளே
குற்றமற் றிடமாய்ச் சுற்ற மூலநோய் குறையு மன்றே 106

திரண்டிடு மலமும் போகுஞ் சிக்கிய வாயு போகும்
அருண்டிடு மந்தம் போகு மாற்றிடு மருந்து மேற்கும்
சுருண்டிடு வாய்வி னோடு சொல்லிய குன்மம் போகும்
மருண்டிடா திதனைச் செய்ய மலைமுனி வகுத்தா னன்றே 107

**மூலக்கடுப்புக்குப்புகை**

போற்றுமிலாமிச்சின் வேரும்புழுங்கற்றவிட்டோடெலிப்புழுக்கை
சாற்று முரோம மீருள்ளிச் சருகு விரவி யெரிமீது
நாற்றி மூலத் துட்புகைக்க நருக்கு மெரிவு கடுப்புளைவு
தோற்றி யிடாது மறைந்துவிடு மெனவே முனிவர் சொன்னாரே 108

**இரத்தமூலத்துக்குப்புகை**

சந்தனம் பச்சை யேலத் தக்கவெள் ளாட்டின் கண்டம்
முந்திய முத்தக் காசு விளாம்பிசின் வெள்வேல் வெட்பால்
இந்தனம் பருத்திக் கம்பா லெரியிடும் பொடியைத் தூவித்
தொந்தமா மேதிக் கொம்புஞ் சுகம்பெற வதனிற் கூட்டி
முந்திய புகையைக் காட்டக் குருதியா மூலம் போகும் 109

**மூலவிரணத்துக்குப்புகை**

தலைமயிர் மஞ்ஞைத் தூவல் தக்கதோர் மேதிக் கோடு
சொலியகம் பளியுங் கோழித் தூவலுங்காயஞ் சுக்கு
நலிவுறா வசம்பு நிம்ப நல்விசை புகையே நாடி
மெலியுறா முறையிற் காட்ட மூலநோய் விரைந்து போமே 110

**ஆவிகாட்ட**

பிரண்டைச்சா றதனில் மேதிச் சாணியைப் பிசைந்து கொண்டு
உரம்பெற வெரித்த பின்னர் வளையவே யுண்மூ லத்துட்
புரண்டிடும் வாயுத் தானும் புக்கிய மலமும் போகும்
மருண்டிடா திதனைச் செய்ய மூலத்துண் மலமும் போமே 111

**வாதமூலம் பித்தமூலங்கட்கு ஆவிகாட்ட**

கோசலத்திற் புளியிலையை விரவிக் கொண்டு
கொதிக்கவெந்த வாவியது குதத்தின் மீதே
மாசறவே காட்டிடுகில் வாத மூல
மருவியிடும் வாயுக்கள் ஈநச மாகும்
பேசுமிள நீரில்வல் லாரை யிட்டுப்
பின்விரவி யவித்தாவி தகையக் காட்டில்
மோசமுறு பித்தநோய் மூலம் போக்கு
முழங்கிவிழுங் குருதியறு மொழியுங் காலே 112

## சிலேற்பனமூலந்தொந்தமூலங்கட்கு ஆவிகாட்ட

கூவியகீழ் காய்நெல்லி காடி நீரிற்
கொதிக்கவைத்த வாவியது குதத்திற் காட்ட
மேவியசேற் பனமூலஞ் சோகை மூலம்
விலகுமுட்டைப் பாசியதை யாவி நீரிற்
தாவியவித் தேயதனை யாவி காட்டச்
சகலதொந்த மூலமாத் தரியா தேகும்
காவியங்கண் மடமானே யிதனைச் செய்வீர்
காசினியி லுண்மையெனக் கருது வோர்க்கே *113*

## எட்பாகு

சாற்றியவெள் ளொருபடியை விளக்கி நன்றாத்
தகுபொன்னாங் காணிச்சாற் றொருநா ளூறி
ஆற்றவுமே யுலர்த்தியபின் கையான் சாறு
மரியவெலு மிச்சையினிற் புளியா வின்பால்
போற்றியிவை தனிலொவ்வோர் தினந்தா னுறிப்
புகன்றபடி யுலர்த்தியபின் கற்சங் கேண்மின்
தேற்றமுறு வெண்கோட்ட மதுர மோமந்
திப்பிலிநல் ளிருசீரங் கராம்பு வாசி *114*

வாசியுட னேகுலக்காய் சீந்திற் றண்டு
வருமுத்தக் கரசுவெட்பா லிலாமிச் சம்வேர்
மாசறவே யொருகழஞ்சு வகைக்கீ ருள்ளி
வழுத்தியவாட் டிறைச்சிவகைக் கொருசி றங்கை
பேசியநல் லாவரையி னிலைபூப் பட்டை
பெருகாம லொருகழஞ்சு பசுவி லுற்ற
தேசுபெறு நெய்கழஞ்சு காடி தன்னிற்
சேர்கருணை கறிக்கருணை கழஞ்சு மூன்றே *115*

ஏயுமிவை தரைப்பொடித்து மருந்திற் பாதி
யிற்சிவதை வேர்ப்பொடிமுக் கழஞ்சு கூட்டி
ஆயுமுறை காலையினிற் கொள்க மற்றை
யம்மருந்து மாலைக்கா மறைந்த நோய்கள்
பாயிரத்த மூலமுடன் முளைமூ லங்கள்
பலமூலம் வாயுபிர மியமே யாதி
சீயிலுறு மூலமுடன் சூலைக் கட்டுந்
தீருமென மாமுனிவர் செப்பி னாரே *116*

## உறட்டி

பச்சரிசிமா, கோடைக்கிழங்கு, பழத்தேங்காய்ப்பூ அரைத்து உறட்டிசுட்டுத் தின்னவும்.

## களி

பிரண்டைச்சாற்றிலே கறுப்பு நெல்லரிசிமாக் களிகிண்டி நல்லெண்ணெயிற் றோய்த்துத்தின்னவும்.

## குந்துருக்கப்பிரயோகம்

வெள்ளைக்குந்துருக்கம் பொடிசெய்து வெந்நீரிலிட்டுநெய்யும் நல்லெல்லெண்ணையும் சிறுகவிட்டுக்கலக்க வெண்ணெய் போற்றிரளும் தினம் மூன்று வேளையுண்ணப் பிறப்பட்ட மூலம் உள்வாங்கும்.

## மூலவாயு வயிற்றில் அடசி முட்டானால்

ஆமணக்கெண்ணெயில் ஈருள்ளியரிந்து போட்டுக் காய்ச்சி முடக்கொற்றானிலையவித்துப் பிழிந்த சாறுவிட்டுத் தாளிதம்பண்ணிக்கொடுக்க முட்டு அடசல் மாறும்.

## மூலக்கடுப்புக்கு

ஒரு சட்டியில் காற்படி தயிர்விட்டு அதிலே காற்படிவேர்க் கொம்புமாக்கூட்டி வற்றக்காய்ச்சினாற் களியாகும். அதை அம்மியிலிட்டு நன்றாயரைத்து மறுபடி சட்டியிலிட்டு வறுத்துத் தூளாக்கி முன்போற் றயிர்விட்டுக் காய்ச்சியரைத்து வறுக்கவும். இப்படி ஐந்துமுறை எழுமுறை செய்து பற்பமாக்கி எருமைத்தயிரிற் கொடுக்க மூலக்கடுப்ப உடனே மாறும்.

## பத்தியவகை

காடை யுடும்பு கவுதாரி கருதுங் கோழி யூர்ப்பன்றி
பேடை நடையாய் வெள்ளாடு பேசு முயலும் வெள்ளெலியும்
நாடூர்க் குருவி சிவல்நெய்மீன் நாளி லருந்தும் பத்தியங்கள்
கூடா வாறும் பொருந்துவது மிவைதங் குணத்தைக் கூறுவனே 117

நெய்பால் தயிர்மோர் மரக்கறியு நேரா யருந்தி லருந்தலாம்
மையார் குழலாய் வகுத்துரைப்பன் மந்த மான வாதத்தால்
எய்யா மூலங் குதந்தோன்றி லியம்புந் தயிர்மோ ரிவையாகா
ஐயாம் மூலங் குதந்தோன்றி லாநெய் யான்பா லாகுமன்றே 118

மந்தமா மூலத் தோர்க்கு மந்தமா மிசங்க ளாகா
வெந்ததோர் பித்த மூல மேவிடின் மந்த மேற்கும்
தொந்தமா மூலத் தோர்க்குச் சொல்லிய வொன்று மேரா
இந்தநோய் தொந்தங் கண்டே பத்திய மியம்பு வோமே 119

தூதுளை கரணை சேனை சொல்லிய நவமூ லங்கள்
ஓதிய பிரண்டை வற்றல் துவரையின் பருப்பு நீரும்
சாதிவெள் ளாடு பன்றி மூலநோய் தகுதிக் கெல்லாம்
ஆதியான் முன்பு சொன்ன பத்திய மருந்து மாறே 120

மூலரோகநிதானம் முற்றிற்று.

# பரராசசேகரம்
## பதினெட்டாவது
## அதிசாரரோகநிதானம்.

### அதிசாரரோகத்தொகுப்பு
விதிமேவு மாயுள்வேத வகைமீதி லதிசார விதமே தெனில்
கதிதாவி வருவாத கனலோடு கபமோடு சுரசோரியும்
புதைசோக குணதோஷ பொருமூல பிரமேக புகல்வாயுவும்
அதிசூலை வகைகுன்ம வதிசார மீராறி னடைவாகுமே 1

### இவற்றில் அசாத்தியம் - 7 சாத்தியம் - 5
உரைவாத கபசோரி யொடுதோஷம் விஷசோக முறுமூலமும்
சதிமேவு மதிசார மிவையேழு மொழியாத சவிகேடதாம்
மதிமேவு முகமாது கனலோடு சுரகுன்ம மறுவாயுவும்
கொதிசூலை யிவைதீரு மெனவாயுண் மறையோது குறியாகுமே 2

## அதிசா, ரோக நிதானம்
### அசாத்தியம் - 7
*1* – வாத அதிசாரம், *2* – சேற்பன அதிசாரம், *3* - இரத்த அதிசாரம், *4* – சன்னிபாத அதிசாரம், *5* – வீக்க அதிசாரம், *6* - மூல அதிசாரம், *7* – பிரமேக அதிசாரம்.

### சாத்தியம் - 5
*1*- பித்த அதிசாரம், *2*-சுர அதிசாரம், *3*- குன்மஅதிசாரம், *4*- வாயு அதிசாரம், *5*- சூலையதிசாரம்.

### அசாத்தியம் - 7ல்
### 1- வாத அதிசாரம்
வாதக் கழிச்சற் குணங்கேளாய் வயிறு பொருமி மந்திக்கும்
சேதப் படவே யெண்சாணுந் திமிர்த்துக் குத்திக் கடுத்துளையும்
ஏதப் படவே யரைச்சோறு விழுமே குடலு மிகவிரையும்
தாதுச் சயமா யுணவுசெலா சாற்றுங் குணங்க ளசாத்தியமே 3

### 2- சேற்பன அதிசாரம்

சேற்பக்கழிச்சற்குணங்கேளாய்தேனேதொண்டைசெறுத்திளைக்கும்
காற்பா விரண்டுங் குளிர்ந்திருக்கும் கண்ணுந்தூங்குமுகம்
வெளுக்கும்
நீர்ப்போற் கழியுங் கொடிவீழு நின்றே யாகந் தளர்வாகும்
வேற்போல் விழியாய் சேற்பம்விழும் விக்க லெடுக்கு மீளாதே 4

### 3- இரத்த அதிசாரம்

இரத்தக் கழிச்சற் குணங்கேளா யிரையுங் கடுக்குந்தொப்புழ்நோம்
வருத்து மிரத்த மாறாது வயிறு மூதி மந்திக்கும்
பெருத்த நரம்பு விறைவாகும் பேசி வயிறு நொந்துளையும்
சுரத்தில் மூர்ச்சை யுண்டாகுஞ் சொல்லி லிதுவு மசாத்தியமே 5

### 4- சன்னிபாத அதிசாரம்

சன்னி பாத வதிசார மத்தின் குணத்தைச் சாற்றக்கேள்
முன்னேநாடிமூன் றுமொன்றாய்மோகம்பெருத்துக்கழிச்சலுண்டாம்
அன்னஞ் செல்லா நாவரளு மாக நடுக்குஞ் செவிகேளா
துன்னுஞ் சேற்பம் வயிறழியுந்தோன்றுங்குணங்களசாத்தியமே 6

### 5- வீக்க அதிசாரம்

வீக்கக் கழிச்சற் குணஞ்செய்யும் விதத்தைக் கேளாய் மெல்லி
யலே, போக்கும் வயிறு மென்மேலும் பொருமு முளையு முவாந்
திக்கும், தேக்க மிகுந்தே யரைச்சோறு வீழுந் தியங்கு முடம்
பெங்கும், வாக்குந் தடுமா றிடுமென்மேல் வளரும் விக்க லசாத்
தியமே 7

### 6- மூல அதிசாரம்

மேவு மூல வதிசாரக் குணத்தைக் கேளு மெல்லியலே
தாவும் வயிறு பொருமலுமாந் தண்ணீர் தவிக்கும் வயிறூதும்
நாவுங் குளிருஞ் சுரமூர்ச்சை நையக் குத்திக் கடுப்புண்டாம்
பாவுங் குணங்க ளசாத்தியமாம் பாங்கா யறிந்து கொள்வீரே 8

### 7- பிரமேக அதிசாரம்

பிரமே கத்தா லுறுங்கழிச்சற் குணத்தைக்கேளும்பெய்வளையே
அறவே கழியும் வயிறூது மன்னஞ் செல்லா தாகமுமாம்
நிறையே யன்றிக் குறைந்திருக்கு நேரே மூச்சை மிகவிம்மும்
மறுநீர் விடுங்கான் மலங்கழியு மானே யிதுவு மசாத்தியமே 9

### சாத்தியம் 5-ல்

### 1- பித்த அதிசாரம்

மானே யுடம்பு மஞ்சணித்து மந்த மிகுந்து பசியின்றித்
தேனேயு தரமபொருமலுமாஞ்செரித்தே யெரித்துக்கழிச்சலுமாம்
ஊனே யுருகும் புலால்நாறு மோங்கா ளிக்கு மேப்பமுமாம்
பேனே தலைவிட் டூர்ந்துவரும் பித்தக் கழிச்சற் குணந்தானே 10

### 2- சுரஅதிசாரம்

உடம்புநொந் துதரம் விம்மி யூதையு மிகுந்து குத்தி
விடம்படு சுரமென் மேலும் விடாமலே கழிச்ச லுண்டாம்
தடங்கணு முகமும் வேறாய்த் தாகமுந் தாப முண்டாம்
மடந்தையே சுரத்தால் வந்த கழிச்சலின் வகையி தாமே 11

### 3- *குன்ம அதிசாரம் -

குன்ம மெட்டி னதிசாரஞ் செய்யுங் குணத்தைக் கூறக்கேள்
வன்ம மாக வயிறூதும் வலிக்கு மிரையு மந்திக்கும்
சன்மம் வீழும் வயிறழியுஞ் சற்றுச் சற்றே மலங்கழியும்
அன்னஞ் செல்லா தாகமிகு மதுவு மசாத்திய மாமென்பர் 12

### 4- வாயு அதிசாரம்

குடலுருண் டிருமி நொந்து குறுகினில் விலாவிற் குத்தி
உடல்சவி கெட்டுக் கைகா லோய்ந்துளைந் துதரம் விம்மிப்
பிடியன்னம் பருக வொட்டா பெருகுசோ றறாமை நின்று
அடியுறு கால்கை யோயு மதிசார வாயு வாமே 13

*இது அசாத்தியமென்று சிலபிரதிகளில்

**5- சூலையதிசாரம்**

பொருத்துளைந் துதரம் விம்மிப் பொருமியே கழிச்ச லுண்டாம்
விருப்புட னசனஞ் செல்லா மேனியுங் கருகிக் காட்டும்
பெருத்தரைச் சோறு வீழு நிணம்பிசைந் ததுவே போலாம்
தரித்திடுஞ் சூலை யாலே தொந்தித்த கழிச்சல் தானே 14

**அசீரணக்கழிச்சல்**

புளித்துநெஞ் செரித்து வாந்தி பொருமலு முழலை யுண்டாய்க்
குளுத்திநீர் தன்னைத் தேடுங் குளிர்ந்திடு மேனி யெல்லாம்
ஒளித்திடு நாடி தானு முடலினிற் கடுப்புண் டாகும்
தளிர்த்திடுங் குழலி னாளே யசீரணக் கழிச்சல் தானே 15

உண்டசோ றறாமை நின்றே யுளைப்பொடு வாயுக் கொண்டு
தொண்டையுங் குளிர்ந்து கூசிச் சோர்வுறக் கழிச்ச லாகி
உண்டிடு மருந்து தானு முவாந்தியே யெடுக்கு மாகிற்
கண்டது வேறொன் றல்லக் கடகட கழிச்சல் மானே 16

**விசூழி**

அனலென வெரிந்து மேனி யபானமுங் கடுத்து நீர்போற்
புனலது தாக மிஞ்சிப் பொருந்திடச் சத்தி விக்கல்
கனவெனப் பிதற்றுஞ் சன்னி காயமுங் கருகிக் காணும்
வினவியே புளிப்புத் தேடும் விசூழியின் குணமி தாமே 17

**சிகிச்சை**

**குடிநீர்-கடுப்புக்கு**

மலைதாங்கி முத்தக்கா சத்திப் பட்டை
மிருவியநீர்ப் பூலாவேர் நாவற் பட்டை
இலைதாங்கு மாதுளையின் கொழுந்தும் பிஞ்சு
மிருவேலி யிலாமிச்சு மாம்பூ வேலம்
தலைதாங்கு மதிவிடயஞ் சீர மோமந்
தவறாம லிவையெல்லாஞ் சமனாக் கூட்டிக்
கலைதாங்க விடித்ததூள் காய்ச்சிக் கொள்ளக்
கழிச்சலதி சாரத்திற் கடுப்பும் போமே 18

### அசீரணக்கழிச்சலுக்கு

ஒருபலம் வசம்பை யுற்றிடக் கருக்கி
இருபலந் நீரினி லெட்டொன் றாக்கித்
திருவெனுங் குழலாய் தேனோ டுண்ணப்
பொருமலு மசீரணம் போய்விடுந் தானே 19

குளமொடு சுண்ணச் சீலைச் சாம்பலுஞ் சமன தாக
இளவெநீர் தன்னி னோடே யியல்புறக் கரைத்து வைத்துக்
தெளிவுறு நீரை வாங்கிச் செலுத்திடு வார்த மக்கு
வளியுறு பொருமல் தானும் வற்றிடும் விசூழி போகும் 20

### அதிசாரக்குடிநீர்

வட்டத் திருப்பி கூவிளைவேர் மன்னும் பட்டை சுக்கினொடு
வெட்டு முத்தக் காசதுவு மிகவே கூட்டி யிருநாழி
அட்ட தண்ணீர் தானுழக்கி லரிசித் திப்பிலிப் பொடிதேனும்
இட்ட முடனே குடித்திடுகி லதிசா ரங்க ளிர்ந்திடுமே 21

தென்னம் பாளை மாதளைவேர் செய்ய கருவா ழையிற்பூவும்
வன்ன முத்தக் காசினுடன் வாகாய் நருக்கி யிருநாழி
உன்னு நீர்விட் டுழக்காக வுவந்து காய்ச்சிக் குடித்திடுகிற்
பன்னு மிரத்த வதிசாரம் பலவு மாறிப் போய்விடுமே 22

### உட்டணக்கழிச்சலுக்கு

செய்ய கோட்ட மதிமதுரஞ் சிறிய விலாமிச் சிருவேலி
பொய்யா முத்தஞ் செண்பகப்பூப் போற்றுமிளநீர்நெற்பொரியும்
மெய்யாய்ப் பாதி யுறக்காய்ச்சி விரைய விறுத்துக் குடிப்பீரேற்
பொய்யா முனிவருரைப்படி யேபோமுட்டணத்தின் கழிச்சலதே 23

### பித்தக்கழிச்சலுக்கு

பங்கம் பாளை வேர்க்கொம்பு பருத்த முத்த மிருவேலி
அங்கஞ் சொறியுங்காஞ்சொ றிவேரவைகள் சமனாயேயிடித்துப்
பங்கப் படாம லெட்டொன்றாய்ப் பருகத் தேனு முடன்கூட்டிப்
பொங்குந் தனத்து மடமானே போகும் பித்தக் கழிச்சலதே 24

## சிறுவர் முதல் சகலருக்கும் பொதுக்குடிநீர்

நாவற் பட்டை யதன் றுளிரு நவிலு மாலின் முகிழதுவும்
தாவு மிலாமிச் சீர்முட்டி தகுநன் னாரி வட்டுவேர்
பாவுந் தூது வேரிலைகாய் பகரீ ருள்ளி யதிமதுரம்
நாவுக் கினிய முந்திரிகை நவில்பே ரிஞ்சு தேவதரு 25

தருவார் தேற்றா விதையுடனே சாரும் விடயங் குறாசானி
உருவா ரோம மிருசீர முயர்ந்த சுக்குத் திப்பிலியும்
திருவார் கடுகு ரோகணியுஞ் சேர்த்துச் சமனா யவித்திறுத்துப்
பருகீர் மாறாக் கழிச்சலெலாம் பாறு முழலை தாகமுமே 26

## தாடிமச்சூரணம்

வில்வமோ டாத்தியத்தி கோவை பன்னம்
விளம்புமா தளையிவற்றின் பிஞ்சி னோடே
சொல்லரிய நறையைந்து வெறியு மைந்து
துவர்ச்சிகைவெண் குந்துருக்கந் தூப மட்டு
வல்லமாங் கொட்டைபிஞ்சு கருவேல் வெள்வேள்
வளர்விளாச் செழுங்கொன்றை மானே யீதில்
நல்லபிசி னபின்விடய நாரி முத்த
நவில்மிச்சுச் சீதேவி பொன்மு சுட்டை 27

வேருடனே திரிபலையும் விளங்க மாஞ்சில்
வெந்தயம்பஞ் சவன் பழுக்காய் வெட்பூ லாவேர்
பாருலவு கந்தமுட னரிசி யாறு
பாரங்கி கடுகிவதை பன்னை சீனக்
காரமல்லி ரோகணிமுக் கடுகு பாலை
கருதரத்தை பத்திரிமூன் றிவைக ளெல்லாம்
நேர்பெறவே யிடித்தபொடி தேன்னெய் யிஞ்சி
நீரிலுண நீங்கியிடும் வியாதி கேளே 28

கேளாய் பலவா மதிசாரங் கிளரு மிருமல் சுரவிருமல்
வாளே யனைய கண்மடவீர் வாயுப் பித்த மிரத்தபித்தம்
கேளார் மூலக் கடுப்புளைவு குடலி லிரைச்சல் பொருமுதலும்
தூளா யோடுந் தாடிமத்தின் சூர்ண மென்றே பேர்சொல்லே 29

**அசீரணக்கழிச்சலுக்கது**
**பிரண்டைச்சூரணம்**

பிரண்டையின் றண்டு மெருக்கலம் பழுப்பும்
பேசுநாய்க் கடுகுமிந் துப்பு
வரண்டிடு சுக்கு மிளகுதிப் பிலியும்
வருமிரு சீரக மோமம்
திரண்டிடு முலுவா வேலநற் கராம்பு
சேர்குலக் காயுடன் கடுகும்
இருண்டிடு குழலா யுறுசவர்க் கார
மிவைசம னிடித்துண நன்றே 30

**அடைகுளிகை**

சாதிக்காய் நல்லதொரு சாதிலிங்க மிந்துப்பு
நீதிக் கராம்பு நிகழ்நாவி-பாதிக்கா
தூமத்தை தன்விதையு முற்றவில வம்பிசினும்
காமுற்ற சந்தங் கழற்கொடிக்காய் - தாமொத்
திவைசமனாய்க் கூட்டி யியலத்திப் பட்டை
தவவிடித்துக் கொண்ட தகு சாற்றை – உவகையுடன்
இட்டரைத்துக் குன்றி யிடையுருட்டி கற்குளிகை
திட்டமுடன் றூதுவளை சேர்குடிநீர் - பட்டபடி
அந்தக் கஷாயத்தி லன்புடனே கொண்டுவர
இந்தவனு பானமன்றி யின்னங்கேள் - சந்ததமும்
ஆயி லதுபட்டை யாகும்வட டத்திருப்பி
சேய பெருமரத்தின் சேர்பட்டை – நேயக்
கொடுவேலி முத்தங்கொள் காசுகா வேளை
கடுவேர் மருந்துகற் றாழை – கொடுவாவெற்
புத்தாங்கி பூலாப் புகல்மா துளையிவைவேர்
சித்திபெற வேசமனாய்ச் சேர்த்து – நத்துங்

கடைமருந்து சாதிக்காய் கண்ட வபினும்
விடயமில வம்பிசின்மாங் கொட்டை – தடையாங்
கழற்கொடி யின்பருப்புக் கானில்வரட் பூலா
விழற்சுக்குத் தண்மிளகு திப்பில் - வழக்காம்
புளியங்கொட் டைத்தோல் புகல்குடசப் பாலை
அளிகற்றா ழம்பூவா மோமம் - தெளிவாம்
வரட்சுண்டி தண்மதுர மன்னுங் கராம்பு
தருகாசுக் கட்டி சமனாய் - விரகுறவே
கொண்டிடித்து நற்பொடியாய்க் கூறிய வம்மருந்தில்
வண்டேய் குழலாய் மருவியே – சுண்டைக்காய்
போலத் துவர்க்குடிநீர் தன்னிற் புகட்டிடவே
மூலக் கடுப்பு முதிர்கழிச்சல் - சால
அதிசார முள்ளதெலா மாங்ககலு மென்று
மதிசேர் முனியுரைத்த வாறு 31

**வாயுக்கழிச்சலுக்கு-வன்னிகர்ப்பஉண்டை**

சீரேல மிலவங்கப் பட்டை பத்ரி
செவியந்திப் பிலிமூலங் கொத்த மல்லி
பாராருந் திரிகடுகு குலக்காய் தாளிச
பத்ரியவி நிலவினுறு பிசின்பன் மூன்றும்
நேராகப் பொடிசெய்து கண்டெ டைக்கு
நிகழ்கஞ்சாப் பொடிகூட்டிக் கலந்த ரைத்துக்
கூராருஞ் சர்க்கரையி லுண்டை பண்ணிக்
கொண்டிடவா யுக்கழிச்சல் குணமா மன்றே 32

**சாதிலிங்கமாத்திரை**

நிறைந்திடுநற் சாதிலிங்கம் பச்சை நாவி
நிகழ்சுக்குத் திப்பில்குலக் காய்க ராம்பு
சிறந்திடுநன் மத்தைவிதை சமன தாகச்
சேர்த்திடித்த தூள்பாதி யபினுங் கூட்டிப்
பறைந்திடுகோ ரக்கர்தருஞ் சாற்றா லாட்டிப்
பயறளவா யுருட்டிநெய்தே னிஞ்சிச் சாற்றில்
அறைந்திடுமுற் குடிநீரிற் கொடுக்க நீங்கா
வதிசாரங் கிராணிமுத லகலு மன்றே 33

## இரத்தக்கழிச்சலுக்கு
## வெட்டுமாரன் குளிகை

முத்தமில வம்பிசின் விளாம்பிசின் முருங்கை
மோதியவெள் வேல்கரிய வேல்பிசினு மோமம்
கொத்தலர் விளங்கம்விட யஞ்சிறிய மூலங்
கோட்டமொடு செண்ப மலர் நற்புளி விதைத்தோல்
.....றமறு நல்லவினு மந்தரிசி குப்பை
கூவிளையின் மாதுளையி னக்கி புறந்தோல்
...றுவறு தேனிலரை கண்டையள வுண்ணச்
சாருறு மிரத்தவதி சாரமது பேமே 34

## சர்வகழிச்சலுக்கும்
## அபின்மாத்திரை

மத்தங் காயினுறு விதையைப் போக்கி
யுள்ளேநற் சாதிக்காய்ப் பொடிப ரத்தி
.....தின் மேலவினை யிட்டு மேலு
மப்பொடியிட் டூமத்தின் றேலான் மூடிக்
......யத்தால் விரலளவு தடிக்கப் பூசிக்
கொண்டதன் மேற்சிலை செய்து புடமிட்டாறித்
..... யுள்ளிதரு சாற்று லாட்டித்
..கருபசுவி னெய்யிலுணச் சாற்றி னாரே 35

## இதற்கு அனுபானந்தூள்

........ வாழைப்பூ முகிழஞ் சேரப் புரிசுற்றி
...த்தப் புரிதான் வெந்திடவே வேகச் சுட்டுப் பூக்கிழங்கைச்
...தே நருக்கிப் பிழிந்தவதின் சாற்றிற் கராம்பு திப்பிலியும்
....த விடயங் கருஞ்சீர மோமஞ் சுக்கோர் பணவிடையும் 36

...... கூட்டி யெலுமிச்ச மதனிற் சாற்றின் மிகவரைத்து
... கனலில் வறுத்த பின்பு வேண்டி யரைத்து மீளவுமே
... முறவே யிரண்டு தரம் பாகஞ் செய்து முன்சாற்றில்
.... குங் குளிகையுடன் கொடுக்க வதிசா ரங்களகன்றிடுமே 37

## கருவேப்பிலைக் குழம்பு

## மூலக்கழிச்சலுக்கு

கருவேப் பிலைதண்டு காண்பல மைப்பான்
சருகாக்கி யோருக்கித் தானே - மருவாக
நாற்கலநீர் விட்டு நலனுறவே காய்ச்சியதற்
கேற்கும் வகையை யியம்பக்கேள் - கோற்றெடியேலு
சுக்காகு மாறுபலந் துய்யமிள குஞ்சமனும்
மிகக்செவி யம்பல மாமூன்று தொக்க
களிப்பாக் குடன் கைப்புக் காண்பலமே யாகத்
தளிர்ப்பாகச் சேர்த்துத் தழவில் - விழிப்பாக
எட்டொன்ற தாக்கி யிறுத்துத் திரிகடுகு
மட்டுப் பெருங்காய மன்வகைகள் - திட்டமுற
ஓரொன் றெருசமனை யுற்ற வபினியது
சேருமுறை நாற்கழஞ்ச சேர்த்துமே - பாருமது
நெய்தேனுஞ் சர்க்கரையு நேராக வேகூட்டிச்
செய்யு மருந்ததனைச் சேர்ப்பதில் - உய்திபெறப்
பாக்களவு கொள்ளப் பாறுமதி சாரவகை
தேக்கும சீரணமுந் தீருமே - வீக்கமெனும்
உந்தி யுறுபொரும லோங்காள நெஞ்செரிப்பு
சந்தமுறப் போமெனவே சாற்று 38

## ஆரை நெய்

தேரைய னன்று சொன்ன தென்மொழி யாரை நெய்பை
வாருறு குழலாய் செய்யும் வகையினை யுரைப்பக் கேளாய்
மாதளை பங்கம் பாளை மருவணி சடையோன் சூடும்
கூவிளை வேருங் காயுங் கொடுவேலி நெருஞ்சி லாரை 39

சீரிய விளாவின் பட்டை சிறந்தநன் னாரிகோரை
பாரினி லடைவா யொன்று பதின்பல மொக்கக் கொண்டு
நீரொரு தூணி தன்னில் நிலைபெற விடித்தெட்டொன்றய்
ஆரிய குடசப் பாலை யதிதிகழ் விடயங் கோட்டம் 40

... காந்த நற்சீர் கூறிய பலமொவ்வொன்று
......லப்பின்ப லங்கால் வளம்பெற விடித்துத் தூளாய்
வாவினெய்யீர் நாழியு மொக்கக் கூட்டிக்
தயிர்நீர் விட்டுக் கசடற வடித்துக் கொள்ளே 41

......முக் கழஞ்ச நெய்தான் குணமுறக் கொண்டு பின்னே
.....வந் நீரே கொண்டா லதிசார வகைகள் யாவும்
.....தெடுவேற் செங்கை யறுமுக னருளி னலே
....ய்த் தீருமென்று செந்தமிழ் முனிவன் சொன்னான் 42

## புளியாரை நெய்

புளியாரை யிலையிடித்துக் குறுணிச்சாறு
பொருந்துபசு நெய்யதுவும் படியிரண்டு
களியாரு மதிமதுரம் விடய மோமங்
கருதிருசீ ரகந்திப்பில் லதனின் மூலம்
வளிதீரு மவினிவைகள் கழஞ்ச வீத
நாடிவடி கழஞ்சகொளக் கடுப்பும் போமே 43

## புளியாரைப்பாகு

நாவல்தனிற் பட்டை நலமாய்ப் பலம்பத்துக்
காவலுறு மானனையாய் கண்டித்து - மேவ
இடித்துப் பொடியா யிருகலநீர் விட்டுத்
துடித்தவனன் மேலிருத்தி வற்ற - வடித்துக்
குறணி கஷயாமதிற் கூர்புளி யாரை
பெறுசா றிருநாழி பேசும் - நறுநெய்
அதவு மிருநாழி யாய மதுரம்
கதுவுவெள்ளி லோத்திரமு மல்லி - பொதுவாய
ஏலமில வங்க மிலவம் பிசினுடனே
சாலுமது தாமரையின் றண்வளையம் - பொதுவாய
ஏலமில வங்க மிலவம் பிசினுடனே
சாலுமது தாமரையின் றண்வளையம் - சீலமுறு
முந்திரிகை பேரீஞ்சு முத்தக்க சோமமதும்
சந்தனமு நாவல் தருவிதையும் - சிந்தையுறு

மாதனையின் பிஞ்சினுடன் மாவிதையும் பன்றிமொ
ஓதங் கிழங்கு வரட்சுண்டி - தீதகலும்
காட்டாத்தி யின் பூவுங் கற்க முறுகொட்டி
நாட்டுபங்கம் பாளை நவில் தோட்டம் - ஈட்டமுற
ஓர்சமனுய்க் கொண்டே யுற்றபொடி மேற்றூவிச்
சாருமதிற் கற்கண்டு சர்க்கரையும் - சேரவே
கொண்டு கிளறிக் குழம்பாகத் தின்பவர்க்கு
மிண்டு மதிசார மென்புருக்கி - ஒண்டொடியே
தீருமென முன்னோர் தெரிந்துரைத்த வுண்மையினு
தீருமிது நமப்பியே செய் 44

## பட்டைக்குழம்பு

அத்தி நறுவிலி யாலரசு நாவலுடன்
முற்றுநெல்லி யும்வரட் பூலாததி - சித்திபெறும்
முள்ளியுட னெல்லா முதிர்ந்தபட்டை வாழைப்பூ
தெள்ளுமுத்தஞ் சம்புவிதை பொன்முசுட்டை - உள்ளா
பத்துடனே மூன்றும் பதின்பலமா யோர்கடத்துள்
ஒத்தபுனல் தூணியெட்டி லொன்றாக்கி - வைத்துக்
கராம்புடனே திப்பிலியுங் கண்ட விரண்டுசீ
ராங்கமுடன் சாதியல வங்கம் - சராங்கமறு
செண்பகப்பூச் செங்கழு நீர் செய்ய தொருகொட்டி
பண்பா மதிமதுரம் பார்மிளகு - நண்பாம்
சுக்குமவி னெல்லாமுந் தூளாய்ப் பொடிசெய்து
பக்குவமாய் முன் மருந்திற் பாவித்துச் - சிக்கெனவே
தேனுழக்கு நல்லவெல்லஞ் சேரவிட்டுத் தான்கிளறித்
தானியாம் பாக்களவு தான் கொள்ள - ஈனக்
கிராணி யொடுரத்தங் கெட்டவதி சாரங்
இராணி யெலும்புருக்கி யெய்ப்பு வராணி
பெரும்பாடி ளைப்புடனே பேசுநோ யெல்லாம்
அரும்பாகு தீர்க்குமறி 45

**அதிசார ரோக நிதானம் முற்றிற்று**

# பரராசசேகரம்
## பத்தொன்பதாவது
## கிரகணிரோக நிதானம்

.கிரகணி ரோகம் ஏழுவகைப்படும். அவை :-
.சங்கிக்கிரகணி, 2. சலக்கிரகணி, 3. மூலக்கிரகணி, 4. .சேற்பக்கிரகணி, 5. வாயுக்கிரகணி, 6. இரத்தக்கிரகணி, 7. பித்தக்கிரகணி என்பன
.இதில் முதல் நாலும் அசாத்தியரோசங்கள், ஏனைய சாத்தியங்களாவன

### அசாத்தியம் 4 ல்
### 1. சங்கிக்கிரகணியின் குணம்

.அங்கமும் வெளுப்ப தாகி யடிவயி றதைப்ப தாகி
..மங்கிய வுதரந் தன்னில் வாயுவுஞ் சலமுங் கோத்துப்
..ாங்குசோ றறுமை நின்று புளித்தேக்கி நெஞ்செரித்துத்
..குசொல் லாமம் வீழுஞ் சங்கியிற் கிராணி யாமே 1

### 2. சலக்கிராணி

கரத்தி லூதை விம்மி யோங்கிநெஞ் செரித்துக் காட்டிப்
.பதைபதைத் துடலு நொந்து பலபட வலித்துக் குத்திப்
.வதைபடக் குடல்சு ழன்று பொருமியே சமனாய்ப் போகும்
இதைமலர்க் குழலினளே சலமுறு கிராணி யாமே 2

## கிரகணி ரோகநிதானம்
### 3. மூலக்கிராணி

*கீழ்வயிறு மிரைந்திடுப்புக் கடுத்து ளைந்து
கெஞ்சிடுவே குருதிவிழும் வெளியிற் றேன்று
தாளவிரைந் தீனமிகுஞ் சவிகே டாகுந்
தறுகிமலங் கழிந்துசற்றே வலியுந் தோன்று
நாள்வழிபி லுடம்புவற்றும் வெளுப்புத் தோன்று
நாவரளுந் தவனமுட னிளைப்பு முண்டாம்
கேளிவைதான் மூலமுறு கிராணி யென்றே
கிளர்தவத்து முனியுரைக்கக் கேட்ட தாமே 3
*கீழ்வயிறு தனிலுளைந்து நடுநோ வுண்டாம் என்றும்,

### 4. சேற்பனக்கிராணி

இருமலெரிப் பதிசார நெஞ்செ ரித்த
லிளகிமல முடன்கழித லூதிக் காட்டல்
பொருமல்குட லிரைதல்வலி கூப்பிட்டோடல்
புறந்தாளுங் கண்முகமுஞ் சோப மாதல்
வெருவல்மே லேப்பமிடல் புளித்தேக் காதல்
விக்கலெடுத் திடல்குளிர்த லகந்து டித்தல்
கருதுகுண மிவையாகிற் சயத்தினலே
கழிச்சலுண்டா மிக்குணத்தைக் கருதிப் பாரே 4

### சாத்தியம் 3ல்

### 1. வாயுக்கிராணி

பொரும லிரைதல் செரியாமற்புனித்தேக்கிட்டேயுவாந்திகொழல்
இருவல் நருவ லதுவாக விளகி மலமு முடன்கழிதல்
பருகுமசனஞ் செரியாதாற் பசியே யின்றிக் கனத்திருத்தல்
பெருகப் பேச லபானத்துப் பிற்பா டுதர வலிபூணல்
வருகைக் குரிய வலுக்குறையும் வாயுக் கிராணி வகையாமே 5

### மற்றெருபாடம்

பொருமு மிரையுங் கழிந்திருக்கும் போதப் புறந்தாளதைத்துவற்று
மருவு மசனஞ் செல்லாது வரண்டே யுடப்பு வற்றிவரும்
கண்ணீர் நாவரளும் பலகா னைத்தல் கனவுமிகும்
வாயுக் கிராணியென விரித்தே புளியில் விளம்பினரே 6

### 2. இரத்ததக்கிராணி

....ற் காய்ந்து நெந்து கொண்டதோ ரசனந் தொங்கிக்
....டாப் புளித்தேக்கிட்டுத் தீவிரங் கெட்டுக் கைகால்
...தலா முளைந்து வீங்கிப் பொருமியே வயிற்றைப் பற்றி
மாய் மலமும் வீழ மிதுரத்தக் கிராணி யாமே 7

### 3. பித்தக்கிராணி

...ரித் திரைப்பு முண்டா யிளைப்பொடு வாந்தி யாகிப்
.....ன வெளுக்கு மேனி பாண்டமு மயருங் கைகால்
...வ வீங்கி நாளுங் கழிச்சன்மென் மேலு மாறை
மொழியி னாளே பயித்தியக் கிராணி யாமே 8

## சிகிச்சை

### கவுத்தரிபாத வங்காதிசூரணம்

சடைக்கஞ்சா வவின்விடய மிலவின் பிஞ்ச
சார்பிசினு முக்கடுகு தகரங் கோட்டம்
மடக்கொடியே லகிரியைந்து மாவின் வித்து
மருவுமிரு சீரகமு மோமங் காயம்
கடற்குணுரை செங்காந்தம் வெள்ளை யுள்ளி
கருவேப்பந் தண்டுசுண்டைக் காயின் வற்றல்
அடக்குமுறு மரிசிவகை யாறு தானு
மரியசிறு மூலமுமோ ரளவு கொள்ளே 9

கொதிக்கவறுத் தடிபொடித்து நாற்பா னளுங்
கூறியதூள் வெருகடிதேன் குழைத்தே கொள்ளக்
கதித்துவரு கழிச்சலுடனதிசா ரங்கள்
கடகடென விரைச்சலுடன திசா ரங்கள்
எதிர்த்துநெஞ்ச முட்டியிடும் வாய்வு மந்த
மிரத்தமொடு சியலொடுக்கள் விக்கல் சத்தி
சதிக்குமெழு கிரணியுந் தீருமென்றே
தமனியவெற் புறைமுனிவன் சாற்றி னனே

### வெட்டுப்பெருமாள் சூரணம்

பஞ்ச லகிரிகளவின் கல்லினர் விடயம்
பஞ்ச வாசமுறு முக்கடுகு
பாரங்கி யேலமில வங்க மிந்துகடு
பச்சை நாகணம் விளங்கமும்
அஞ்சு லவணமுட னேநறும் பிசினு
மரிய வேல்விளா வரத்தையு
மாவரந் துளிரு மோம மஞ்சள் நில
வாகை மூலமுட னகவே
மிஞ்சு நாரிபுளி வித்து நீடொலியும்
விரவி நீரிடி பொடித்தமே
வேறு தேனிலிடு பொருும லோடிரைவு
மேல்வ யிறுளை கடுப்புநோ
அஞ்சி யோடுமிது வுண்மை யாயுண்முறை

யாய்ந்து ளோர்களுனா கூறினை
ராறு மாமுகவ னீறு பூசுநினை
யன்பர் பாவவினை யென்னவே

## பூபதிசிந்தாமணிச் சூர்ணம்

அரிதாரங் கெந்தகமு னேசிலையி லிங்க
மவினிரச மோரொன்றே ரடைவினிரு கழஞ்ச
இருசீர்செங் கடுகேலம் வசுவாசி கராம்போ
டிலவங்கஞ் சாதிக்கா யிசைந்தகுறு சானி
வருநாக மலர்விடய முக்கடுகு முலவா
மாகாய மிவையோரொன் றெருகழஞ்சு கூட்டிப்
பரிவான தான்றிகடுக் காய்பததுப் பத்துப்
பதமிடுகஞ் சாவிலையும் விதையுமரைப் பலமே 12

....டுபொரு மருந்தவுரி சாரணையிம் பூறல்
கோரைதனின் மூலமிவை கழஞ்சுபிட மிட்டே
...மொரு பணவிடைதூள் தேன்கூட்டிக் கொடுக்க
வெதிரெடுத்த லதிசாரந் தீராத கிராணி
...நவ சுரமுடனே பெரும்பாடு நீரின்
கடுப்பு வெள்ளை சீலொடுக்க ளாவிவை யெல்லாம்
வரு பூபதிசிந் தாமணியென் றிதனை
புரைத்தனர்மா முனிவருல கத்தவர்கட காயே 13

## வெட்டுமாரன்சூரணம்

வெட்டுவீ மாரன் றூள்செய்ய வென்றிக் காந்தஞ் சாதிலிங்கம்
சுஞ்சாதிக்காய் வாசிவெறிசேர்கஞ்சாப்பொடியவினும்
மட்டு நற்சீர் குறசானி வருகர்ப் பூர மத்தின் விதை
வகைகுங்குமப் பூக்கோச்சியும் வளமேசேருமில வங்கம்
.பொட்டார்நுதலாய் கழஞ்சொன்று புகலுமோமநாற் கழஞ்சு
.பொடித்துப் தூளாய்ப் புத்தோட்டிற் போத வேழுபு - மிட்டுக்
கட்டாயளவு பேன்பிடியாய்க் கடிசேர் தேனில் வெந்நீரிற்
கடுப்புக்கிராணி யதிசாரம் வாய்வும் போகுங்காணாதே 14

•

## கருங்கோழிப்பற்பம் (இரத்தக் கிரகணிக்கு)

கோழிதனையுறுத்தே யுதிரம் போக்கிக்
கருகுகுட லிறகு முதற் பளைந்து நீக்கி
அருங்கூகை நீறுநறும் பிசின்சா திக்கா
யபின்கல்நா ரதிவிடயங் கராம்போ ரொன்று
சுருங்காம லிருகழஞ்சு சம்பீ ரத்திற்
சொற்றபுளி வார்த்தரைத்துப் பின்பு கேண்மின்
தருஞ்சார ணைக்கிழங்கு நீலி வேருந்
தாடிமத்தின் பிஞ்சுமருட் கிழங்கு மாமே 15

ஆமின்னு மதுமத்தை விதையி னோடே
யாடுதொடா மூலிவேர் நாற்க ழஞ்சாய்
ஓமின்னு முன்மருந்திற் சேர்த்த ரைத்தே
யுறுங்கோழி வயிற் றிலிட்டுத் தைத்துக் கொண்டு
தாமின்னும் பருத்திதரு பிஞ்சிற் சாறு
தக்கவெள்ளாட் டினிற்பாலும் வகைக்கு நாழி
காமன்னு மெள்ளெண்ணெ யிரண்டு நாழி
கலந்துவிட்டுக் கோழிதனை யவித்தி டாயே 16

அவிந்துசா றதுவற்றிக் கடுக தான
வப்பதத்தி லேயெடுத்தவ் வெலும்பை நீக்கி
உவந்ததசை யுடன்சரக்கு மாட்டுத் தோலி
லுலர்த்தியிடித் தேபொடித்துத் தேனி லாதல்
நிவந்தநற்சீ ரகமவித்த நீரி லாதல்
நினைந்துகொடுத் திடவிரத்தக் கிராணி யாறும்
குவிந்தமுலை மடமானே தீருமென்று
குடமுனிவ னுரைத்ததனைக் குறித்துக் கொள்ளே 17

### கவுத்திரிபாதவங்கக்குளிகை

இலங்குங் கஞ்சா வறுகழஞ்சு வில்வம் பிஞ்சு மவ்வளவு
துலங்கும் விடயம் குறாசானி சோமன் காந்தங் கடுகுள்ளி
மலங்கா நாவற் பட்டைச்சாற் றரைத்த வுண்டை மதுவிலுணக்
கலங்கி யோடுங் கிராணியெல்லாந் கவுத்ரி பாத வங்கமிதே 18

### வச்சிரகபாடக்குளிகை

அத்தித் திப்பிலி யதிவிடய மவினற் கராம்பு சாதிக்காய்
ஒத்த கடுகு திரிகடுசு மோமங் காய மிந்துப்புச்
சித்ர மூலச் சாறரைத்துக் தேற்றா னளவு குளிகைசெய்து
பத்தி மேதித் தயிரிலிடப் பறந்தே கிராணி போய்விடுமே 19

### சித்திரகபாடக்குளிகை

நீதிசே ரவினு மொன்று நிறையதி விடயம் ரண்டு
ஓதிய கராம்பு மூன்று வுற்றபத் திரிதா னாலு
சாதிக்கா யதுவு மஞ்சு சந்தனந் தானு மாறு
பேதிக்கா மிலவிற் றோன்றும் பிசினுமோ ரேழ தாமே 20

ஆமதே கஞ்சாச் சாற்றி லரைத்தபின் மத்தஞ் சாற்றில்
ஓமதே நொச்சிச் சாற்றி லுற்றமு வரைப்புக் கொண்டு
நாமதே யுரைத்தோ நல்ல மிளகள வுண்டை செய்து
போமதே கிராணிக் கெல்லாம் பொருந்திய தேனிற் கொள்ளே 21

### ஏலாதிகபாடக்குளிகை

ஏலமில வங்கமதி விடயங் கைப்பு
மினியவதி மதுரமொடு கணித வேதி
கோலமுறு கராம்புநற்சீர் வன்னி கர்ப்பங்
கூறுபுற்றாம் பழச்சோறு பருததி வித்துச்
சாலுமது மத்தின்விதை யவினோ ரொன்று
சமனாக வரகரிசி பொரித்த வித்த
ஆலியநீ ரதிலரைத்தே யுண்டை யாக்கி
யந்நீரி லிடவனைத்துக் கிராணி போமே 22

### நாட்பட்டகிராணிக்கு
### ஆயில்நெய்

செப்பிய வாயிற் பட்டை தேற்றாவின் பட்டைதானும்
அப்படிக் குறைவு றாம லாறரைப் பலம்வ கைக்குத்
தப்பற முத்தக் காசு தகுமலை தாங்கி யின்வேர்
ஒப்புறு சிறுகாஞ் சோன்றி யுற்றவா வரையின் வேரே 23

வேருறு முட்கா வேளை நாய்வேளை யாமி தெல்லாம்
தூர்படி யைந்தொவ் வொன்று சோழியப் படியே கூட்டி
ஓருறு தண்ணீர் தானு மொன்பது மரக்கால் தன்னை
வாரிரு மரக்கா லாக வடித்துமேன் மருந்துகேளே 24

மருந்துதிப் பிலியி னோடு வருபெரு மரத்தின் பட்டை
திருந்தவே பலமொவ் வொன்று சிறுமூலஞ் சிறிய தேக்குப்
பெருங்காயம் பெருங்கு ரும்பை பேகிய விழாலிந் துப்பு
அருங்கொடு வேலி நற்சீ ரசமோ தங் குடசப் பாலை 25

அதனுட னிலவி னுற்ற பிசினதி விடயம் வன்னி
விதியுறு மிளகு மெல்லா நாழிநெய்க் கோர்க ழஞ்சு
மதியுடன் கூட்டி நெய்யும் வடித்துநெல் லினிலோர் மாதம்
பதியுறக் கட்டி வைத்துப் பின்னெடுத் திடுபண் பாலே 26

பண்புறு முடலின் கூறுந் நோயில்வல் லபமு மோர்ந்தே
உண்குறு முக்க ழஞ்சு நெய்யைவெச் செனவே காட்டி
நண்புறு பத்தி யங்கார் நவிலத்தி வாழைப் பிஞ்சு
பண்புறு முருங்கைப் பிஞ்சு பகருமா வரம்பிஞ் சாமே 27

பிஞ்சுகள் கூட்டி யூண்கொள் பின்குடி நீரைக் கேண்மின்
வஞ்சியே யாவ ரம்வேர் மலைதாங்கி முத்தக் காசு
தஞ்சமா மத்திப் பட்டை தருகளிப் பாக்கி தெல்லாம்
அஞ்சிடா தொருக ழஞ்சா யைங்கழஞ் சோமங் கூட்டே 28

கூட்டியோர் நாழி நீரை யுழக்காக்கி யிரவி லுண்ண
வாட்டிய கிராணி யோடு வலித்திடு கழிச்சல் ரோகம்
மூட்டிய கடுப்பி ரத்தக் கழிச்சலு முதிர்ந்த நோய்கள்
ஏட்டினி லுரைத்த வண்ணம் தீர்ந்திடு மென்றார் மேலோர் 29

### சுக்காயில்நெய்

சுக்குட னாயிற் பட்டை சொற்கொடிக் கழற்ப ருப்புத்
தக்கசித் திரத்தின் மூலஞ் சார ணைவெள்ளை யுள்ளி
ஒக்கநாற் பலமொவ் வொன்று முரியமுக் குறுணி நீரை
அக்கினி முகத்தி லெட்டொன் றாக்கியே பிழிந்து கொள்ளே 30

கொண்டதிற் கரைக்குங் கற்கங் கூவிளை விதையாத் திப்பூ
விண்டவா யிற்றோல் பங்கம் பாளைவேர் சிவனார் வேம்பு
பண்டுரை பெரும ரத்திற் பட்டைமா வடுவும் வித்தும்
மண்டிய வழிஞ்சில் வித்துத் தாதுமா துளம்பூப் பிஞ்சு . 31

..ஞ்சுறு மத்திப் பட்டை பிஞ்சுடன் புங்கின் றோலும்
..ஞ்சிய புளியின் வித்து வெட்பாலை யோம மஞ்சள்
..ஞ்சியே கராம்பு சாதிக் காய்வசு வாசி கைப்பு
..ஞ்சுறு கடுக்கா யிந்து நவில்திரி கடுகு காயம் 32

நாயுறு மிரண்டு சீரங் கருதுசெவ் வள்ளி யோடு
நோயறு மத்தித் திப்பில் நுவலதி விடயமல்லால்
வாய்வறு சிறிய மூலம் வகைக்கிரு கழஞ்சு கூட்டி
ஆவுறு நெய்யீர் நாழி யாட்டுப்பா லிரண்டு நாழி 33

கூட்டியே வடித்து நக்கக் கூர்வாயுக் கிராணி யோடு
நாட்படு கழிச்சல் ரத்தக் கடுப்புட னிளைப்பு விக்கல்
வாட்படு விழியி னாய்க்கு வருபெரும் பாடுசீல்கள்
கோட்படு முதரத் துற்ற வலிகளுங் குடிபோ மன்றோ 34

**பட்டைப்பாகு**

அத்தியுட னேயித்தி யொதிமா நாவ
லாவாரை யரசிவைக ளெல்லாம் பட்டை
சுத்திபெறப் பலமைந்து வகைக்குக் கூட்டித்
துய்யநீ ரிருமரக்கா லெட்டொன் றாக்கிச்
சித்திபெறு வாழைப்பூ வீர வுள்ளி
தென்னையினிற் குரும்பையிவை மூன்றுஞ் சாறு
புத்தியுட னொருநாழி வீதங் கொண்டு
புகல்கோவை யத்திவிளாப் பருத்தி யாத்தி 35

ஆத்தியுடன் பனிச்சைமா தளையா வாரை
யனைத்துமிவை பிஞ்சிலவு விளாவே நிம்பம்
சேர்த்தவிவை பிசின்மூன்றுங் குலக்கா யோமந்
திப்பிலிநற் சீரமவின் சிறிய மூலம்
ஆர்த்தகுறா சானியதி விடயங் கோட்ட

மதிமதுரங் குளவிந்த மஞ்சண் மாஞ்சின்
ஏர்த்தவிழால் வசுவாசி கடுகு முத்த
மிலவங்க மாசிக்காய் கொம்ப ரக்கு 36

குந்துருக்கம் பத்திரமூன் றளவ தாகக்
கூட்டியிடித் தேயரைத்துச் சாற்றி னாலே
வெந்தகஷா யத்திலிட்டுச் சாறு நல்ல
வெல்லமுமே யுடன் கூட்டிப் பாகு காய்ச்சி
மந்திரத்தா லறுமுகனை வணங்கி வாழ்த்தி
வருநோயின் பெலமறிந்து பிரமா ணங்கொள்
தொந்தமுறு கிராணிவகை பலவுந் தீருந்
துய்ப்பதுவும் பத்தியமுன் சொன்ன தாமே 37

**வாயுக்கிராணிக்கு**
**சுக்குச்சூரணம்**

சுக்கோம மிளகுலுவாப் பலமொவ் வொன்று
சோர்வின்றி யிளவறுப்பாய்ப் பொடியே செய்து
மிக்கான வுத்தமா காணி குப்பை
மேனியுடன் வெதுப்படக்கி காவி ளாயும்
தக்கவட்டத் திருப்பியிவை வேரு லர்த்தித்
தனித்தனியே பொடிசெய்து பலங்கால் வீதம்
தொக்கபெருங் காயமவி னிருவி ராகன்
றூளரைத்துத் தேனிலுணக் கிராணி போமே 38

**பெருங்காயச்சூரணம்**

இங்கோமஞ் சுக்குச் சாதி யிருசீரம் விடய மஞ்சள்
பங்காக வச்சிர வல்லி பண்புட னொன்றாய்க் கூட்டி
மூங்கவே மோரிற் காய்ச்சி முழுதுஞ்சூ ரணமே செய்து
அங்கெழு போது தின்ன வகலுமே கிராணி வாயு 39

**இலவங்கச்சூரணம்**

இலவங்க மதிமதுரம் விடய மிந்துப்
பியலோமந் திரிகடுகு கராம்பு வாசி
குலுமுறுகா யிலவுவிளாப் பிசினி ரண்டுங்

குந்துருக்கஞ் சீலைசுட்ட சாம்ப லோடு
நிலவுகுட சப்பாலை கழற்ப ருப்பு
நிகர்கூட்டி யரைத்தெள்ளி லெண்ணெய் தன்னிற்
பலமுறவே குழைத்துநக்கக் கிராணி வாயு
பறந்தோடு மெனமுனிவர் பகர்ந்தா ரன்றே 40

## சோற்றிலிட்டுண்ணப்பொடி

புகட்டியதோர் வாயுவினிற் பரந்தகிரா ணிக்குப்
புகன்மருந்து புதியவிரு சீரகமிந் துப்புச்
சகட்டுலவு பெருங்காயங் கடுகுமிவை யெல்லாந்
தம்மிலொக்கப் பொடிசெய்து சுட்டசோ றதனில்
அகட்டிலிட வொருபிடியி லெண்ணெய்தனைக் கூட்டி
யறைந்ததூள் தனைத்தூவி யதுபிசைந்து முன்னம்
செகத்திலுள மனிதரெலாந் தின்பீரே யாகிற்
சிவனுதவி யாலெளிதிற் றீர்ந்துவிடு மாமே 41

## குடிமருந்து

ஆமின்னுங் கழற்சி தரு மணியேழு கொண்டே
யதிலிருப்பைப் பிண்ணாக்குப் பாக்களவு தானும்
கோமன்னுங் கொற்றானுங் கொழுஞ்சியது தானுங்
குறையாது பாக்கினள வாகவே கூட்டி
மாமன்னு காடிதனி லரைத்ததிலே கரைத்து
மறவாமன் மூன்றுதின மப்படியே குடிக்கப்
போய்மன்னும் வாய்வில்வருங் கிராணிவகை யாவும்
புகலாறு முகன்கருணை யால்விட்டுப் போமே 42

வேறுசில கிரகணி ரோகங்களும் சிகிச்சை முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன – அவற்றைக் கீழே காண்க.

## மலக்கிராணிக்கு

ஒருபக்கத் திரைந்தே யேறி யோடிடு மறுபக் கத்தில்
வெருவுறக் கிறுகி றுக்கும் விடிந்தபின் பொருமிக் கொள்ளும்
பெருமல மாகத் தள்ளும் பிடரியு மசந்து நோவாம்
வருமலக் கிராணி யென்றே யெழுதினர் மறைவல் லோரே 43

**சிகிச்சை**

சீரக மிரண்டோ டேலஞ் செய்யதோர் கடுகு கஞ்சாப்
பாரினமுக் கடுகோ ரொன்று பகர்ந்திடுங் கழஞ்சு கூட்டித்
தாரணி கம்ப மாவுஞ் சாமைமா வுரியிற் சேர்த்து
நேரமுத் தினத்தி லுண்ண நீங்கிடு மலக்கி ராணி 44

**சுரக்கிராணிக்குணம்**

எப்போதுஞ் சுரமே தோன்றி யிரைந்திடு மடிவ யிற்றிற்
தப்பாமல் வயிற்றிற் பேதி தானறி யாம லோடும்
உப்பாக வாயு றைக்கு மொருத்தலை வலியு முண்டாம்
வெப்பாக மூச்சுக் காணும் விளம்பிய சுரக்கி ராணி 45

**சிகிச்சை**

வெந்தயஞ் சுக்குச் சாதி விளங்குநன் னாரி மூலம்
சந்தனம் விடய மேலந் தாமிவை குடிநீர் காய்ச்சி
அந்தநற் குடிநீர் தன்னி லரிதார வெள்ளைப் பற்பம்
புந்தியாய்க் கூட்டி யிட்டாற் போய்விடுஞ் சுரக்கி ராணி 46

மலைதாங்கி வேர்முத்த மத்திப் பட்டை
மருவியநீர்ப் பூலாவேர் நாவற் பட்டை
இலைதாங்கு மதன்கொழுந்து மாம்பூப் பட்டை
யிருவேலி யிலாமிச்சு வேருங் கூட்டி
விலைதாங்கு மதிவிடயங் கொத்த மல்லி
வேர்க்கொம்பு செங்கழுநீர்க் கோட்ட மேலம்
துலைதாங்கு மதிமதுர மிருசீ ரேலந்
தூளாக்கிக் கொள்சுரத்தின் கிராணி போமே 47

**சகலகழிச்சலுக்கும்**

**உறட்டி**

இருசீ ரேல மிலவங்க மிசையுங் கடுகு திரிகடுகு
வருசா திக்காய் கராம்புவசு வாசி விடயம் வெறிநெல்லி
திருவே கைப்புச் சமனாய்த்தூள்செய் துகுக்குட வண்டவெள்ளைக்
கருவி லுறட்டி சுட்டருந்தக் கழியுங் கிராணி யகன் றிடுமே 48

### குன்மக்கிராணி

வாந்தியாய் நெஞ்செ ரித்து வயிற்றையே பொருமி விம்மிச்
சேர்ந்தவூண் செரிக்கும் போது சேருமுட் போல்வ லிக்கும்
ஓய்ந்திடப் பேதி செய்யு முடம்பெலாங் காந்தல் கொள்ளும்
ஆய்ந்த நூல் வல்லோர் குன்மக்கிராணியென் றறைந்தாரன்றே 49

### சிகிச்சை

நாவி யிரச மரிதார நல்ல கெந்தி வெண்காரம்
மேவுங் காந்த மவின்மருந்து விளம்பி னிறையே தானெடுத்துத்
தேவ தாளிச் சாற்றரைத்துச் சிறிய பயறு யுண்டைசெய்து
நோவு தீரத் தேனிலிட நுவலுங் கிராணி போய்விடுமே 50

### மேகக்கிராணி

வற்றடி புண்போல் நொந்து வருங்குறி யதனாற் சீபோற்
பயிற்றியே மிகுந்தி ருக்கும் பாவைபோன் மேனி வற்றும்
அயிர்ப்புறக் கொடியாய் வீழு மம்மலங் காதிற் குத்தும்
புயற்செறி குழலாய் மேகக் கிராணியாய்ப் புகல லாமே 51

### சிகிச்சை

சீனிதா ளிசத்தின் பத்ரி சீரக மிரண்டோ டேலம்
தானுமுக் கடுகு சாதி சமனாகப் பொடியே செய்து
தேனுட னப்பி ரேக சிந்தூரம் வைத்தே யுண்ண
ஊனெழு கிராணி மேக மகன் றிடு முணர்ந்து கொள்ளே 52

### மூலக்கிராணி

மூலக் கிராணி வயிறுளைந்து நொந்துமூலம் வலியி ரத்தம்
காலைக் குத்தும் பிறம்புக்குங் கழியு முளையுஞ் சவிகெடுக்கும்
மேலும் வற்றுஞ் சோபமுண்டா மிகநா வரளு மிளைப்புண்டாம்
ஏலக் குழலா யிதுமூலக் கிராணி யாகு மெனச்செப்பே 53

### சிகிச்சை

### திருவாத்தியிலை மிளகுரசம்

திருவாத்தி யிலைபறித்துப் புழுவு நீக்கிச்
சிறந்தகொத்துத் தண்ணீரு மெட்டு விட்டே
ஒருகொத்தாய் வற்றியபின் மிளகின் றோலை

யுள்ளபடி போக்கியொரு பலமே கொண்டு
வெருவுவெள்ளை யுள்ளியொரு பலமுங் கூட்டி
வீறாக வரைத்திலைதான் வெந்த நீரில்
வருமிளகு நீர்காய்ச்சிப் புழுங்கல் தன்னில்
வருமரிசிச் சோற்றினிலே வார்த்துண் பீரே 54

கருதுமற்ப னுடனிங்கு கூட்டிச் சுட்டுக்
கடிதுநீர் குடிப்பீரேற் கழியுஞ் சீதம்
பெருகவரு மிரத்தமுறு கிராணி மூலம்
பெய்வளையே தீருமெனப் பெரியோர் சொன்னார்
திருமலியுஞ் செஞ்சடையோ னுதவுஞ் செவ்வேற்
சிறுவனறு முகன்சரணஞ் சிந்தை மீதில்
வருடியிந்த மருந்ததனைச் செய்யு மென்று
வாகடநூலறிந்தவர்கள் வகுத்தா ரன்றே 55

## ஏலாதிநெய்

ஏலமில வங்கமொடு குலக்காய் பத்ரி
யினியநற்சீர் திரிகடுகு வெள்ளை யுள்ளி
கோலமுறு தூதுளைவேர் பொன்னாங் காணி
கூறுகவிழ் தும்பையின்வே ரப்பை யின் றன்
மூலமொடு விளாத்திவேர் கறியா லின்வேர்
முதிர்ந்தசிறு கற்கிழங்கு கருடன் கோவை
முலமிவை யொருகழஞ்சு பசுவின் பாலு
மொழிந்தநெய்யு மொருநாழி வடித்து நக்கே 56

## அத்திப்பாலுண்டை

நாயுருவி யரிசியுடன் காசுக் கட்டி
நற்சீர மதிவிடய மோமம் வாசி
சாயுமவின் கராம்புகுலக் காயி லந்தைத்
தமபலமு நெற்பொரியுஞ் சமனாக் கொண்டு
பாயுமத்திப் பாலிலரைத் திலந்தை வித்திற்
பருமனுற வுண்டைசெய்து தேனி லன்றி
ஆயுமுறை யாயுரைக்குங் குடிநீர் தன்னி
லருந்தவே கிராணிவகை யனைத்துந் தீரும் 57

**அனுபானக்குடிநீர்**

தீருகின்ற குடிநீர்கேள் முத்தக் காசு
சேரடம்பு நாவலினிற் பட்டை பாலிற்
சேருமுகிழ் மாதளையிற் கொழுந்து மிச்சுச்
செய்யசடைக் கஞ்சாவே ரிலையு மற்றும்
பாரினிலப் பனைக்கிழங்கு குடிநீர் காய்ச்சிப்
பகர்குளிகை தேன்கூட்டிப் பருக முந்தைச்
சோரியுறு மூலமதிற் கிராணி யாதி
சொல்லியவக் கழிச்சல்வகை தொலைந்து போமே 58

**கருவேப்பிலைப்பொடி**
**(சோற்றில் தூவியுண்ண)**

கருவேப்பி னிலையோமம் பெரிய காயங்
கருஞ்சீரஞ் சுண்டைக்காய் வற்ற லோடு
கருமிளகு சமனாக வறுத்துத் தூளாய்க்
காய்ச்சுநெய்யி னுடன்சோற்றிற் பிசைந்தே யுண்ண
வருகழிச்சல் வகைதீருஞ் சுண்டை வற்றல்
வச்சிரவல் லித்தண்டு காய மோமம்
கருவேம்பு மாங்கொட்டைப் பருப்புச் சீரங்
கருகவறு பொடிமுன்போற் கலந்துண் மாறும் 59

**மாதளம்பழத்துநெய்**

மாதளையின் பழஞ்சீந்திற் றண்டு சாம்பல்
வாழைதனிற் கிழங்குபழங் கரும்பி னோடு
தாதுலவு கூஸ்மாண்டப் பழமு மெல்லாஞ்
சாறுவகைக் கொருபடியாஞ் சரக்குக் கோட்டம்
ஆதியதி விடயமிந்து நெல்லி தான்றி
*யாகரிசுக் குடன்கருஞ்சீ ரகங்க ழஞ்சு
சீதமுறு சந்தனமோர் பலமு மாகுஞ்
சீரகமோர் பலம்பொடித்துச் செப்பக் கேளே 60

அரைத்து முன்ன ருரைத்தவச் சாற்றினிற்
கரைத்து நெய்யுங் கருதிள நீருமே

உரைத்து வண்ண மொருபடி கூட்டியே
எரித்துண் மூலக் கிரகணி யேகுமே 61

**சீதக்கடுப்பு மூலக்கிரகணிக்கு**
**சாதிலிங்கஉண்டை**

சொல்லரிய மாதளையின் பிஞ்சு தானுந்
துலங்குவிளாம் பிஞ்சுநல்ல சுக்கி னோடு
நல்லதொரு மாமரத்திற் பட்டை யின்னு
கலம்பெறுகாஞ் சோன்றிவேர் வில்வப் பிஞ்சு
இல்லதனிற் சாம்பல்வா ழைப்பூப் பிஞ்சு
மிலகுதனிற் பிசின்பிஞ்சு சமனாய்க் கொண்டு
சொல்லுமிவை தண்ணீரில் நாலொன் றாகச்
சொற்படியே வற்றவைத்துப் பிழிந்து கொள்ளே 62

வகுத்திடுசா திலிங்கமதைச் சுத்தி பண்ணி
வண்பொரிசா ரம்மிளகு கொம்பு தானும்
தகர்த்திடுதிப் பிலிகுலக்கா யோம மேலந்
தண்மைகராம் பதிவிடயங் கோட்டம் வாசி

*ஆகரி - திப்பிலி

தொகுத்தவில கிற்பிசினு மாத்தி வித்துத்
துலங்கியநீர் முள்ளிவித்து மத்தி வித்தும்
பகுத்திடுமோர் நிறையாக வவின்ச மன்தான்
பகர்ந்தகஷா யம்விட்டே யரைத்து ருட்டே 63

அரைத்துருட்டிச் சீதத்திற் கடுப்புக் கண்டா
லருத்துநல்ல சீனியுடன் கழிய லிஞ்சி
இரத்தமாயோ டிக்கழியிற் பசுவின் மோரா
மியன்மூலக் கிராணிக்குக் குடிநீர் சொன்னோம்
வருத்தமுறு கிராணிவகை தேனிற் போகும்
வன்மையுறு பெரும்பாட்டுக் கிஞ்சி நீராம்
பொருத்தமறு செரியாமை கண்ட தானாற்
புகன்மிளகு பொடியிலிடப் போகு மன்றே 64

## பிரமேகக்கிராணிக்கு

### அரிதாரக்குளிகை

அரிதார மிரசமதி விடயங் காந்த
மவினுநெல்லிக் கெந்தகமுங் காசுக் கட்டி
பெரிதான சன்மலியின் பிசின்வி ளாவிற்
பிசினுடனே புளிவீசத் தோலுங் கஞ்சா
உரிதான விலையவித்தே யூறு நீரி
லுடனரைத்துப் பயறளவா யுண்டை கொண்டாற்
பிரியாத பிரமேகக் கழிச்சல் மூலம்
பெரும்பாடு வயிற்றுவலி கடுப்புப் போமே 65

### முக்கணன்குளிகை

பெருங்காய மறுகழஞ்சு சித்ர மூலம்
பேசியவே ரெண்கழஞ்சு சேராங் கொட்டை
சுருங்காமற் பதினைந்து கழஞ்சு கூட்டிச்
சொற்றவெருக் கிலைச்சாறு விட்டே யாட்டிக்
கருங்காணந் திரிகடுகு முத்தக் காசு
கருதுசத குப்பையிவை கழஞ்சு மூன்று
தருந்தூய விந்துவினுப் பைங்க ழஞ்சு
தகர்த்திடித்த பொடிகூட்டி யரைத்துப் பின்னை 66

அரைத்தமருந் தினைத்தேங்கா யுட்செ லுத்தி
யடைத்தேழு மண்சீலை யாரச் செய்து
திருத்தமுறப் புடமிட்டே யெடுத்த ரைத்துத்
திரும்பவறுத் தேபொடித்து மூலிச் சாற்றால்
அரைத்துருட்டித் தேனிலிட வகுத்த ரோக
மறுமுகவ னருளாலே யகன்று போமென்
றுரைத்தனர்மா முனிவரனு பான பேத
முடன்கூட்டி யுணக்கழிச்ச லொழிந்து போமே 67

கிரகணிரோகநிதானம் முற்றிற்று.

(இந்நிதானத்திலும் மற்றையரோக நிதானங்களிலும் விரிவஞ்சி நீக்கிய மருந்துகள் இனி வெளியிட இருக்கும் அவிழ்தத்திரட்டு என்னும் நூலிற் சேர்க்கப்படும்.)

## பரராசசேகரம்
## இருபதாவது
## கரப்பன்ரோக நிதானம்

சோதிசேர் கைலை மீதிற் றோன்றிய வமல மூர்த்தி
நீதிசேர் முனிவர்க் கந்நா ணிகழ்த்திய வாயுள் வேதத்
தோதிய நோய்க டம்மு ளூற்றிடு கரப்பன் ரோக
பேதமு மவற்றிற் கேற்ற சிகிச்சையும் பேச லுற்றாம் 1

### 1-வாதகரப்பனின் குணம்

வாதமே நாடி யாகி வந்திடுங் கரப்பன் றானும்
ஓதுடல் வெதும்பி நொந்தே யுளைந்துகால் சந்து கைகள்
சேதமாயச் சுரந்து வீங்கிச் செறியவே சொறிவுண்டாகும்
போதவே வரண்டு முற்றி வெடித்துடன் புண்ணு மாமே 2

இருந்தெழுந் திருக்கும் போதே யிருகாலுந் திமிர்த்த தைக்கும்
திருந்தவே நடக்கும் போது சேட்டைகெட் டுளையுங் காலும்
பொருந்தவே கைகால் சந்திற் புடைத்தெழுந் தழுந்திப் புண்ணாம்
வருந்துமிக் குணங்கள் கண்டால் வாதத்திற் கரப்ப னாமே 3

கண்ணுந் தூங்கி நடுவுந்தி கனத்துச் சுரந்து வெதும்புமுடல்
நண்ணுந் துடையு மிகக்கனத்து நைந்தே தலையுங் கிறுகிறுக்கும்
புண்ணாய் நொந்து காயுமுடல் போதத்திமிர்த்துப் பொருமலுமாம்
எண்ணும் வாத கரப்பனென விசைத்தார் முனிவ ரிருநிலத்தே 4

வீங்குங் குத்து மிகவுளையும் விடாமற்றிமிர்க்குஞ்சோம்பலுமாம்
ஏங்கப் புண்ணிற் சலம்விழுந்தே யிடிந்து சொறிவுந்தினவுமுண்டாம்
நீங்கிச் செவ்வே தீராது நெடுநாட் பட்டே யொடுவாகும்
தேங்கச் சுட்டுப் புகையிடுகிற் றீருங் குறியு முண்டாமே 5

### சிகிச்சை
### இரச பற்பம்

பொன்னரி தாரஞ் சாதிலிங்கம் பொருந்துமனோசிலை நிருவிடமும்
சொன்ன விரச மரிதாரந் துலங்கு கெந்தி யோரொன்று
மின்னே மூன்று கழஞ்சுகொண்டு மேவும் வாள முக்கழஞ்சு
துன்ன வரைத்துக் கள்ளிப்பால் தோய விட்டுக் குழைத்திடு 6

குழைத்தே திரட்டிக் குகையிலிட்டுக் குணமாய் மூடியெரித்திட்ட
விழைத்த குகையிற் பற்றியிடின் மிக்க தூளாம்விரைந்தெடுத்து
குழைத்துத் தேனிற் #றிரிகடிதூள் கொள்ளில்வாதத்தனிற்கரப்ப
களைத்தே தீரு மெனமுனிவர் கழறி வைத்தார் காரிகையே 7

**சிறுகுருந்தெண்ணெய்**

சிறியகுந்தம் புன்குசே ருத்தமா காணி
சிந்துவாரம் கன்முரிசதும்
சீரான கவிழ்தும்பை தைவேளை சாரணை
சிறந்தாயில் கொடுவேலியும்
நெறிசெய்யுந் தூதுவளை *கிஞ்சுக மிலைக்கள்ளி
நிலப்பனை யுவாய் வட்டுவேர்
நேராடா தோடைபா வட்டைமர மஞ்சளிவை
நிகரான வேரனைத்தும்
குறியவில வங்கமுளி கடுகுமரி சஞ்சத
சூப்பையும் பெருங்காயமுங்
குத்துருக் கங்கராம் பக்கறா வவினோடு
குணமான சாதியின் காய்
செறியிஞ்சி வசுவாசி கார்புகா வரிசியொடு
சேருநேர் வாளவித்துச்
செய்சுத்தி நஞ்சுதளி **வாதக்கரப்பனிற்
சேருமது சிலசரக்கே 8

#சில பிரதிகளில் வெருகடி என்றும் சிலவற்றில் பணிவிடை என்றும் காணப்படுகின்றது. நோயின் பலமும் உடம்பின் இயல்பும் அறிந்து பிரமாணங்கொள்க. *கிஞ்சுகம் - முள்முருக்கு
(**வாதகரப்பனுக்கேற்ற சிலசரக்குகளை இன்னமும் சேர்க்க என்பது கருத்துப் போலும்.)

ஏலமொடு கஸ்தூரி மஞ்சளச மோதகமி
　　தெண்ணுமுலு வாமஞ்சளு
மெருக்கிலை களப்பனை கொடிக்கழல்கை யான்றகரை
　　யென்னுமிவை வேரனைத்தும்
சீலமுறு வேப்பெண்ணெ யிலுப்பெண்ணெயெள்ளெண்ணெய்
　　சிறியவே ரண்டவெண்ணெய்
சேரவொரு நிறைகொண்டு வேர்வகை யிடித்ததூள்
　　செறியுமெண் ணெய்க்குளிட்டே
மேலுறு கடைச்சரக் குப்பொடியுந் தூவியே
　　மிகவுநற் பதமானபின்
விரைவுட னிறக்கிவடி கொண்டதிற் கடுகுதனை
　　மேலுறப் பூசியின்னம்
காலமிரு காசிடை குடித்துணவு பத்தியங்
　　கார்க்கவா தத்தினாலே
கண்டிடு கரப்பனவை தீருமறு முகவனருட்
　　கருணைப் பெருக்கினாலே 9

**வாதகரப்பன் திரண்டு வீங்கினால்**
**எருக்கலம்பாலெண்ணெய்**

எருக்கின் பாலோ டரிதார மெலியின் மருந்து கொடுவேலி
ருத்த மான வெள்ளுள்ளி செறியும் வசம்பு சொன்னகரம்
பருக்க வோரொன் றைங்கழஞ்ச பேணி யரைக்க விலைக்கள்ளி
ருக்க வாட்டு மிலைச்சாற்றாற் பதறாதரைத்துக் கொள்வதுவே 10

ஏரண்டெண்ணெய் தனிற்காய்ச்சியிசையவடித்துவெச்செள
ஆரப் பூசி யெருக்கிலையீ ராறு வாட்டிக் கட்டிடுகில்
தேரும் வாத கரப்பனிலே திரண்டு வந்த வீக்கமெலாம்
சோரக் கரைத்து வற்றுமெனச் சொன்னார் முனிவர் நன்றா 11

**எண்ணெய்**

சிவந்ததொரு வாகைதனி லிலையுந் தோலுஞ்
　　சிறுகுறிஞ்சி பெருமருந்து மேதி முல்லை
நிவந்த செப்பு நெருஞ்சிதடிக் கொழுஞ்சி வீழி
　　நிகழ்த்துகொடிக் கழற்சியிவை யிலையும் வேரும்

உவந்தசிவ னார்வேம்பு தூது நாரி
யுறுகறுக்காய் வெள்ள றுகு கரிய சூரை
இவர்ந்தகொடி மல்லிகைகன் முரிசிம் பூற
லேற்றகளப் பன்னைவேர் நீர்ப்பூ லாவேர் 12

வேர்மருவு குப்பிள்ளைவேர் முருங்கை யின்வேர்
விளம்பியகாற் றோட்டிவேர் தண்ணீர் விட்டான்
சார்புறுகாக் கணங்கோவை மண்ணிற் றாலந்
தமிற்கிழங்கு பிராயின்றோல் வேலம் பட்டை
பூமருவு முருக்கமிலை புளிம ரத்திற்
பொருந்துமிலை யுந்தோலுஞ் சமன தாகும்
நேர்மருவு திரிகடுகு வெள்ளை யுள்ளி
நிகழ்வெளுத்த லதிமதுர மல்லி யோமம் 13

கோட்டநற்சீ ரகமரத்தை சிற்ற ரத்தை
கூறியகார் கோலரிசி கடுகு ரோணி
நாட்டுசத குப்பையதா வரிசி தேக்கு
நவிலுமிவை சமன்கூட்டி யிடித்துத் தூளாய்க்
கூட்டுமெண்ணெய் நிம்பெண்ணெ யேரண் டெண்ணெய்
குலவுநறு நெய்நாலுஞ் சமனாய்க் கொண்டு
வாட்டியது முறிபதத்தில் வடித்துட் கொண்டு
வருமுடம்பி லும்பூசி முழுக நன்றே 14

**பூச்சு**

சந்தனம், ஆமணக்கம் வேர், பூதவிருக்கம், பீச்சுவிளாத்திவேர், எருமைமுல்லைவேர், கான்றை வேர் அரைத்துப் பூசவும்.
எருக்கலம் வேர், புற்றாம்பழச்சோறு, எருக்கலம்பாலிற் குழைத்துப் பூசவும். 15

**சந்துகளில் விடாமல் நொந்தால்**

**பற்று**

கான்றை வேரும், இலையும், இலுப்பையரப்பும் வறுத்துக் கட்டவும் 16

**வாதகரப்பன் தோன்றும்குணமறிய**

நொந்துகன் றியத லத்தில் நோவுடைப் புண்க டம்மில்
வந்துவல் லாயு தங்கள் வலுவுறத் தைத்த டத்தில்
சந்துகால் மொளிபொருத்துத் தானங்கள் தவறச் செய்யில்
வந்துதோன் றிடுமுன் செப்பும் வாதத்திற் கரப்பன் றானே 17

**கொதியெண்ணெய்**

கொன்றை வேம்பு தூதுவளை குமிழ்வேர் கறுக்கா யாவிரைவேர்
சென்றே வணங்காச் சூரியனுஞ் சிவனார் வேம்பு கன் முரிசு
ஒன்று முத்த மாகாணி யுறுசேர் வட்டு நாயுருவி
நன்றே கொள்ளுங் கருஞ்சூரை நன்னா ரியங்கு துடர்கூட்டே 18

கூட்டி யுள்ளி மிளகுமஞ்சள் குலவு மதுரம் வேம்பாடல்
நாட்டிற் பயிலும் வெண்கோட்ட நல்குஞ் சென்ன கரம்பழமும்
ஆட்டங் காணுஞ் சாதிக்கா யதுகொள் கடுக்காய் தான் றிநெய்
கூட்டித்தூள்செய்திதனோடுகொண்டேயெண்ணெய்கொதித்திடு 19

**வாயுவாதகரப்பனுக்கு**
**எண்ணெய்**

திறிகடுகு வசம்புமஞ்சள் கடுகோ டுள்ளி
சீரான கடுதான்றி மூன்று பத்ரி
நெறிசேரு மேலமில வங்கங் கோட்ட
நேரான கொத்தமல்லி யசம தாகம்
வெறிசேருஞ் சடாமாஞ்சில் சன்னி நாயன்
வெண்காரம் வாலுளுவை கன்ம தன்னார்
நறியவிரு சீரகங்கள் *வாரி யிற்றீ
நல்லகார் கோலரிசி சிற்ற ரத்தை 20

அரத்தசந்த மஞ்சிட்டி துரிசு துத்த
மப்புருவ மவினினொடு நெல்லிக் கெந்தி
உரத்தசுரைக் காய்க்கெந்தி தேவ தாரு
வுடன்கரிய வேம்பலகைக் கரிய வேம்பு
நிரைத்தகல்லின் முரிசிவைமுன் றிலையும் வேரும்

நேரவுரி **முடக்கொற்றான் சாறு கூட்டிக்
கரைத்தெண்ணெய் கூட்டிவடித் துடனே மூழ்கக்
கடியவாய் வுறுவாத கரப்பன் போமே 21

**பறங்கிக்கிழங்குப்பற்பம்**

சீனப் பாகு பலமாறு சிறிய வரத்தை பல மூன்று
கானக் குக்கில் சுத்திசெய்து கருது பலமு மிரண்டரையாம்
தானத் திப்பில் சிறுதேக்குச் சாருந் திப்பிலி மூலமதும்
பானத் தோமம் வாய்விளங்கம் பலமே யரையாங் கால்மிளகே 22

ஏயசிற் றிலைப்பா லாவி யின்மூலம் பிடியொன்றாகும்
தூயதாய்ச் சூரணித்துச் சொற்றதேன் பசுப்பால் வெந்நீர்
நல் லனுபா னத்தி லருந்தியே புளியுப் பாதி
வை நீக்கி யூண்கொள் தீருமே கரப்பன் ரோகம் 23

**இரசபற்பம்**

பாதரசங் கழஞ்சிரண்டு சீனப் பாகு
பலமொன்று வேம்பாடல் கராம்பு நற்சீர்
சாதியின் காய் வசுவாசி களிப்பாக் கோடு
தருகைப்புக் கிருமிபகை கடுக்காய் திப்பில்
ஏதமறக் கழஞ்சொன்று வகைக்குக் கூட்டி
யிடித்தபற்பந் தனக்குநல்ல வனுபா னங்கேள்
தீதகல்திப் பிலிசுக்குக் கராம்பு மல்லி
சேர்த்து நாலொன்றாகுங் குடிநீர் கொள்ளே 24

**குக்கிற்சூரணம்**

தீதகன்ற குக்கிலிரண் டரைப்ப லத்தைத்
தேர்ந்தெடுத்து வேம்பினது பட்டை தன்னிற்
கோதலுஞ் சீந்திலுறு தண்டு தன்னிற்
குறித்தாடா தோடையினிற் பேய்ப்பு டோலிற்

*வாரியிற்றீ – கடல்நுரை
**தூத்துமக் கொத்தான் என்றும்

தாதுகண்டங் கத்தரியி லொவ்வொன் றாகத்
தனித்தனியே யைந்துசுத்தி செய்து கொண்டு
பேதமறு சிற்றரத்தை வாய்வி ளங்கம்
பெருகவே *பலமூன்று மினகோ டோமம் 25

ஓமமுடன் சிறுதேக்குச் சித்ர மூல
முறுகண்ட திப்பிலியு மரைப்ப லந்தயன்
நாமமுறு திப்பில்பல மொன்றே யாக
நயந்தபறங் கிப்பட்டை யிறாத்த லொன்று
தீமையறு *பட்டைதனைச் சீவ லாகச்
சீவியே கிளிகட்டி யோர்பாண் டத்துள்
ஏமமுறு நீர்க்குறுணி யளந்து விட்டே
யிதிற்கள்ளிக் கட்டையொரு றாத்தல் தன்னை 26

துண்டுபெறத் தறித்திட்டு வேடு கட்டிச்
சொற் றபட்டை யதிற்பரப்பி யவிந்த பின்னர்
வண்டவிழ்த்துப் பட்டையுடன் சரக்குஞ் சேர்த்து
வருதூளா யிடித்தரித்து வெந்நீர் தன்னிற்
கொண்டுவர வாதத்திற் கரப்ப னோடு
கூறுபவுந் திரப்புண்நகள் பிளவை சூலை
தண்டுதனிற் பிளவைமுத லனேக நோய்கள்
தங்காம லோடுமெனச் சாற்றி னாரே 27

**இடிபற்பம்**

இடிபற்பத் தியல்புதனை யியம்பக் கேண்மி
னிரசம்வசு வாசிதுத்தந் துரிசு கல்நார்
வடிவுடைய கோட்டம்வேம் பாடல் கல்லின்
மதஞ்சீனக் கிழங்குகுலக் காய்க ராம்பு
துடிபெறுகைப் புக்களிப்பாக் கிருசீ ரோடு
துலங்கியங்கு முருக்கிலைவெட் பருத்தி தானும்
கொடிக்கழற்சி யிலையினுடன் வெட்பா வட்டை
கூட்டியிடித் தரித்துவெந்த நீரிற் கொள்ளே 28

*பலமொன்று என்றும்
*பறங்கிப் பட்டையைக் கருங்கோழியின் வயற்றிலிட்டுக் கூறிய வேட்டின் மேல் வைத்தவிக்கும் படி சில பிரதிகளிற் காணப்படுகின்றது. அங்னனமவிக்குமிடத்துக் கோழியின் தசையும் சேர்த்து உலர்த்தியிடிக்க வேண்டியது.

### பூச்சு

பீச்சு விளாத்திச் சாறு, மதுமத்தமிலைச் சாறு, ஆமணக்கெண்ணெய், ஒட்டறை, சுன்ணாம்பு கூட்டிச்சாரித்துப் பூசவும். 29

### ஒற்று

ஓரிதழ்த் தாமரை, முதியார் கூந்தல், கள்ளியிலை, எருக்க பழுத்தல், உவாயிலை, வாதமடக்கியிலை சமன் கொண்டு பாதியை இடித்துப் பொட்டளிகட்டி, மற்றப்பாதியைப் பானையிலிட்டு 2 படி தண்ணீர் விட்டுவேடுகட்டி வேட்டின் மேல் பொட்டளியை வைத்தவித்து நோகுமிடத்தில் ஆமணக்கெண்ணெய் வெச்செனப் பூசி ஒற்றிட வாதகரப்பன் மாறும். 30

### வாதகரப்பன் பேரில் விஷபாகம் தோன்றினாற் குணம்.

சர்வாங்கமும் வீங்கும் - முகமழற்றும், கண்வெளுக்கும், உட்சுரமாயிருக்கும், நீர் சிவந்திருக்கும், மலம் சிக்கி, கைகால் உழற்றும், அக்கினி மந்திக்கும், தலை கிறுகிறுக்கும் இதில் உழலை பரிதாபமெடுத்தால், பிறநீர்க் கோவையாயெடுக்கும் - வயிற்றில் நரம்பு புடைத்தால் வயிற்றில் நீர் மஞ்சள் கட்டுப்படும். – கண் மஞ்சள் நிறமாயிருக்கும். அண்டம் வீங்கும் - இந்தக் குணங்கண்டால் பரிகாரத்திற்கு இடமில்லை – குறை வீக்கமின்றி சர்வாங்கமும் வீங்கில் பரிகாரத்திற்கு இடமுண்டென்று அறியவும் விஷபாகம் தோன்றின உடனே மருந்து எண்ணெய் தாமதமின்றிச் செய்யவும்.31

### குடிநீரும்எண்ணெயும்

கொடுவேலி, சாரணை, புங்கு, வீழி, குமிழ், விளா, பிராய், மிளகுகான்றை, பெருமருந்து, மூக்கறைச்சி, சத்திச்சாரணை, குன்றி, தூதுளை, பைங்குராய், குறிஞ்சா, சிற்றாமட்டி
மட்டி, பேரமட்டி, பிரண்டை, காட்டுமல்லிகை, ஆதண்டை,நன்னாரி, சிற்றவரைக்கிழங்கு, சிறுகுறோட்டைக்கிழங்கு, வெண்ணொச்சி, ஆடாதோடை, இயங்கு, இம்பூறல் இவையெல்லாம்வேர், பூதகரப்பான், ஓமம், கருஞ்சீரகம், திப்பிலி, சுக்கு, வெளுத்தற்பிசின், கடுக்காய் தான்றிக்காய், களிப்பாக்குவகை-பலம்-க-வெண்காயம்-பலம்-க0.

எல்லாம்இடித்து ஓர் மட்பாண்டத்திட்டு பதக்குநீர் சேர்த்து நாலொன்றாய்க் காய்ச்சவும். அரைக்காற்படிவீதம் நாட்குடிக்க நீரும் இறங்கும். வீக்கமும் வற்றும். 32

மேற்சொல்லிய கஷாயம்-படி-ங- ஆமணக்கெண்ணெய் படி-க கலந்து அதில், சுக்கு, பூதகரப்பான், கம்பிப்பி கடுக்காய், கருஞ்சீரகம், திப்பிலி, ஏலம், சுத்திசெய்த.. வாளம், கார்புகா அரிசி, திப்பிலி மூலம், சிறுதேக்கு, கடுகுரோணி, மல்லி, பெருங்காயம், ஈரரத்தை, பெருங்குரும்பை பெருமரத்தோல்வகை-கழஞ்சு-ச வெண்காயம்-ச0 முன்சொன் னககூஷாயம் வார்த்தரைத்துக் கலக்கி மெழுகுபதத்தில்வடித்து இரண்டுகாசிடை தினங்கொண்டு மேலும் பூசிவரவும். பத்தியம்-பாலும் சோறும், முருங்கைக்காய், இலை, அவரை, தூதுளை வற்றல் கூட்டவும். உப்பு, புளி முதலியன நீக்கவும் இப்படி-உரு நாட்கொள்ள வாதகரப்பான், விஷபாகம், வாயு, காமாலைக்கரப்பான், மகோதரம், நீராமை, கவுசி, வாயு, வாயுவிகாரம் இவையெல்லாம் தீரும். நோய் கடுமையாயிருப்பின் கள்ளிப்பால்கூட்டி வடிக்கவும். அப்படி வடித்தால் மோருஞ்சோறும் பத்தியம்கொள்ள. 33

### வாதகரப்பான்சூலைவாயுவின்குணய்

வாத கரப்பான் சூலையென்னும் வாயு தனக்குக் குணமறியில்..
மருவு முடலுட் சுரமாகும் வயங்குந் தலையில்வலியுண்டா..
போத வுடலிற் சிறுபாரம் பொருந்து மிரண்டு விலாப்புறமும்..
பொருவிலலகு சொருகுமது போலேயிருக்குங்குறுவேர்வ..
சூத வுடல்புண் ணெனவேநோஞ் சொல்லுங்குறங்குசற்றதைக்கு..
துகள்கீழ் வயிறு மதைத்துமலஞ் சலமும் விடாமற்றொந்திக்கு..
பாதங் கரமு மெரியுமற்ப னெரியும் வயிறு மிதுதனக்குப்
பகரும் பஞ்ச வெண்ணெயினாற்
பண்ணுமெண்ணெய்வகைகேளே 34

### அஞ்செண்ணெய்த்தைலம்

கேளுநிலத்தில் வாகையுவாப் கிளர்காஞ் சோன்றிபுன் முருங்கை
கிளருந் தில்லை கள்ளிகுமிழ் கிட்டி யாடா தோடை விளா
வாழுமடம்பு வாடுதின்னாப் பாலைவளரும் பாலொடுவை
மருவு மருக்க மிரண்டாக வகுக்குஞ் சாரணை வீழிமகிழ்

நீளுஞ்செங்கத் தாரிபுலி தொடக்கி யுடனே யாதண்டை
திகருங் கரிய விளாத்திவன நிற்கு மல்லிகை யிம்பூறல்
தாழுமூசல் நாறிநன்னார் தயங்கு மப்பைக் கிழங்கிவைவேர்
தண்டு சீந்தி லாம்பல்கோவை சமனா யுரலி லிடித்திறக்கே 35

இடிதுக் காடி தனிற்பிசைந்தே யிசைய வடித்துக் கற்கவகை
யேலம் பாடல் நேர்வாள மெழுசெண்பகப்பூச்செவ்வள்ளி
கொடிப்பீ நாறி வெள்ளுள்ளி கூறும் வசம்பு வாலுளுவை
கொள்ளுங் கருஞ்சீர்வெட்பாலைகுலவுங்கப்பிப்பிசின்சிறுதேக்
கடிக்கேயமருந் திப்பிலியின் மூல மிரண்டு திப்பிலியு
மரத்தை கடுக்கா யோமமிள கறையு மிவைக ளோரளவு
வெடிக்குங் கழற்சிதேற்றாவின்விதையோடெட்டிவிதைகள்சமன்
வேலிப் பருத்தி கீழ்காயி னெல்லி யிலையும் வெண்டிடுமே 36

வேண்டு மாடாதோடைநொச்சி விரியுஞ்செருப்பொட்டடிமு
மிக்க கரந்தை பொடு தலையும் ................
தூண்டு மிலைகள் துவைத்துவெள்ளைத் துய்ய வாட்டின் சலம்
வார்த்துச் சுவறப் பிழிந்தே யோரளவாய்த் துலங்குங் கஷாயந்
தனிற்கரைத்து ஈண்டுங் கஷாய மூன்றுபங்கு மெண்ணெ யைந்
துமொருபங்கா, யெரித்து வடித்து முழுகியுள்ளு மினிதா யருந்
திமேற்பூசத் தாண்டும் வாத கரப்பனதிற் சாருஞ்சூலை வாயு
மெய்யிற், றயங்கு கரப்பன் கவுசிவல்லை சாற்று பிறநீர் மகோத
ரம்பாம் 37

போய்விடுமே காமாலை பாண்டு கைப்புப்
புளிதவிரப் பத்தியமே புரியெந் நாளும்
மேவிடுமோர் காசினிடை கொண்டு வெந்நீர்
விரும்பியே பருகிவர வெயிலு லாவித்
தாவிநடை பயிலுமயில் மீதே யேறித்
தந்தையைசுற் றாமலெங்குந் தானே சுற்றும்
காவலன்றென் கதிரைவரை மருவும் வாசக்
கடம்பனரு ளால்நோயுங் கழன்று போமே 38

## விஷபாகவாதகரப்பனின் குணம் எண்ணெயும்

முகமெலா மழன்று கைகால் வயிறெ ரிந்தே
யுடம்பெலாஞ் சிறுகடுப்பா முடுக்கு நீரும்
புகலரிய மஞ்சலதாய்த் தேக மெங்கும்
பொருந்தியே குளிர்கூசுங் காயும் வீங்கும்
இகலிரண்டாந் தரம்வீங்கி லதுவுந் தீரு
மினிமூன்றா முறைவீங்கிற் சாவாம் வாத
நுவல்கரப்ப னடுத்திடுகி விடுப்புக் கைகால்
நொந்துகடுத் திடும்புண்ணாய் நோகுந் தானே 39

நோக்கியுடன் றலையில்வலி யுண்டா மக்கி
நூர்ந்துமந்தித் திடுமிருக்க வெழும்ப வொட்ட
பார்க்கில்விஷ பாகத்தில் வாதம் வந்து
பற்றியிடி லிக்குணமாம் பகரு நோயைப்
போக்குநற்குக் கோட்டந்திப் பிலியே யோமம்
பூதகரப் பன்சிவந்த சந்த முள்ளி
தேக்கு *செவ் வாலவிதை சுக்கிந் துப்புத்
தேடுகடுக் காய்வசம்பு சேரக் கூட்டே 40

கூட்டுபெருங் காயமிவை யோரொன் றாகக்
கொண்டிடுநாற் கழஞ்சுகொடு வேலி வீழி
ஈட்டுநொச்சி முத்தெருக்க மாடா தோடை
யியங்குமிவை சமூலமுடன் செங்கத் தாரி
வாட்டு **பன்றிச் சிறுமான்சங் குப்பிசெம் முள்ளி
வந்ததலை சூடுவள்ளி யுத்த மாணி
தீட்டுகன்னார் கருஞ்சூரை சிற்ற கத்தி
தீதில்நில வாகையுட னமுக்கி ராவே 41

*செவ்வாலவிதை - நேர்வாளவிதை

**பன்றிச்சிறுமான் என்றே எல்லாப் பிரதிகளிலுங் காணப்படுகின்றது. பொருள் விளங்கவில்லை.

அறையுமிவை வேரெல்லாஞ் சமன தாக
வரைத்துவிட்டே யிலைச்சாக மிரண்டு பங்கு
குறைவறவே யேரண்ட மெள்ளு நிம்பங்
குலவுமெண்ணெய் கூட்டிவடித் துள்ளுங் கொண்டு
பிறைநுதலாய் தலைபிலும்வை மேலும் பூசிற்
பிறங்குவிஷ பாகமதிற் பெருங்க ரப்பன்
உறைவாத கரப்பனுடன் விகூஷபா கத்தி
லுற்றிடுந்தீக் கரப்பனிவை யோடுங் காணே 42

**ஓடுகரப்பன்குணம்**

உடம்பெலா மோடிக் குத்தி யுயர்சிறு கடுப்ப தாகும்
இடம்பெற வொருதா னத்தி லிறங்கியே வீங்கும் வற்றும்
திடம்பெறத் தேக மெங்குஞ் சொறியுநீர் மலமுஞ் செம்மை
யுடன்பெற வோடா வோடு கரப்பனென் றுரைக்கலாமே 43

**எண்ணெய்**

உரைத்தநெச்சி கற்றாழை பேய்ப்பிசுக்கு வீழி
யுடனாடா தோடையுடன் வருகுப்பை மேனி
கரைத்ததொரு கரிசாலை பூமத்தி யங்கு
கருதியசிற் றகத்தியிவை யோரளவு சாறு
குரைத்தசிறு குறிஞ்சியுட னேயசுவ கந்தி
குட்டிக்கு மிழ்செங்கத் தாரிகுட்டி வேரும்
திரைத்தபெரு மருந்துசத்திச் சாரணையு மொன்று
தேர்ந்துதனித் தனியரைத்துத் தேசிக்காய் போலே 44

போலவே யெண்ணெயைந்துஞ் சமன தாகப்
பொருந்துசரக் கதிமதுரங் கோட்டங் குப்பை
ஏலவே திப்பிலிசெஞ் சந்தனத் தோ
டிலங்குநில வேம்புவசம் பிவையோ ரொன்று
சாலவே யரைப்பலமாம் வெண்கா யுள்ளி
தானுமொரு பலம்வடித்துட் கொண்டு பூச
ஓலமுட னோடுகின்ற கரப்பன் மண்டை
யுறுகரப்ப னரிகரப்ப னோடுந் தானே 45

**கருங்கோழிப்பற்பம்**

திரிகடுகு பலைமூன்று வெள்ளை யுள்ளி
செங்காந்தஞ் சாதிலிங்கஞ் சீனக் காரம்
இருசீரம் பெருங்காய மேல மோம
மிலவங்கஞ் சதகுப்பை மதியி னுப்பு
வருகடுகு ரோணியவின் கராம்பு வாசி
வகுத்தகுறா சானியுலு வாக்கு லக்காய்
கருமையுறு கார்புகாச்சாளி யாவுங்
கழஞ்சொன்று சீனத்தின் பட்டை தானும் 46

பட்டைபல மொன்றரையாம் புங்கின் வேரும்
பழுத்தசா ரணைக்கிழங்கோ டமுக்கி ராவேர்
திட்டமுடன் றூள்செய்து கறுத்தக் கோழி
தேடியே காலிறகு குடலுந் நீங்கிப்
பட்டைமுத லதன்வயிற்றுட் பொதிந்து கொண்டு
பானையினு ணாற்சதுரக் கள்ளி வெட்டி
இட்டமுடன் றுண்டாக்கி *யயத்தி னீரு
மிட்டதன்வாய் **நெய்யரியால் வேடு கட்டே 47

வேட்டின்மேற் கோழிதனை வைத்து மூடி
விதித்தபடி கடாக்கினியா யெரித்த விந்தால்
நாட்டமுட னெடுத்திடித்துப் பற்ப மாக்கி
நற்றேனி லுண்டுகடும் பத்தி யங்கார்
வாட்டமுற வோடுகின்ற கரப்பன் வாதம்
வரு கரப்பன் விஷபாக கரப்பன் வாயு
பாட்டிலுரைத் துள்ளபடி தீரு மென்று
பகர்தவத்துக் குறியமுனி பகர்ந்த வாறே 48

*அயத்தினீர் - வெள்ளாட்டுச் சலம், சில பிரதிகளில் "துண்டாக்கிப் போட்டு நீருமிட்டு" என்றும் வேறு சில பிரதிகளில் "இட்டமுடன் துண்டு துண்டமாய் நறுக்கியிட்டு" என்று நீர் சேர்க்காமலும் கூறப்பட்டிருக்கின்றன.
**நெய்யரி – பன்னாடை

**வாயுவாதகரப்பன் குணம்**

வாயுவாத கரப்பனுடன் மருவி வருத்துங் குணங்கேளாய்
தேயுந்அந் தேக மொருபக்கந் திமிர்த்துச் சந்து குத்துளையும்
காயுமேனி கடுப்புண்டாங் கனத்து குளிருங் கண்டுஞ்சா
வெயினுளைவு மிக நுடங்கும் வெயிலுந் தீயும் வேண்டுமதே 49

**எண்ணெய்**

வேண்டுங் கருடன் வெண்சிவப்பு வெளுத்தற்பிசினுமுலுவாவும்
நீண்ட பெருஞ்சீ ரகமுள்ளி நீல மலைநார் பெருங்குரும்பை
தாண்ட வசம்பு மோரொன்று சமனிற் சிறுகறுக் காய்துத்தி
மூண்ட கீழா தெளிகுருந்து முருசு களப்பன்னை வெள்ளெருக்கே 50

எரு(க்கு) கான்றை யிலைக்கள்ளி யேகநீர் நீலிப் பாலுடனே
நரு(க்கி) தேங்காய்ப் பாலளவு நாழி நாழி யோரொன்று
சரி(க்கு) பிராயுஞ்சமூலமதாய்ச்சமனாமணக்கெள்ளெண்ணெய்விட்டு
உரு(க்கி) மெழுகு பதம்வடித்தே யுடம்பிற் பூசி மாற்றுவிரே 51

**வாதகரப்பன் சூலை**

உடம்பெலா நொந்து மொளியெலாங் கட்டு முயர்விழி கால்
குத்தெடுக்கும், தடம்பெறு துயரத் துடன் விழி பூளைசாறி
புகைச்சலுண் டாகும், இடம்பெறு மொருபாரிசம்பிடர்வாங்
மிருந்தெழுந் தாற்பொறி யார்க்கும், மடம்பெறு சுழற்சி நித்
திரை வேர்வு வரில்லாத சூலையென் றியம்பே 52

**திமிர்வாதகரப்பான்**

தலையுங் கனத்துக் குரலரிந்து தறுகா துடம்பிற் றிமிருண்டாய்
உலையுங் காலும் வீக்கமுமா யுலையா விருக்கு முயிர்ப்புற்று
மலையுஞ் சடுதி மீளாது வலுவைக் குறைத்து வரண்டுவரும்
கொலையுஞ் செய்யுந் திமிர்வாதக் கொடிய கரப்ப னிதுவாமே 53

**பூச்சு**

இலைக்கள்ளிச்சாறும் வெள்ளாட்டுப்பிழுக்கையும் குழைத்துப் பூசவும். 54

**இலைக்கள்ளியெண்ணெய்**

இலைக்கள்ளி நாய்வேளை நொச்சி வீழி
யெருக்கலைமா தளைதிராய் பேய்பிசுக்குத்
துலக்கமுறு பூமத்தை நிம்ப மெல்லாஞ்
சொற்றபடி யிலைச்சாறு நிம்ப வெண்ணெய்
கலக்கமறு மெள்ளெண்ணெ யிலுப்பை யெண்ணெய்
கருதுமே ரண்டவெண்ணெய் சமனாய்க் கொண்டு
மலைத்தலறு குந்துருக்க மஞ்சள் கூட்டி
வடித்தெண்ணெய் முழுகியுள்ளு மேலும் பூசே 55

**புங்கெண்ணெய்**

புங்கு சங்கொடு சங்கங்குப்பி குருந்தெ ருக்கது கொன்றையும்
பொருந்து நொச்சி கரம்பைசித்ரமூலி தூதுளை வட்டுவேர்
இங்கு லுத்தயிர் வேளை சாரணை நிம்ப சம்பிரங் காய்பரா
யிந்து கெந்தரி தார மோடகில் கார மான வசம்பதும்
அங்கு வந்திடு சுக்கு திப்பிலி யத்தி திப்பிலி மோதகம்
மான தோர்கடு மரிசுசீரக மத்த வெள்ளுள்ளி வாளமும்
இங்கிணங்குமெரண்டவெண்ணெயெளளெண்ணெய்நெய்யது
மொக்கவேயேறிடுந்திமிர்வாதமுற்ற கரப்பனீங்க வெரித்திடே
56

**வரட்சிக்கரப்பன்குணம்**

வாருஞ்சொறிந்துமயங்கா தேவரட்சிக்கரப்பன் குணங்கேன்
மின், ஊருஞ் சொறியும் பரபரத்தே யுடம்பு வற்றி யதைப்புண்
டாம், தீரு மிருந்து பரந்தேறுந் திகமாயச் சாம்பல் பொருக்கே
றும், ஆரு மொருவர்க் குண்டானா லசடாய்ப் புலால்போல்
நாறுமதே 57

கால்தலை யுடம்ப தெங்கும் கனக்கவே சிறுசி ரங்காய்ச்
சேலது கெட்டு வற்றிக் திடமுடன் சொறிவு மாகிச்
சாலவே காந்து நாசி மிடறுடன் கரக ரக்கும்
மால்தரு மடமான் கன்றே வரட்சிசேர் கரப்ப னாமே 58

## புங்கங் கொட்டை யெண்ணெய்

புங்கங் கொட்டை பசுமஞ்சள் புதிய வெள்ளைப் பாஷாணம்
அங்குஞ் சொன்னோம் வேம்பாட லவுரிச் சாறு நல்லெண்ணெய்
பங்கம் படாதே சொறியாமற் பதத்தில் வடித்து மேற்பூசித்
தங்கும் வெய்ய தண்ணீரிற் றானே குளிக்கத் தரியாதே 59

## சாதாவேரியெண்ணெய்

தண்ணீர் விட்டான் கிழங்கதனிற் சாறு தானு நானாழி
வண்மைக் குரிய வரிக் குமரி மடலிற் சாறு நானாழி
உண்மைக் குரிய தூதுவளை யுற்றே நாலு பலம்வேரும்
நண்ணிப் படியே கஷாயத்தில் நன்றா யூறப் போடுவதே 60

ஊறிப் பிழிந்து வடித்தெடுத்தே யோரைந் திரண்டா..
காய்த்தபின்னை, ஆறிப் போமுன் னல்லெண்ணெ யடுக்க நாழி..
விட்டுக், கூறிற் பெரிய சீவந்தி கொடு வேல்கருஞ்சீர் வேம் பாடல்
ஏறக் கூட்ட வேண்டாமே யெட்டே யிரண்டு கழஞ்சு கொள்.. 61

## கண்டக்கரப்பன்குணம்

போதச் சிரமே வரண்டுமிகப் பொருந் துமுழுக்கைவிடுவதௌ
மோதிப் பற்றிச் சொறிந்திருமி மூக்கு நீரும் விழவேண்டும்
சேதப் படவே பித்தமிகச் செய்யுங் குணங்கன் சிலேற்பனமும்
காதிற் றினவா மிடறரிக்குங் கண்டக் கரப்ப னிதுவாமே 62

கண்டத்திற் கனத்து விம்மிக் கரகரத்தரித்துப் புண்ணாய்
மிண்டியே கஞ்சி தண்ணீர் விழுங்கிடிற் காதிற் குத்தும்
துண்டமுங் கனத்து நொந்து தும்மிடின் மிடற்றில் நோவாம்
கொண்டிடுங் கண்ட மீதிற் குறித்திடுங் கரப்ப னாமே 63

## தூதுளையெண்ணெய்

தூது மோரிலைத் தாமரையுந் தூய முத்த நன்னாரி
ஓதுஞ் சாரணை திரிகடுகு முயர்ந்த கருஞ்சீர் வசம்புள்ளி
காதுங் கையான் றகரையுடன் கைக்கும் வேம்பிற்றோற்றண்ணீர்
போத வெண்ணெய் தனி ற்கூட்டிப்பொருந் தவெரித்து
நக்குவதே 64

### தூதுளைநெய்

தூதுவட் டாடா தோடை சொற்கண்டங் காரி நொச்சி
ஓதுகாற் றோட்டி யோடே யுறுதுத்தங் கடுக்கா யிந்துப்
பேதமில் திப்பில் பின்னும் வெண்காரம் பசுவி னெய்யிற்
போதவே யெரித்துப் பூசப் புகல்கண்டக் கரப்பன் போமே 65

### துரிசெண்ணெய்

துரிசு துத்தங் களிகைப்புக் கடுக்காய் பாடல்
துவர்ச்சந்தங் திரிகடுகு மதுரஞ் சாதி
இருசீர்வேர் கருமுருக்குக் கான்றை வட்டோ
டின்பூறல் கருஞ்சூரை நன்னார் தூது
பெருமருந்து குமிழ் துடரி யுடனா வாரை
பிடியளவு தூளதிலே யெண்ணெய் கூட்டிக்
கருதரிய கண்டத்திற் கரப்ப னுக்குக்
கற்றோர்க ளுரைத்தார்கள் கருதிச் செய்யே 66

### முக்கூட்டெண்ணெய்

நன்னாரி தூதுவளை பெரும ருந்து
நவில்கான்றை யெருக்குநொச்சி நற்காற் றோட்டி
சொன்னார்சிங் கிலிமுத்த மசுவ கந்தி
தூயவெருக் கிருவேலி யிலாமிச் சின்வேர்
மின்னார்கண் டங்காலி தோடை யேக
விதழ்க்கஞ்சங் குப்பிளாய் வேர்க ளெல்லாம்
பொன்னேயொன் றொருநிறையாய்ச் சாறு வள்ளி
புகன் முசுக்கை பிரமியுட னாடா தோடை 68

தோடுபெறு மகாணி நாவித் தண்டை
சொற்பருத்தி தழுதாழை காக்க ணத்தின்
பிடுபெறு கோவையிவை சாறோர் நாழி
பெருகவகைக் களந்துவிட்டு நிம்ப வெண்ணெய்
நாடுபெறு மேரண்ட மெள்ளி லெண்ணெய்
நவின்றபடி வகைவகைக்கோர் நாழி கூட்டிக்
காடுபெறு சடாமாஞ்சி லரத்தை யுள்ளி
கமழ்கோட்ட மிலவங்கங் கராம்பு வாசி 69

வாசிபெறு மதிமதுரந் தேவ தாரம்
வசம்புசத குப்பைதிரி கடுகு சோலம்
தேசுபெறு மிருசீர மேல மோமந்
திகழ்வெளுத்தல் செண்பகப்பூச் சிறுநா கம்பூக்
காசுபெறு மாயாக்காய் கடுகு ரோணி
கழஞ்சுவகைக் குக்கூட்டி வடித்த வெண்ணெய்
நாசிவிட்டுப் பூசயுள்ளு மடசி மூழ்க
நாடாது கண்டத்திற் கரப்பன் போமே 70

**கபாலக்கரப்பன்குணம்**

காது தினவாங் கண்தினவாங் கண்டந் தினவா முகந்தினவாம்
மோதுந் தலைநோஞ் சொறிவுண்டா மூக்குத் தினவா நீர்ப்பாயும்
ஓது முழுக்கால் நனைவதனா லொன்றைக்குறைத்துச்சிரம்வரளிற்
சேத மிகவே தலையிடத்திற் சேருங் கபாலக் கரப்பனிதே 71

சிரத்தினிற் சொறிந்து வீங்கித் திமிர்த்திடுந் தலைநோ வுண்டாம்
உரத்திடு மரித்துத் தும்மி யூர்ந்திடுந் தண்ணீர் பாயும்
சரத்தினிற் குறையுங் காது சலிப்புற விரையு மூதும்
வருந்திடுங் கபால மீதில் வந்திடுங் கரப்ப னாமே 72

அரித்திடு நாசி கண்ட மடைத்திடு நீரும் வீழும்
எரித்திடுங் கொதிக்கு மண்டை யிடிப்புடன் பதைப்பு முண்டாம்
சரித்திடு மீயல் போலச் சஞ்சரித் திடுங்குத் துண்டாம்
பரித்திடுங் கபால மீதிற் படர்ந்திடுங் கரப்ப னாமே 73

**எண்ணெய்**

நன்னாரி தூதுவளை முத்தக் காசு
நயந்த பொன்னார் சீதேவி சிவனார் வேம்பு
பொன்னாரு மோரிதழின் கஞ்சஞ் சீந்தில்
பொன் முசுட்டை யுடன்வட்டு நிலத்தில் வேம்பு
வன்னேரு நெற்றுகுப்பை சார ணைவேர்
வகைகழஞ்சு திரிகடுகு கடுக்கா யிந்து
மின்னாரு மதிமதுரங் கடுகு ரோணி
விளம்புகருஞ் சீர்வசம்பு வெள்ளை யுள்ளி 74

உள்ளிகைப்புச் சென்னகரம் பழத்தி னோடே
யுறுவெளுத்தற் பிசினிவைகள் சமன தாக
எள்ளெண்ணெய் விட்டுவடித் துறவே பூசி
யினிமைதரும் வெந்நீரில் முழுகத் தீரும்
விள்ளுகாக் கணங்கோவை சமூலச் சாறு
வேப்பெண்ணெய் சமனாக விரவிக் கொண்டு
வெள்ளையுள்ளி மூன்றுபலம் வசம்பு மஞ்சள்
மிக்கதிரி கடுகேல முலுவா வோமம் 75

ஓமமுடன் பலைமூன்று கராம்பு வரசி
யுறுமரத்தை சாளியாக் கொத்த மல்லி
நாமமுறு மிருசீரங் கழஞ்சு வீத
நாடியே கரைத்தெரித்து வடித்த வெண்ணெய்
ஏமமுறப் பூசிவரக் கபாலந் தன்னி
லிசைகரப்ப னசுகுணியுந் தீருமென்று
தாமமுறு மணிமார்பன் கதிரை மேவுந்
தமிழ்க்குரவ னகத்தியற்குச் சாற்றி னானே 76

**செங்கரப்பன்குணம்**

சிவந்துதான் தடித்து மெய்யிற் றினவுடன் வீங்குத் துண்டித்
துவந்துதான் குளிர்வெ துப்பு மூண்டுநெஞ் சேறிற் கொல்லும்
பவந்தனை யகற்றுந் தெய்வப் பண்ணவன் கதிரை வேலன்
தவம்பெறு முனிக்கு முன்னாட் சாற்றுஞ்செங் கரப்ப னாமே 77

**எண்ணெய்**

நொச்சி யுடனே கற்றாழை நுவலபூ மத்தை பேய்ப்பிசுக்கு
மெச்சுங் கையான் சிற்றகத்தி வீழியாடா தோடை சங்கு
வைச்ச குப்பை மேனியிவை வகுத்த சாறொன் றொருபடியாய்
இச்சை பெறும்வே ரசுவகந்தி யியலுஞ் சத்திச் சாரணைவேர் 78

வேர்சேர் குட்டி வேலம்வேர் விளம்பு நிலத்துக் குமிழினது
வேருங் காட்டுக் குறிஞ்சாவின் வேரும் பெரிய மருந்தினது
வேருந் தேசிக் காயளவு விரும்பு மெண்ணெ யைந்துசமன்
தேரு மதுரம் வெண்கோட்டந் திப்பில் குக்கில் செஞ்சந்தம் 79

சந்த முடனே சதகுப்பை சாரும் பூவி னிம்பமதும்
கந்த முறவே பலமரையாய்க் கவின்வெண் காரம் பலங்காலும்
முந்தி யுரைத்த சாற்றரைத்து மூழ்கி யிரண்டு காசிடைகொள்
அந்த முறவே மேலும்பூ சகலு முரைத்த செங்கரப்பன் 80

### மூலக்கரப்பன்

காலினிற் றலையிற் கையிற் கடினமாஞ் சரிர முற்றும்
சாலவே சொறிந்து புண்ணாய்ச் சட்டையா யுரித்து பின்னும்
வாலிதா மூல மீதில் வரண்டிடு மனலாய் வீசும்
கோலியே தினவு பற்றிக் குட்டமாய் வெடிந்துப் புண்ணாம் 81

வெடித்திடு நெடுநாண் மாறி விட்டுப்பின் கடினம் பண்ணிக்
கடித்திடுஞ் சொறியு மூருங் கனப்புறு திமிருண் டாகும்
பொடித்திடும் புள்ளி யாகிப் பொருமிடு மிரும லுண்டாம்
தடித்திடு மூல மீதிற் றங்கிய கரப்ப னாமே 82

### அசுகுணிக்கரப்பன்

தலையினிற் சரீர மெங்குந் தடித்துப்பின் சொறிந்து புண்ணாய்
நிலையினிற் றண்ணீர் பாய்ந்து நின்றகிற் பாணி போலும்
உலையவே வீங்கி வற்றி யுற்றிடு நெடுநா ணிற்கும்
அலைவுறக் கடினஞ் செய்யு மசுகுணிக் கரப்ப னாமே 83

### கொள்ளிக்கரப்பன்

கொள்ளிகொண் டடித்தாற் போலக் கொப்பளித் தியங்குபோலப்
புள்ளியாய்ப் பொடித்து மேனி பொருக்கதாய்க் கருகி மாறி
வெள்ளிபோல் வெளுத்துப் பின்பு சொறிந் தூர்ந்து தீரு மீது
ஒள்ளிய கொள்ளி தட்டிக் கரப்பனென் றுரைக்க லாமே 84

### கற்கரப்பன்

கல்லெனத் திரண்டு வீங்கிக் கடினமாய் நெடுநா ணின்று
வில்லெனத் திமிர்த்தி றுக்கி மிகுதியு முவாதி செய்து
சில்லென மருந்தை மீறிச் சினத்திடுஞ் சியலாய்க் கட்டும்
புல்லிடுங் கற்க ரப்பன் குணமிது புகலுங் காலே 85

**மொத்திக்கரப்பன்**

மொத்தியாய்க் காலிற் கையின் முதிரவே வீக்க மாகி
மெத்தியே திமிருண்டாகி விறைத்திடு முளைந்து குத்தும்
நித்தியஞ் சோம்ப லாகி நின்றிடு நெடு நாளாகக்
குத்திரா மான மொத்திக் கரப்பனின் குணமி தாமே 86

**காதிற்கரப்பன்**

வீங்கிடும் வெடித்துப் புண்ணாய் விதனமாய்த் தண்ணீர் பாயும்
தாங்கிடி னிரத்தஞ் சாருஞ் சரிந்திடுந் தண்ணீர் போலத்
தீங்கிடுஞ் சொறிந்து மிண்டித் தினவதாய் நின்று மாறும்
பாங்குறுங் காதிற் சேர்ந்து பற்றிய கரப்ப னாமே 87

**ஊதுகரப்பன்**

வீங்கிடுஞ் சரீர முற்றும் வெளுத்திடு முட்டுத் தொய்வாய்த்
தாங்கிடும் புண்போன் மேனி தாகிக்கும் வெதுப்புண் டாகும்
ஊங்கிடுஞ் சொறிந்த ழுற்று மூண்கொளி லதிமுட் டாகும்
வீங்கியூ திடுங்க ரப்பன் செய்குணம் விளம்பி னாரே 88

**சொறிகரப்பன்**

சொறிந்திடும் தடிக்கு மேனி துயர்செயுந் தண்ணீர் பாயும்
செறிந்திடுஞ் சிரங்கு போலத் தினவுடன் கடித்தே யூரும்
முறிந்திடுங் குட்டம் போல மொய்த்திடும் பொருக்க தாகும்
அறிந்திடுஞ் சொறிக ரப்ப னழற்றியே யெரிவு முண்டாம் 89

**அரிகரப்பன்**

அரிந்திடுஞ் சொறிந்து புண்ணா யழற்றிடுந் தண்ணீர் பாயும்
எரித்திடு மிடித்துக் கல்லி யெடுத்திடு மிரத்தஞ் சாரும்
பிரித்திடுந் தசையாய் வீழ்த்தும் பிளந்திடுங் கடினம் பண்ணும்
கரித்திடு மரிக ரப்பன் செய்குணங் கழறுங் காலே 90

**வெடிகரப்பன்**

வெடித்திடுங் கால்கை மிண்டி வேகித்துச் சொறிந்து புண்ணாய்ப்
பொடித்திடுந் தண்ணீர் பாயும் பொருக்கதாய் மாறி மாறிப்
பிடித்திடுந் திமிருண் டாகும் பேதிக்க வுளையுங் காலும்
கடித்திடும் வெடிக ரப்பன் செய்குணங் கழறுங் காலே 91

**புடைக்கரப்பன்**

புடைத்திடுந் திரண்டு வீங்கிப்பொத்திப்போற்குரும்பைபோலாய்
உடைத்திடு மவிடம் விட்டே யுற்றுவே றிடத்திற் கட்டும்
அடைத்திடும் வீங்கி வற்று மனேகநாட் சென்று கட்டும்
கடைப்படும் புடைக ரப்பன் செய்குணங் கடின மாமே 92

**காணாக்கடிவிஷகரப்பன்**

தடித்திடுந் தண்ணீர் பாயுந் தானத்திற் சொறிந்து புண்ணாய்த்
துடித்திடுங் கருகி மாறித் துயர்செயுங் குட்டம் போல
வெடித்திடுந் தினவுண் டாகும் வெளுத்திடுஞ் சரீர முற்றும்
கடித்திடு மரவால் வண்டாற் கடிவிடக் கரப்ப னாமே 93

**பொதுச்சிகிச்சை**

**பலவிலைப்பற்பம்**

முருக்கமிலை வவ்விலொட்டி பருத்தி வீழி
முசுமுசுக்கை காஞ்சோன்றி குப்பை மேனி
திருக்கிளரு நாகவல்லி கொடிக்க ழற்சி
தேடியங்கு கரிசாலை மாலின் காந்தி
மருக்கிளரு மறிதீண்டாப் பாளை குன்றி
வளர்செப்பு நெருஞ்சிபொடு தலையி னோடே
அருத்தியுறுங் கரியகாக் கணவன் கோழி
யவரையுடன் பிரமிசிவ கரந்தை யாமே 94

இலையொன் றுக் கொருநிறையா யுலர்த்தி மெல்ல
விடித்தரித்துக் கற்கமினி யியம்பக் கேண்மின்
பலைமூன்று சாதிக்காய் கராம்பு வாசி
பகருமிரு சீரகந்திப் பிலியே யோமம்
நலமொன்று மதிமதுரங் கடுகு துத்த
நவில்துரிசு மிளகிரச மரியின் றாரம்
விலையொன்றுஞ் சாதிலிங்கங் குந்து ருக்க
மிகாமலிவை சமனாகப் பொடித்துக் கொள்ளே 95

கொண்டவிரு பொடியுமொரு சமன தாகக்
கூட்டியே கலந்தரைத்து வெந்த நீரில்
அண்டியுறு தேனதனி லின்னு மேற்ற
வனுபானந் தமிற்கொள்ளக் கரப்பன் சூலை
மண்டியுறு முறிகிரந்தி கரப்பன் வாதம்
வருமூது கரப்பனுடன் புடைக ரப்பன்
அண்டர்படைக் கதிபதிதென் கதிரை மேவு
மாறுமுக வேலனரு ளாற்போ மன்றே 96

**கெந்தகச்சூரணம்**

கெந்தகந் துரிசு துத்தங் கிளருநற் சீர நெல்லி
வந்திடு மிருக ழஞ்சு வகைக்கசந் தீண்டாப் பாளை
தந்தபூ னைக்க ழற்சி தருமுருக் கியங்கு பன்னல்
இந்தவிவ் விலைக ளொவ்வொன் றொருபிடி யெடுத்துக் கொள்ளே 97

எடுத்தபின் னிலத்தின் பாக லிருபிடி யாகக் கொண்டே
இடித்தரைத் தனுபா னத்தி லுண்டிட வரிக ரப்பன்
பொடித்திடு புடைக ரப்பன் புகன் றிடு பறங்கி மீதில்
அடுத்திடு கரப்பன் றானு மகன்றிடு மென்றார் நல்லோர் 98

**இரசசூரணம்**

திப்பிலிதிப் பிலிமூலங் கராம்பு வாசி
திகழுமனோ சிலையிரசங் காந்தங் கோட்டம்
நற்புறுசீ ரகமிளகு கடுக்கா யுள்ளி
நல்லசமோ தகமதுரங் கருஞ்சீ ரேலம்
பொற்புறுசுக் கரிதார மரத்தை நெல்லி
பொருவுபெருங் காயமிந்துப் பிலவஞ் சாதி
அற்புறுகெந் தகமுலுவாத் துரிசு துத்த
மக்கறா மாயாக்காய் சாத்ர வேதி 99

வேதிநறுஞ் சாதிலிங்கங் கொத்த மல்லி
விளம்பியநற் கடுகிவையொன் றிருக ழஞ்சாய்ச்
சாதிநறு முருங்கையிலைச் சாற்றிற் சேர்த்துத்
தனியிடித்து வெருகடிதே னதனிற் கொள்ளில்

ஓதுமுறி கிரந்திகுட்டங் கரப்பன் வாத
முளைவாதங் கிரந்திமிடை யுடலிற் புண்ணோச்
சோதிவடி வேன்முருகன் கதிரை மேவுஞ்
சுப்பிரமண் ணியனருளாற் றொலைந்து போமே 100

### இரசசூரணம் -2

சீரக மிரசங் காந்தந் திப்பிலி மிளகு கோட்டம்
நேரச மோத மேல நெல்லிமா யாக்காய் சுக்குக்
கார்தரு கராம்பு வாசி கடியதோர் நெல்லிக் கெந்தம்
பார்தரு சீனப் பாகு பகர்ந்திடு துரிசு துத்தம் 101

துத்தநே ரரியின் றாரந் தூயதி மதுரஞ் சாதி
வைத்தசா திலிங்கங் கொத்தம் வருமனோ சிலைய ரத்தை
உய்த்தசாத் திரத்தின் வேதி யுறுமா பொடிக டுக்காய்
சுத்தமா ரிலவந் தான்றி சொற்பெருங் காயங் கூட்டே 102

கூட்டியொன் றிருக ழஞ்சு கூறிய முருக்கி யங்கு
நாட்டிய கொடிக்க ழற்சி நற்பன்னல் முருங்கை தானும்
ஈட்டியே யிடித்தொன் றாக வினித்திடுந் தேனிற் கொள்ளில்
வாட்டிய கரப்பன் குட்டம் வாதத்திற் சூலை போமே 103

### சீனப்பாகுச்சூரணம்

சீனக்கிழங்கு பலமிரண்டு சேரு மிரசஞ் சாதிலிங்கம்
மானப் பொன்னி னரிதாரம் வகுத்த நெல்லிக் காய்க்கெந்தி
கானத் துற்ற குறாசானி கருதுங் குலக்காய் மாயாக்காய்
தானத் துற்ற வெட்பாலை சாரக் கறாவுங் கழஞ்சொன்றே 104

ஒன்று மரிய நிருவிடமு முற்றே கழஞ்சிற் பாதிகொண்டு
நன்றா யிடித்துக் கான்றையிலை நவிலு நொச்சி கொடிக்கழற்சி
ஒன்றாய்க் கலந்து சாறிவைக ளூரலிற் சுவற விடித்துலர்த்தி
நன்றாய்ப் பின்னு மிடித்தரித்து நாடும் வெருகி னடிகொள்ளே 105

### அசுகுணிக்கரப்பனுக்கு கொதியெண்ணெய்

புங்கின்வே ரெருக்கு லம்வேர் புகலெழு முள்ளின் வேரும்
இங்குறு செங்கத் தாரி யிருசீர்திப் பிலிவ சம்பு
உங்குறு குலக்கா யீர வுள்ளியுஞ் சமன்றூள் செய்து
தங்கிய வெண்ணெய் தன்னிற் கொதித்துள்ளு மேலும் பூசே 106

### கோழியவரைச்சாற்றெண்ணெய்

குங்கிலியம் பொரிகாரஞ் சீனக் காரங்
குணமான துரிசுதுத்த மரியின் றாரம்
தங்குமனோ சிலையிரச மூசிக் காந்தஞ்
சாதிலிங்க மிரண்டுசீ ரகங்க டுக்காய்
பொங்குகைப்புக் களிப்பாக்கு மிளகு கோட்டம்
புகலுநெல்லிக் கெந்தகம்வேம் பாடல் துத்தம்
பங்கமறு திப்பிலிநற் கிருமி யின்றன்
பகைவாள மொருகழஞ்சு வகைக்குக் கூட்டே 107

கூட்டியிடித் தேசாறு முசுமு சுக்கை
குலவியங்கு வகைக்குககாற் படிவீ தம்பின்
நாட்டமுறு பருத்தியிலைச் சாறு தானு
நாடுமரைப் படியெலுமிச் சம்ப ழத்திற்
தோட்டமுறு சாறதுவுங் குக்கு டத்திற்
சேரவரை தனிற்சாறும் படியொவ் வொன்று
ஆட்டியுறு மெள்ளெண்ணெய் படியொன் றாகு
மரியநிம்ப வெண்ணெயரைப் படியு மாமே 108

### தாளங்காய்க்கிரந்தியெண்ணெய்

குருவருளாற் றாழங்காய்க் கிரந்தி யெண்ணெய்
கூறினார் முன்னோர்கள் குறித்துக் கேண்மின்
அருளுடைய தாழங்காய் குக்கு டத்தி
னவரைசங் சங்குப்பி யியங்கு தானும்
தெருளுடைய குன்றிமணி முண்மு ருக்குத்
திறமாகச் சாறுவகை படியொவ் வொன்று
திருவுடைய கெந்தகமுந் துரிசு துத்தஞ்
சீரான நீர்வெட்டி முத்துங் கூட்டே 109

கூட்டியதோர் கழஞ்சிவைகள் நாலொவ் வொன்று
குணமான சேங்கொட்டை நாற்பத் தைந்து
நாட்டுவெள்ளைப் பாஷாணங் கழஞ்சி ரண்டு
நயந்தவிரு சீரகமுங் கழஞ்சொவ் வொன்று
வாட்டியுறு நேர்வாளங் கொட்டை நூறு
வகைகேள்திப் பிலிகிருமி கழஞ்சொவ் வொன்று
மூட்டியதோர் வேப்பெண்ணெய் தேங்கா யெண்ணெய்
முடிவாக வொவ்வொன்று படிதான் சேரே 110

சேருமிந்த வெண்ணெய்தனை வடித்துக்கொண்டு
திறமாயோர் சிப்பியெண்ணெ யுள்ளே கொள்ளிற்
பாருமினி யிரண்டுதரம் பேதி யாகும்
பருவமுடன் மூன்றரைநாண் மேலும் பூசு
காருமினிப் பத்தியமாய்ப் பாலுஞ் சோறுங்
கருத்துடனே யரைப்புவெந்நீர் கழற்றி யிட்டாற்
தீருமிதிற் சூலையொடு குட்ட ரோகந்
தீராத சொறிகரப்பன் செங்க ரப்பன் 111

கரப்பனுடன் செவ்வாப்புக் கருவாப் புத்தான்
கருகாத புண்புடைப்புக் கருங்கி ரந்தி
அருப்பமுறும் வண்டுகடி மேக வெட்டை
யகலாத சந்துகளிற் றடிப்புப் புண்கள்
விருப்பமறுங் கண்டத்திற் கிரந்தி வீக்க
மேலெங்கும் பொருக்கெழுதல் வெடிக ரப்பன்
கருப்பமுறு மாதர்களின் கிரந்தி வீக்கங்
காணாத கடிவிஷத்திற் கரப்பன் போமே 112

ஒருபிரதியில் கரப்பன்ரோகப்பகுப்பு- குணமும் சிகிச்சையும் பின்வருமாறு காணப்படுகின்றது.

**வாதகரப்பன்**

வாதமே நாடி யாகி வந்திடுங் கரப்பன் றானுங்
சேதமாய்த் திமிருண் டாகுஞ் சேர்ந்திடுங் காலிற் புண்கள்
ஈதுதான் முன்னே செய்த விடர்வினைப் பயனா லுண்டாம்
போதவே திமிர்வா தத்திற் பொருந்திய கரப்ப னாமே 113

**சிகிச்சை**

**வேது**

பருத்திநிம்ப மாமணக்கு நொச்சி யோடு
பகர்கான்றை மாவிலங்கை கால டக்கி
எருக்குடனே தயிர்வேளை யாடா தோடை
யெலுமிச்சை தில்லைபுங்கு தோடை வேளை
அருத்தியுறும் பயறியுட னுத்த மாணி
யந்தவிலை யெலாமவித்து வேது வார்க்க
வருத்தமுறும் பிரமியத்தின் வாத மோடு
வருவதாக கரப்பனது மாறிப் போமே 114

முன் 64ம். பக்கத்திற்கூறிய இரசபற்பம் இங்கு கூறப்பட்டிருக்கின்றது.

**வாதபித்தக்கரப்பன்**

வாத பித்த கரப்பனது வகைகே ளுடலில் வெதுப்புண்டாம்
சேத மாக வுடல்வெளுக்குஞ் செறிந்தே சொறிவு முண்டாகும்
போத நாடி நாகமட்டை போல நடக்கு மிளைப்புண்டாம்
பாதஞ் சந்துமொளிகளெலாம்பலபுண்ணுண்டுசொறிவுமுண்டே 115

**சிகிச்சை**

**காந்தபற்பம்**

ஊசிக் காந்தம் பொன்னினரி தார மிரச மோரொன்று
வாசி யாக முக்கழஞ்சு மன்னு மரபொடி *யிருகழஞ்சு
நேச மாம்புது மண்ணோடு நிறுத்து நாலு கழஞ்சாக
வாசி யான கரிசலை மன்னு கோமிய மதுதேடே 116

தேடி யோரொன்றொருகொத் துச்சிறக்குஞ்சாற்றின்முன்னுரைத்த
நாடு மருந்து போட்டிறுக நன்றா யவித்து வற்றியிடித்
தோடுந் தேனிற் றின்பீரே லுடனே மாறும் வாதபித்த
நாடுங் கரப்ப னெனவுரைத்தார் நன்கு தேர்ந்த முனிவரரே 117

**வாதசிலேற்பனக்கரப்பன்**

வாதமுஞ் சிலேற்பந் தானு மருவிய நாடி யாகில்
ஓதிய கோழி யட்டை போலவே யுரத்துப் பாயும்
போதவே யுடம்பு வற்றும் புண்படுஞ் சரீர மெங்கும்
சேதமா யிரும லுண்டாந் திரண்டிடும் வயிற்றில் வாய்வே 118

## சிகிச்சை

## இரசகுளிகை

முதுவேம்பிற் பட்டைபலமன்ப தாகு
மோசமிலாச் சலம்பத்து நாழி விட்டே
அதுதானே வற்றவெரித் தரைக்கொத் தாக
வாற்றியே யிறுத்ததனி லிரசங் கெந்தம்
புதிதான கச்சோல மொன்றி ரண்டு
புகல்கழஞ்சு நிறையாகப் பொருந்தக் கூட்டி
விதிசேருஞ் சந்தனமோ ரறுக ழஞ்சு
விளங்கவின்முக் கழஞ்சுநிறை மேவக் கூட்டே 119

*அறுகழஞ்சு என்பது பாடமோ என்று ஐயம்.
கூட்டியே முன்னுரைத்த சாற்றை விட்டுக்
கோதறவே யரைத்துருட்டி யுண்டை யாக்கித்
தேட்டமுட னேதேனிற் கொள்வீ ராகிற்
சீறியெழும் வாதசேற் பனக ரப்பன்
கூட்டைவிட்டே யோடுமது மெய்ம்மை யென்று
குறித்துரைத்தார் வேதமுறை கூறு கின்றோர்
பாட்டி லுரைத் துள்ளபடி செய்து கொண்டு
பயன்பெறுவீர் முருகனருட் பண்பி னாலே 120

## எண்ணெய்

தானேகே ளிந்தவுண்டை தன்னிற் கூட்டுஞ்
சரியாக நல்லெண்ணெய் வேப்பிலெண்ணெய்
ஆனதொரு கற்றாழை சாத்தாவாரி
யதன்கிழங்குஞ் சாறுபடி யாக நாலு
தேனேகே ளெண்ணெயொரு பங்க தாகத்
சேர்த்திடுதூதுளைவேருங் கொடுவேல் வேரும்
மானேகேள் சிறந்தரைத்துப் பதம்வ டித்து
வைத்திடுவாய் சிரத்தினிலே மாறுந் தானே 121

மாறுகின்ற பத்தியங்கே ளாட்டுப் பாலும்
வளமான முருங்கையிலை முருங்கைப் பிஞ்சும்
தேறுகின்ற வுப்பில்லாக் கருவா டாகுஞ்
செய்யபுளி யுப்பகற்றச் செப்பி னார்கள்
நாறுகின்ற கடப்பமலர் மாலை வேய்ந்த

நாயகன்றென் கதிரைமலை யுவந்த நாதன்
கூறுகின்ற வாறுமுக வேலன் செய்ய
கோகனகப் பதம்பணியுங் கொள்கை யோரே 122

**பித்தக்கரப்பன்**

பித்தமே கரப்ப னாகிற் பெருத்திடும் வீக்க முண்டாம்
மெத்தவே தொய்வுண் டாகும் விட்டிடாக் காய்ச்ச லுண்டாம்
சுத்தமாய்த் தவளை பாயுந் துன்றிய வியாதி கண்டால்
மெத்தவே மருந்து செய்ய மீண்டிடு மென்றார் முன்னோர் 123

**சிகிச்சை**

**காந்தக்குழம்பு**

ஊசிக் காந்த நாலுபல முரைக்கு மிருப்புக் கிட்டமது
பேசி லெட்டுப் பலமெடுத்துப் பிறங்குஞ் சுத்தி தனித்தனியே
தேசு பெறவே மிகச்செய்து சிறக்குங் கையான் சாற்றினுடன்
கூசு மெலுமிச் சம்புளியுங் குறையா திரண்டு படிவகைக்கே 124

வகைகேள் சாறு கலந்துவிட்டு வடிவா யரைத்துக் குழம்பாக்கி
மிகவே யுண்ண மண்டலத்தில் விளம்பும் பித்த முறுகரப்பன்
சுகமாங் கோழி முட்டையுடன் சொல்லு முருங்கைக்காய் கூட்டிப்
பகையா முப்புப் புளியகற்றப் பகர்ந்தார் முனிவர் பாரோர்க்கே 125

**பித்தவாதசேற்பனக்கரப்பன்**

பித்த வாத சேற்பனத்திற் பேருங் கரப்பன் வகைகேளாய்
மெத்த வயிற்றிற் சிதைவுண்டாமிகுந்தே யுடம்புகனத் திருக்கும்
சற்றே தவன முள்வெக்கை தானு முண்டாந் தலைநடுங்கும்
எய்த்தே யிளைப்பு மிகத்தோன்று மிருமல் தானு மிகவுண்டே 126

**சிகிச்சை**

**கையாந்தகரையெண்ணெய்**

கையாந் தகரை தூதுவளை கருதும் பிரமி நிலவாகை
மெய்யா நொச்சி செருப்படியு மிக்க பருத்தி வீழியுடன்
ஐயா கோழி யவரை *பருப்படியோ டாடா தோடையதும்
வையா யழிஞ்சி லுப்பிலியு மதிக்குங் குன்றி மணியுடனே 127

*பருப்படி - பெருஞ்செருப்படி

உடனே கர்ப்பூ ரவ்வள்ளி யோது மிரண்டு பாங்குடனே
மடனேர் கொன்றை சீதுளாய் மானே கழற்சி நிலக்குமிழும்
திடநேர் வெள்ளை யறுகுடனே சேருங் கொடிமல்லிகையிவைகள்
உடனே சாறு வகையொன்றுக் கொவ்வோர் படியதாக்கொள்ளே128

ஆமே செம்ப ரத்தம்பூ வாமெள் ளெண்ணெ யொருபடியும்
போமே கற்கஞ் சாதிக்காய் புகன்ற கடுக்காய் மாயாக்காய்
நாமே யுரைக்கில் வலம்புரியு நற்சீ ரகமுங் கருஞ்சீரம்
தாமே திப்பில் வசம்புடனே தக்க வரத்தை சதகுப்பை 129

குப்பை யுடனே மனோசிலையுங் குறிக்குங் கெந்தி நேர்வாளம்
செப்புங் கோட்ட மிந்துப்புச் செஞ்சந் தனமே பீநாறி
துப்பார் பீத ரோகிணியுந் தூய்நா கம்பூச் செண்பகப்பூ
வைப்பாய் கடுகு ரோகணியு மருவா ரேல மிலவங்கம் 130

வங்க மான கஸ்தூரி மஞ்ச ளிவையொன் றரைக்கழஞ்சு
பொங்க வரைத்துக் கஷாயமதிற் புகட்டி மெழுகுபதம்வடித்துத்
தங்கு சிரத்தின் மத்தித்துத் தானே முழுகக் கரப்பனெலாம்
திங்க ளுலவுஞ் செஞ்சடையா னருளாற் றீர்ந்து போய்விடுமே 131

**முக்கூட்டுக்கொதியெண்ணெய்**

திரிகடுகு திரிபலைவெண் கார மஞ்சள்
செஞ்சந்த மதிவிடயஞ் சன்னி நாயன்
வெறிகொளிங்குத் திரிசாதி யிருசீர் துத்தம்
வெண்காரங் கடுகேலம் வெளுத்தல் கோட்டம்
நறியவதி மதுரமில வங்கங் கல்நார்
நாகமலர் மரமஞ்ச ளோமங் கொத்தம்
மறிகடலி னுரையரத்தை யுலுவாவப் பிரக
மஞ்சிட்டி வாலுளுவை படகங்கன் மதமே 132

ஏரண்ட மவுரிமுடக் கொற்றா னொச்சி
யெருக்காயி லுவாய்புன்கு சிவனார் வேம்பு
கோரண்ட மாவிலங்கை வட்டுக் கான்றை
கொடுவேலி முருங்கைமுருக் கமுக்கி ராவும்

காரண்டங் கோவைகளப் பன்னை வேளை
கன்முரிசு காற்றோட்டி கறுக்காய் துத்தி
பார்தங்கு குமிழ்வாத மடக்கி வேலிப்
பருத்திமா வாலிசா ரணைகி ளாயார் 133

கிளத்துகற்கம் வேரிவைகள் சமனோ ரொன்று
கேடிலா தேயிடித்துத் தூள தாக்கி
வளத்தவே ரண்டநிம்ப மெள்ளி லெண்ணெய்
வகைவகைக்கு நாழியொன்றாய் வார்த்துக் காய்ச்சித்
தளைத்திடுவெற் றிலைவெடித்த பதத்திற் றூளைத்
தான்றூவி யிறக்கியது தன்னை யாற்றிக்
குளிர்ச்சிபெறத் தலைமீது பொருத்தி யுள்ளுங்
கொண்டிடுகிற் றீர்ந்திடுநோய் கூறக் கேளே 134

கேளுளைவு குத்துவலி பலக ரப்பன்
கிரந்திமுட்டுத் தொய்வுகிறு கிறுப்பு வாயு
தாளிலுறு வாதமுடன் சன்னி வீச்சுத்
தவிராத சோர்விவைக டாமே தீரும்
வாள்விழியாய் செய்துகண்ட வெண்ணெ யென்று
வகுத்தனர்மா முனிவர்மணி கங்கை சூழும்
தாழ்வரைசேர் தென்கதிரை மேவி வாழுஞ்
சண்முகநா யகனருளாற் றரணி மீதே 135

**முலைப்பால்நெய்**

**வரட்கரப்பனுக்கு**

மங்கையர்தம் முலைப்பாலும் பசுவின் பாலும்
வளர்பிள்ளைக் கற்றாழை பொன்னாங் காணி
இங்கிவையொவ் வொன்றுபடி யொன்ற தாக
விதிற்பாதி பசுவினெய் யிவற்றி னோடே
செங்கைகொடு பிடுங்கும்வேர் முத்தக் காசு
சிறந்தகொடு வேலியமூக் கிராயெ ருக்குப்
பொங்குகெந்த மனோசிலைபொன் னரிதா ரம்பின்
புகழான திப்பில்சுக்குப் பொருந்தக் கூட்டே 136

கூட்டியே வடித்த நெய்யுட் கொண்டுற மேலும் பூசில்
வாட்டிய வரட்க ரப்பன் வந்திடுங் கண்டு கொல்லி
பாட்டுறு கிரந்தி தொய்வு பற்றறத் தீரு மென்றே
ஏட்டினி லெழுதி வைத்தா ரேற்றமாந் தவத்தோர் தாமே 137

**அர்க்கதைலம்**

எருக்கலை தன் பூக் காய்தோ லிலைபட்டை யென்னு மைந்து
வருக்கமும் பலமொன் றாக வகுத்துநீர் நாலு நாழி
எரித்துநா லொன்ற தாக விறுத்துநல் லெண்ணெய் நாழி
முருக்கிலை வேளை ரண்டு மொழிந்தசா றுரிதான் கூட்டே 138

கூட்டுவெள் ளாட்டின் பாலுங் குலவமு வுழக்க தாகும்
கோட்டந்திப் பிலிம ரீசங் கொள்ளுநாற் கழஞ்சொவ் வொன்று
கூட்டியே வடித்துப் பூசக் கூறிய வரட்க ரப்பன்
ஓட்டமா யோடு மென்ன வுரைத்தன ருறுதி கண்டே 139

**கரப்பன்வீக்கத்துக்கு**
**குடிநீர்**

ஏராருந் திப்பிலிசுக் குடன்க டுக்கா
யினுமுலுவா மிளகுவவ்வி லொட்டி வீழி
பேராருஞ் சங்குப்பி யெருமை முல்லை
பெருகியமாக் கருவேம்பு மிலையும் வேரும்
நேராக விடித்து முத்தக் காசு மொக்க
நீரதுவு மிருநாழி விட்டே யூறிச்
சீராக வெரித்துழக்க தாய்க்கு டிக்கச்
சேர்கரப்பன் றனில்வீக்கந் தீரு மன்றே 140

**இக்குடிநீரில்இழைத்துண்ண**
**முருக்கிலைச்சாற்றுக்குளிகை**

சீராருங் கெந்தகநற் சூதந் நாவி
சேர்துத்தந் துரிசுபொரி காரஞ் சீனம்
ஏராரும் வெண்காரம் பலைகண் மூன்று
மியல்வசம்பு சுத்திதனிற் றெளிந்த நல்ல

காரியப் பொடியுமர பொடியு நேராய்க்
கழஞ்சொன்று நேர்வாளங் கழஞ்சு நாலு
வேராருந் தூதுவளை சங்கு சீந்தில்
வெள்ளறுகு நிலவாகை சிவனார் வேம்பு 141

வேம்புடனே கருஞ்சூரை யாடா தோடை
வேர்வகைக்குக் கழஞ்சிரண்டு பொடித்துக் கொண்டு
காம்புபெறு முருக்கிலையின் சாற்றாலாட்டிக்
கருதிய தூதுளங்காய்போ லுண்டை செய்து
நாம்புகன்ற குடிநீரி லுரைத்துட் கொள்க
நல்லமுருக் கிலைச்சாறு தானு மேற்கும்
போம்புகன்ற கரப்பனதில் வீக்க மின்னும்
புகலுவமே யனுபானம் பொருந்திக் கேளே 142

பொருந்துதக ரைப்பழுப்பை யவித்த நீரிற்
புகட்டியிடப் பலவீக்கம் போகு முள்ளி
பெருங்காய மவித்திடவே குத்து வாயு
பேசாம லோடிவிடும் வவ்வி லொட்டி
சுருங்காத பிரமியசந் தீண்டாப் பாளை
சுரைமுருக்குச் சிற்றமட்டி கஞ்சாங் கோரை
திருந்துமிவை யிலையனைத்துங் குமரி தன்னிற்
சேர்சருகு கடுக்காயுஞ் சமனொவ் வொன்றே 143

ஒன்றாக வேகூட்டிக் குடிநீர் நாலி
லொன்றாக வவித்திறுத்துக் குளிகை கூட்டி
நன்றாக வேகுடிக்க விஷவா ததத்தில்
நவில்வீக்க நீராமை சூலைக் கட்டி
பொன்றாத கவுசிமகேர தரம்பே ராமை
போகாத வீக்கமவை யனைத்தும் போகும்
மன்றாடும் பரமசிவ னருளுஞ் சுப்ர
மணியனடி மறவாத மனத்தி னீரே 144

கரப்பன் ரோகநிதானம்
முற்றுப்பெற்றது.

## பரராசசேகரம்
## இருபத்தொராவது
### கிரந்திரோகநிதானம்

(இந்நிதானமும் இதனையடுத்து வரும் குட்டரோக நிதானமும் நிறைவாயுள்ள பிரதி ஒன்றேனும் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள மிகப்பழைய ஓர் பிரதியில் சிற்சில ஏடுகள் தவிரப் பிறவெல்லாம் இராமபாணத்திற் கிரையாயிறந்தொழிந்தன. இறவாதுள்ள ஏடுகளிற் கண்டவற்றை ஒருவாறு செப்பஞ் செய்து பதிப்பித்திருக்கின்றோம்.)

சீலமா ராயுள் வேதஞ் செப்பிய பேதந் தன்னில்
மூலமார் கிரந்தி முற்றி முதிர்ந்திடு மிருபத் தாறிற்
கோலமார் பேருங் கோதில் குணங்களு முலகின் மீதே
ஆலமார் களத்தெம் மண்ண லருளினா லறைய லுற்றேன் 1

### கிரந்திரோகத்தொகுப்பு

உற்றதோர் பெருங்கி ரந்தி யுலர்த்துமூ லக்கி ரந்தி
சுற்றியே படர்கி ரந்தி சொறிந்திடுஞ் சொறிகி ரந்தி
பற்றுமோர் வாய்க்கி ரந்திப கர்ந்திடும் புடைகி ரந்தி
முற்றுமோர் செங்கி ரந்தி முதிர்கருங் கிரந்தி யாமே 2

ஆனதோ ரழிகி ரந்தி யதிகமா முறிகி ரந்தி
ஈனமா ரரிகி ரந்தி யிரணகா திற்கி ரந்தி
ஊனமார் விஷகி ரந்தி யுறுமசு குணிக்கி ரந்தி
பானமார் வரட்கி ரந்தி பகர்மண்டைக் கிரந்தி யாமே 3

மண்டுவெண் கிரந்தி மிண்டி மாறியோ டிடுங்கி ரந்தி
துண்டநா சரிகி ரந்தி சுழிகண்டக் கிரந்தி மெய்யின்
மிண்டுசேற் பனகி ரந்தி மீள்கபா லக்கி ரந்தி
உண்டுவீங் கிடுங்கி ரந்தி யோடியே றிடுங்கி ரந்தி 4

ஏறியூ திடுங்கி ரந்தி யெரியுமுட் டணகி ரந்தி
மீறிய கிரந்தி முன்னூல் விளம்பிய தறிந்து சொன்னோம்
கூறிய குணமு மந்தக் குணவழி யெண்ணெய் பற்பம்
தேறிய வுலகின் மீது தெரிந்தவா செப்ப லுற்றேன் 5

**பெருங்கிரந்தியின்குணம்**

அதரமும் வெடித்துப் புண்ணா யழற்றிடு மிடறு நாக்கும்
உதரமும் பொருமி நொந்தே யுண்டியு மொறுத்தாள் வற்றி
முதிரவே சொறிந்து மேனி முற்றுமே தடித்து வீங்கும்
பிதுருமாம் பெருங்கி ரந்தி செய்குணம் பேசுங் காலே 6

**மூலக்கிரந்தி**

சொறிந்திடுந் தடிக்கு மேனி துயருற விரும லுண்டாம்
செறிந்திடுஞ் சரிர முற்றுந் தேமலா யதரம் புண்ணாம்
பிறிந்திடும் வயிற ளாவிப் பெருத்திடும் வாய்நீ ரூறும்
அறிந்திடு மூல மீதி லடர்ந்திடுங் கிரந்தி யாமே 7

வயிற்றினி லளாவி நொந்து வாய்வெளுத் ததரம் புண்ணாய்
உயிர்ப்பினிற் கிறுகி றுத்தே யுண்டியு மொறுத்தாள் வற்றிப்
பயிர்ப்பினிற் சரீர முற்றும் படந்திடுந் தேம லாகி
அயிர்ப்பினிற் சரிரம் வீங்கி யதைத்துடன் வற்றுங் காணே 8

கண்டிடுஞ் சரீர முற்றுங் கடித்திடுஞ் சொறிந்து மாய்க்கும்
உண்டிடு மன்னஞ் செல்லா துருத்திடுங் கோப முண்டாம்
மிண்டிடும் வாய்நீ ரூறு மிடுக்கற நடுக்கி வீழ்த்தும்
அண்டிடு மூல மீதி லடுத்திடுங் கிரந்தி யாமே 9

**(வேறோர் பிரதியின்படி)**

மூலக் கிரந்திக் குணமதனை முன்னூலுரைத்த படிமொழிவன
கோல வயிற்றை யளவிநொந்து கொதித்துப் புரட்டி வாயூ
வாலைச் சரீரந் தேமலுமாய் வாயிற் கடைவாய்க் கிரந்தியுண்டாய்
நீல விழியு மஞ்சணித்து நின்றே யிருமல் வரட்சியுண்டே 10

உண்டே மூலஞ் சொறிந்துமொய்த்தே யூர்ந்து மூலத் ததிகரித்துக்
கொண்டேயிரவிற்றினங்காயுங் குளிர்ந்தேசிறுத்துக்கிறுகிறுக்கும்
விண்டேமூலஞ்சொ றிந்துபுண்ணாய் மேனிவரண்டு வெளுப்பேறும்
கண்டா யிந்தக் குணந்தன்னைக் கடிய மூலக் கிரந்தியென்றே 11

### *கருங்கிரந்தி

கருமணல் தூற்றி னாற்போற் காயமேற் கபாலந் தன்னில்
விரவியே படர்ந்து மேலே விஷநீரா யோடு நீரும்
கரகரத் திடுமென் மேலுங் கனவுண்டாய்ச் சுணங்கு காட்டும்
தெரிவையிக் குணங்கள் கண்டாற் றேர்கருங் கிரந்தி யென்றே 12

### *செங்கிரந்தி

பொக்கியே சிவந்து குன்றி போலவே விசிறிப் போகும்
அக்கியாய் மென்மேற் காந்து மருவியாய் நீரும் பாயும்
ஒக்கவே யுடம்பு காயு முவர்ந்தியுண் மூச்சு முண்டாம்
தக்கவிக் குணங்கள் கண்டாற் சாருஞ்செங் கிரந்தி யாமே 13

### சிகிச்சை

### வெள்ளறுகுநெய் -1

கண்டக் கிரந்தி வாய்க்கிரந்தி கபாலக் கிரந்தி யுட்கிரந்தி
துண்டக் கிரந்தி நாச்சுற்றிச் சொறியுங் கிரந்தி சுகந்தருநெய்
கொன்றைச் சாறு வெள்ளறுகு கூறுங் கிரந்தி தனக்கரசன்
தெண்டித் திடித்துத் தன்சாறு செறிந்தோ ரொன்றுநாலுளக்கே

தெள்ளியநற் பலைமூன்று வசம்பு மஞ்சள்
சிவந்தசந்த நற்சத்தம் பூத விர்க்கம்
கள்ளமறு மதனப்பூச் செண்ப கப்பூக்
கடியபச்சைக் கர்ப்பூரந் துரிசு குப்பை 22

*இவற்றை முறையே கருங்கரப்பன் செங்கரப்பன் என்று சிலபிரதிகளில்.

குப்பையகி லதிவிடய மிருசீரோடு
சூறியநன் மாயாக்கா யுலுவாப் பின்னும்
துப்புறுபூஞ் சாந்திவைக ளொருக ழஞ்சு
சொற்பதத்தி லேவடித்து மேலும் பூசிச்
சிப்பியள வுட்கொண்டு தலைக்கும் வைத்துத்
தேய்த்துவெந்நீர் முழுகிவரப் பலகி ரந்தி
வெப்புடைய மூலத்திற் கிரந்தி மாறா
வெகுகரப்ப னிருமலிவை விட்டுப் போமே 23

### ஈருள்ளியெண்ணெய்

நாகையுறு மீரவுள்ளி சூரத் துற்ற
நல்லதொரு வெண்காய மியங்கு கையான்
வேகமுறு கர்ப்பூர வள்ளி தானு
மிக்கபுளி யிவைகளிலை சம்பீ ரத்தின்
தாகமறு பழமிவைகள் சாறு மெள்ளின்
றக்கவெண்ணெ யொவ்வொர்படி சாருங் கற்கம்
பாகமுறு திரிகடுகு கடுகு ரோணி
பகர்வெளுத்த லதிமதுரம் வசம்பு மஞ்சள் 24

ஏலமில வங்கமகில் சிவந்த சந்த
மிந்துப்புச் சாதிக்காய் கராம்பு நற்சீர்
கோலமுறும் வசுவாசி கடுக்கா யோமங்
குங்குமப்பூ வகைக்கிரண்டு கழஞ்சு கூட்டிச்
சீலமுடன் வடித்தெண்ணெய் பூசி யுள்ளுந்
தின்றுசிரத் தினிலு மிட்டு முழுக நாளும்
மூலமுறு கிரந்தியுடன் கரப்ப னல்லால்
மொழிந்தபல கிரந்திகளுந் தீருமன்றே 25

### அசுகுணிக்கிரந்திக்கு

எருக்கலம்வேர் புங்கம்வே ரெழுமுள் ளின்வே
ரிசைந்தசெங்கத் தாரிவே ரீர வுள்ளி
மருக்கொளிரு சீரகந்திப் பிலிவ சம்பு
வருகுலக்காய் சமனாகப் பொடித்துக் கொண்டு

திருக்கிளரு மெள்ளெண்ணெய் வெடிப தத்திற்
சேர்த்திடுதூள் தூவியுள்ளு மேலும் பூச
உருக்கிளரு மசுகுணியிற் கிரந்தி மேலி
லுற்றசொறி கரப்பனிவை யோடுங் காணே 26

**மூலக்கிரந்திக்கு**

**தூதுளம்பழலேகியம்**

தூதுவளை சிற்றமட்டி யாடா தோடை
தூயகண்டங் காரிவட்டுக் *குதிரை யின்வேர்
தீதில்சிறு வழுதலைவேர் பிரண்டை யின்வேர்
செப்புமரல் புளிநடலை வேரு மூலங்
காதுகறிக் கருணையின்றன் கிழங்கு காட்டிற்
கருணைதரு கிழங்குசா ரணைக்கி ழங்கு
தீதில்சித்தக் கத்தரியின் வேரு மெல்லாஞ்
சேரவகைக் கிருபலமாய்த் தேடிக் கொள்ளே 27

தேடியிடித் தெட்டொன்றா யவித்தி றுத்துச்
சேர்கின்ற சாறுவகை செப்பக் கேண்மின்
தோடுபெறு மாதுளையின் பழங்க ரும்பு
சொற்றசிறு காஞ்சோன்றி யிலையும் வேரும்
பீடுபெறு சாறிவைகள் படிதான் காலாய்ப்
பெருகுகருப் பூரவள்ளி கண்டங் காலி
கூடுமிலை தமிற்சாறு படியொவ் வொன்று
கூறியதூதுழம்பழத்திற் சாறு நாலு 28

நாலுபடி யுடனேநல் லீர வுள்ளி
நவில்சாறு வகைபடியொவ் வொன்று தானும்
பாலுடனே நறுநெய்யும் வகைக் கிரண்டு
படிகூட்டித் திரிகடுகு சிறுநா கம்பூ
வாலியதிப் பிலிமூலங் குலக்காய் கோட்டம்
வசுவாசி யதிமதுரந் தான்றி நெல்லி
மேலுமிரு சீரகம்வெண் காரஞ் சோலம்
விளம்புமதி விடயமொடு கராம்ப ரத்தை 29

*குதிரை - அமுக்கிரா

அரத்தையுடன் கற்கவகை கழஞ்சொன் றாகு
மாண்பனையின் வெல்லமது படிகால் கூட்டி
உரைத்தநல்ல வெல்லமரைப் படியாந் தேனு
முற்றிடுகாற் படிமெழுகு பதத்திற் காய்ச்சி
வரைத்தநிறை கழஞ்சுகொள்ளச் சீனி தன்னில்
வகுத்தபடி யந்திசந்தி மண்ட லங்கொள்
உரைத்ததொரு மூலத்திற் கிரந்தி கோழை
யுட்காய்ச்ச லுள்ளுருக்கி யிருமல் போமே 30

**புளியெண்ணெய்**

கர்ப்பூர வள்ளியிலை சம்பீ ரத்தின்
கனியுமிவை யிற்சாறு படியி ரண்டு
சொற்பாவு புளியமிலை முசுமு சுக்கை
சூழியங்கு மிலைமூன்றுந் துவைத்த வித்துப்
பொற்பாக மூன்றுபடி பிழிந்து விட்டுப்
புகன்றிடுமெள் ளெண்ணெயதி லளவாய்க் கூட்டி
விற்பாவு நுதலணங்கே கற்கஞ் சொல்வன்
விளம்பிருசீ ரகமேலங் கராம்பு வாசி 31

வாசிபெறு திரிகடுக மரிசி யாறு
வகுத்தபலை மூன்றரத்தை யிரண்டு கோட்டம்
தேசுபெறு செஞ்சந்தஞ் சிறுநா கம்பூத்
திப்பிலிமூ லங்குலக்காய் பூத விர்க்கம்
மாசியின்கா யிந்துப்பு மதுர மாஞ்சில்
வால்மிளகு சதகுப்பை யக்க ராவு..
பேசுவலம் புரியிவைகள் கழஞ்சொவ் வொன்று
பேணியரைத் துக்கரைத்துக் காய்ச்சும் போது 32

காய்ச்சையிலே நாகையுறு மீர வுள்ளி
கதிக்கவே யிரண்டுபடி சாறு விட்டு
வாய்ச்சபதந் தனில்வடித்துக் குங்கு மப்பூ
வகுத்திடுகோ ரோசனையும் புழுகு சட்டம்
வீச்சுடைய பசியகர்ப் பூர மொன்று
மிகாமலே யொருகழஞ்சு வீதந் தூவித்
தேய்ச்சுமு ழுகிப்பின்ன ருள்ளுங் கொள்ளத் 33
தீருமே மூலத்திற் கிரந்தி சோகை

சோகைதரு நடுக்கமுட னெரிவு காந்தல்
சுழற்சிபெறுங் கிறுகிறுப்புப் பித்த பாண்டு
வேகமுறு மெய்ப்பிளைப்பு வெளுப்ப ரிப்பு
மிகுமிருமல் சொறிசிரங்கு புள்ளித் தேமல்
மேகமுறு முள்ளெரிவு கண்டந் தன்னின்
மேவுபல கரப்பனவை விட்டுப் போகும்
பாகமதி லுப்புடனே புளியு நீக்கிப்
பாத்தியமா யுண்டுவரப் பறையு நோயே 34

**பெருங்கிரந்தியெண்ணெய்**

பிரமிபுளி வல்லாரை வெள்ளறுகு சங்கு
பேசரிய முசுமுசுக்கை முருக்குவவ்வி லொட்டி
அரியுடைய காந்திகருப் பூரவள்ளி கோழி
யவரைவன மல்லிகைகோ டகசாலை யவுரி
கருவிளைகை யாந்தகரை தூதுளைகற் றாழை
காற்பாச மோடுமணித் தக்காளி கிரந்தி
வருபிணிநா யன்வீழி முக்கணுவ னோடு
வளராடா தோடைசெருப் படிதுளசி யிலையே 35

இலைச்சாறு மெலுமிச்சம் பழச்சாறுந் நாழி
யெள்ளெண்ணெ யிருநாழி பட்டைமுகி ழியம்பில்
மலைச்சார்பி னாற்பாலின் முகிழத்தி யரசால்
வளரித்தி யிவைபட்டை நன்னாரி பன்னை
முலைப்பாலை நேர்முத்தக் காய்கொட்டி மூலி
முடக்கொற்றான் முசுக்கைதூதுளைபங்கம் பாளை
பலைச்சாரு மசுவகந்தி யிருவேலி மிச்சுப்
படர்கழற்சி யிவைவேர்க ளொருபிடியாய்ப் பண்ணே 36

செங்கழுநீர்க் கிழங்கேலம் பொன்மெழுகு கோட்டஞ்
செண்பகப்பூச் சீரகங்கள் திப்பிலிசெவ் வள்ளி
குங்குமங்கச் சோலங்கள் புழுகுசட்டஞ் சந்து
குலவசம்போ டிலவங்க மிளகுடனே குக்கில்
தங்குமதி மதுரமுட னுரோகிணியே சுக்குச்
சாதிக்காய் மாயாக்காய் வசுவாசி கராம்பு
கங்குனிறக் கார்புகாப் பெருங்குரும்பை தாரங்
கழஞ்சளவாய்க் கொள்வடித்துக் கரகமதிற் கட்டே 37

கட்டியபி னதிகாலை யந்தி வேளை
கணபதியை யடிவணங்கி யுள்ளே கொண்டால்
முட்டியமூ லக்கிரந்தி செங்க ரப்பன்
முகம்வாயிற் கிரந்திகருங் கிரந்தி யாதி
துட்டமுறு கிரந்தியெலா மிரவி முன்னர்த்
தோன்றுபனி போனீங்கு மேலும் பூசி
இட்டமுடன் றலையினிலுந் தேய்த்து மூழ்க
வினிதாகு மெனவறிஞ ரிசைத்தா ரன்றே 38

**கர்ப்பூரவள்ளியெண்ணெய்**

நோய்செய்யும் வாய்க்கிரந்தி கண்டந் தன்னில்
நுவல்கிரந்தி கரப்பனுடன் மூலத் துற்ற
தீமையுறு மக்கிரந்தி சிறுகி ரந்தி
தீருவதற் கோரெண்ணெய் செப்பக் கேண்மின்
நாமமுறுங் கர்ப் பூரவள்ளி வீழி
நவில்முசுக்கை தூதுவளை புளியி யங்கு
ஆமமறும் பஞ்சவர்தம் முல்லை கோழி
யவரையிவை யிலைச்சாறு பருத்திப் பிஞ்சு 39

பிஞ்சுபெறு தென்னையினிற் குரும்பைச் சாறு
பேசியவீ ருள்ளியினிற் சாறு மல்லால்
விஞ்சியுள கிளுவைதனிற் காயிற் சாறு
மிகுபசுப்பால் செவ்விளநீர் படியொவ் வொன்று
தஞ்சமுறுந் திரிகடுகு திப்பில் மூலஞ்
சாருமிரு சீரகங்க ளோம மேலம்
மிஞ்சியுறு மிலவங்கப் பட்டை பத்ரி
வேண்டுமத்தித் திப்பில் திரிபலையிந் துப்பு 40

துப்புறமு மரத்தசந்தம் வலம்பு ரிக்காய்
தூயவசு வாசியதி மதுரங் கோட்டம்
வெப்பமறுஞ் சடாமாஞ்சி லரத்தை மஞ்சள்
வேண்டுசிறு தேக்கமரர் தாரு வின்னும்
செப்புகுலக் காய்வசம்பு சிறுநா கம்பூச்
செவ்வள்ளி மரமஞ்சள் கழஞ்சொவ் வொன்று
தப்பறநல் லெண்ணெய்விட்டு வடித்துப் பூசச்
சாற்றியதோர் கிரந்திவகை சாந்த மாமே 41

**ஈருள்ளிப்பாகு - 1**

கரிசாலை வெள்ளறுகு கண்டங்காலி
கர்ப்பூர வள்ளிமுசு முசுக்கை வீழி
அரிதான தூதுவளை யியங்கு *முல்லை
யரியசிறு காஞ்சோன்றி பிரமி தானும்
விரிவான நிலபாகல் கரும்பு நன்றாய்
வெடித்தமா தளம்பழமும் பேரீஞ் சுற்ற
மருவான பழமுமெனு மிவற்றின் சாறு
வகுத்தபசு வின்பாலு நெய்யுந் தேனும் 42

தேனுமிவை வகைவகைக்கப் படிதான் கூட்டிச்
செப்பியவீ ருள்ளியறு பலத்தி னோடு
சீனி வெல்லந் திப்பில்மிள கேல மொன்று
சேர்ந்திடுமுக் கழஞ்சுதிரி பலைக ராம்பு
கானிலுறு சாதிக்காய் கராம்பு வாசி
கர்ப்பூரஞ் சிற்றரத்தை சிறுநா கம்பூ
ஈனமறு மதிமதுரங் கோட்ட மிந்துப்
பிலவங்க பத்திரிசுக் கோம முள்ளி 43

உள்ளிதிப் பிலிமூலங் கொத்த மல்லி
யுலுவாநற் குங்குமப்பூ வுடன்கோ ரோசினை
தெள்ளியிவை யொருகழஞ்சு பாகு காய்ச்சித்
தின்றுவரப் பத்தியமாய் மூலத் துற்ற
கள்ளமுறு கிரந்தியிளைப் பீழை தொய்வு
கண்டத்திற் கரப்பனுட னெஞ்ச டைப்பு
எள்ளலுறுந் தொய்வுபடர் தேமல் சேற்ப
மிசைந்தமுட்டு வாய்க்கிரந்தி கிரந்தி யாவும்
வள்ளிமண வாளனிரு பாதம் போற்றும்
வாலறிஞர் பவம்போல மாறு மன்றே 44

*முல்லை என்றது இங்கு பஞ்சபாண்டவர் முல்லையை.
**பன்னம் - இலை
*சீரமிரு - இருசீரகம்
#இவ் வசனமும் பிரதியுள்ளதே.

**ஈருள்ளிப்பாகு - 2**

ஈருள்ளி பலமொன்று தூது காரி
யினியசிறு காஞ்சோன்றி நிலத்தின் பாகல்
பூரவள்ளி முசுமுசுக்கை சமூல மெல்லாம்
புகல்வீழி பஞ்சவர்த்த முல்லை **பன்னம்
*சீரமிரு சிற்றரத்தை சிறுநா கம்பூத்
திப்பிலிமுப் பலையினுடன் கராம்பு கூட்டி
நீர்பதக்கி லெட்டொன்றாய்ப் பனையின் வெல்லந்
நேர்கூட்டிப் பாகுசெய்ய முன்னோய் போமே 45

#எட்டொன்றாய்க் காய்ச்சிப்பிழிந்து கண்டெடைக்குப்பனை வெல்லமாவது சீனியாவது கூட்டிப் பாகுபதத்திற் காய்ச்சிப்பருக மூலக்கிரந்தி, சிரங்கு சொறி படுவன்கரப்பன் தீரும். சீனியாவது வெல்லமாவது கூட்டிக்குடிநீராகவும் பருகலாம்.

**அமுக்கிராச்சூரணம்**

அசுவகந்தி தூதுவளை கண்டங் காலி
யவற்றின்வேர் பலமொன்று வகைக்குக் கூட்டிக்
கசிவுடைய வீருள்ளி பலமி ரண்டு
கராம்புவசு வாசிகுலக் காய ரத்தை
பசியுறுநற் சீரேலஞ் சிறுநா கம்பூப்
பகர்கோட்ட மிளகுகடுக் காய்வ கைக்குச்
சுசியுடனே யிருகழஞ்சு சூர ணித்துச்
சொற்சீனி சமன்கலந்து தேனிற் கொள்ளே 46

**கண்டக்கிரந்திகரப்பனுக்கு**
**சித்தாதிபுகை -1**

சொற்பாவுங் கண்டத்திற் கிரந்தி தீரத்
துரிசுதுத்த மரிதாரஞ் சாதி லிங்கம்
கற்பாவு மனோசிலைநல் வசம்பு சூதங்
கராம்புகுலக் காயேலங் கடுக மூன்று
பொற்பாகக் கழஞ்சிடைகொள் சம்பீ ரத்தின்
புகல்கனிச்சாற் றாலரைத்து வீர வாளி
யிற்பாவும் பட்டினிலே பூசி வெய்யி
லின்முகத்தி லுலர்த்தியினி யிசைக்கக் கேண்மோ 47

கேளுமெழுத் தேறாத காகி தத்திற்
கிளரவைத்துச் சுருட்டிவெள்ளை நூலாற் கட்டி
நாளுமதை யந்திசந்தி புகைக்கு டித்து
நலம்பெறவூண் பத்தியமா யுண்டு வந்தால்
நீளவினி நில்லாது கண்டந் தன்னில்
நிகழ்கிரந்தி விற்புருதி கரப்பன் மாலை
சூழமிகும் வாய்ரோகங் கபாலந் தன்னிற்
சொறிகரப்பன் பீநசமுந் தொலைந்து போமே 48

### சித்தாதிபுகை - 2

திரிகடுகு வசம்பேல மிருசீர் துத்தஞ்
சிற்றரத்தை சிறுநாகம் பூக்கு லக்காய்
மருவுடைய வெண்கோட்டங் கராம்பீ ருள்ளி
வளர்வெள்ளைக் குத்துருக்கஞ் சமனாக் கொண்டு
திருவுடைய சம்பீரப் பழத்தின் சாற்றாற்
றேர்ந்தரைத்து முசுமுசுக்கைச் சாற்றிற் றோய்த்தே
உருவுபெற வுலர்த்தியசீ லையினிற் பூசி
யுலர்த்திமுன்போற் புகைகுடிக்க வோடுங் காணே 49

### கண்டக்கிரந்தி முதலியவற்றிற்கு ஈருள்ளிப்பாகு

சீராரு மசுவகந்தி முத்தந் நாரி
சேர்தூது வட்டியங்கு கண்டங் காரி
பாரார்செங் கத்தாரி வேர்வ கைக்குப்
பலமொன்று விடித்தரித்துப் பகருங் கற்கம்
நேராருந் திரிகடுகு பலைகண் மூன்று
நிகழிருசீ ரகங்கோட்ட மதுர மிந்துப்
பேராருஞ் சதுர்ச்சாதஞ் சிறுநா கம்பூ
விலவங்கப் பட்டைபத்ரி சிற்ற ரத்தை 50

அரத்தைகறு வாத்திப்பி லதனின் மூல
மசமோதம் வால்மிளகு கறுவாக் காந்தம்
உரைத்தபெருங் காயமரி தாரங் கம்பி
யுற்றபிசின் சாதிலிங்கங் கணித வேதி
நிரைத்ததொரு மாயாக்காய் கழஞ்சு வீத

நிகழ்சூத மரைக்கழஞ்சு சூர ணித்து
வரைத்தமுன்னர்ச் சூரணத்தி னொடுக லந்து
வைத்தீர வுள்ளியரைப் படிய ரைத்தே 51

ஏயுமதிற் றேன்சீனி பசுவி னெய்யு
மிட்டுமருந் தினைக்கரைத்துப் பாகு காய்ச்சி
ஆயபத முறுகாம லிளம்ப தத்தி
லாற்றியே வெருகினடி யந்தி சந்தி
நேயமுட னுண்டுவரக் கண்டந் தன்னி
னிகழ்கரப்பன் கிரந்திவிற் புருதி சூலை
வாயிலுறு பலகிரந்தி மூலந் தன்னில்
வருகிரந்தி சிலேற்பனத்தில் மாறு மன்றே 52

கிரந்திரோகநிதானம் முற்றுப்பெற்றது

## பரராசசேகரம்
## இருபத்திரண்டாவது
## குட்டரோகநிதானம்.

ஒளிபெறு கைலை மேவி யுற்றிடு மமல மூர்த்தி
அளிபெறு முனிவர்க் கந்நா ளறைந்திடு மாயுள் வேதத்
துளிலுறு பேதந் தன்னி லுற்றிடு குட்ட ரோகம்
தெளிவுறு குணமு மேற்ற சிகிச்சையும் செப்ப லுற்றாம் 1

### குட்டரோகத்திற்கிலக்காவோர்

முன்னைவல் வினையி னாலே மொய்த்தெழுங் குட்ட ரோகம்
நன்மைசேர் நெறியி லுய்க்கு நற்றவக் குருவை மெய்ம்மை
உன்னிடு மன்பர் தம்மை யுதாசினம் பேசி நாளும்
இன்னல்செய் பாத கத்தோர்க் கெய்திடு மென்னும் வேதம் 2

வேதமே யுரைக்கு மேலா நெறியினில் விலகி நாளும்
ஏதமே புரியுந் தீயோர்க் கெய்துவ தல்லான் மேலோர்
ஓதிய நெறியி னின்றே யுயிர்களுக் குறுதி செய்யும்
மாதவர் தம்மை யந்நோய் வருத்தநாங் கண்டி லோமே 3

**ஏது**

ஆனதோர் வாத பித்த சேற்பன மதனி னாலும்
மானனாய் விடநீ ராலு மங்கையர் வருத்தத் தாலும்
ஈனமாங் கிரந்தி யாலு மிழிவுறு குட்ட ரோகம்
தானமில் லாதே சாரு மெனமுனி சாற்றி னானே 4

சாற்றிய வுணவின் பேதந் தன்னாலும் பால்நெய் வெல்லம்
ஏற்றமா யுண்ப தாலு மிறைச்சிமீ னதிகத் தாலும்
கோற்றொடி மடவா ரின்பங் குறைவறத் துய்க்கை யாலும்
தோற்றிடு மலச லத்தைச் சுகமற வடக்கை யாலும் 5

**குட்டரோகத்தொகுப்பு**

இன்னபல் லேதுத் தம்மா லேறிடுங் குட்ட ரோகம்
அன்னது பதினெட் டென்றே யறைந்தன ராயுள் வேதர்
சொன்னபல் பேத மெல்லாந் தொகுத்தவை யாய்ந்து தேறித்
தன்னையைந் தினிற்சு ருக்கித் தமிழ்முனி சாற்றி னானே 6

சாற்றுவெண் குட்ட மொன்று சார்கருங் குட்ட மொன்று
தோற்றுசெங் குட்ட மொன்று சொறியமு கணியு மொன்று
மாற்றரும் விஷத்தி லொன்று வந்திடு மைந்துஞ் செய்யும்
ஏற்றமாங் குணமு மேற்ற கிசிச்சையு மியம்பு வோமே 7

இயம்பிய குட்ட மெல்லா மருந்தினாற் றீரா தென்றே
இயம்பின ரறிந்த மேலோ ரேற்றமாஞ் சிவதன் மத்தால்
வயங்கிளர் பெரயோர் தங்கள் வாய்மொழி யாலுந் தீருந்
நயம்படு கன்ம போக நணுகினுந் தீர்ந்து போமே 8

மேதினி யுள்யோர் கேளும் வெண்கருங் குட்டம் ரண்டும்
ஓதிடி லசாத்தி யம்மென றுரைத்தனர் மற்ற மூன்றும்
வேதினை தீரு மென்று விளம்பினார் பெரியோர் முன்னே
தீதிலா வாயுள் வேதச் செய்கையைத் தெளிந்து பாரே 9

**வெண்குட்டத்தின்குணம்**

தோற்றுவெண்குட்டஞ்செய்யுங்குணத்தினைச்சொல்லக்கேண்மின்
நீற்றிடுங் கலம்போ லாகிச் சொறிந்திடு நீரும் பாயும்
ஏற்றமாய்ச் சாம்பல் வீழு மிழிபுலால் மிகவு நாறும்
மாற்றமாய்க் கபால மென்ன வரண்டுகா திரைச்ச லாமே 10

**கருங்குட்டம்**

கிட்டம்போல் வரண்டு மண்டைமீ தில்மீன் கிளர்சி னைப்போற்
தொட்டகை நீங்கா தென்றுஞ் சொறிந்திடு மசறு நாறும்
மட்டுறு குழலி னாளே மணலைப்போல் வங்கு வீழும்
துட்டமார் கருங்குட் டத்தின் குணமெனச் சொல்லி னாரே 11

**செங்குட்டம்**

நுங்கின்றோல் போற்சி வந்து நோவுண்டாய் நீரும் பாயும்
அங்கமே வற்றிக் காட்டி யனலெனக் காந்த லுண்டாம்
பொங்கியே கனத்து மென்மேற் பொருக்கெழும் புலாலு நாறும்
தங்கிள முலையாய் கேளாய் குட்டத்தின் றன்மை யாமே 12

**அழுகண்ணிக்குட்டம்**

நறுவிலிக் காய்போ லாகு நாளுநீர் சலமு மோடும்
மறுகுர வரிந்து காட்டு மலர்சிர முழுதுங் குத்தும்
தறுகிடாக் காந்த லுண்டாந் தழல்விழுந் ததுபோ லாகும்
முறுகியே பொசிவுண் டாகு மழுகண்ணி முறையி தன்றே 13

(இதன்கீழ் பலசெய்யுள்கள் இறந்துபட்டன. ஈற்றிலே எஞ்சியுள்ள சில ஏடுகளிற் கண்டசெய்யுட்கள் பின்வருவன காண்க.)

**பெருவியாதியென்னும் குறைநோயின்**
**பொதுக்குணம்**

மேலெங்கு மெரிவ தாகி மிகுந்துசுக் கிலமே வற்றிச்
சேலது கெட்டு நொந்து திமிருடன் பத்து முண்டாய்ப்
பாலொத்த மேனி யெல்லாம் பசுநரம் போடிக் காட்டிக் 14
காலத்துக் கிரந்தி மேலே வருமிது கண்டி டாயே

காணவே யெங்கும் பற்றிக் கனக்கவே வெள்ளை வீழ்ந்து
சேணுறு கைகால் தம்மிற் சினத்திடு நகத்திற் புண்ணாம்
பாணுறு தொண்டை புண்ணாம் பலபல விடத்திற் பற்றும்
ஆணிபோற் குழியும் வீழ்ந்தே யடிக்கடி குறையுந் தானே 15

தானே குறைந்து கைகாலுந் தளரு நரம்பு தானழுகி
ஊனே வற்றி யுண்மடங்கி யுளைவு பெருத்துத் தாதுகெட்டு
மானே மருந்திற் றீராது வந்த வியாதி வலுவாகும்
நானேசொன்னேன்குறைநோயைநாதனருளிச்செயல்கொண்டே 16

### சிகிச்சை

### சண்டமாருதத்தைலம்

உத்தமா காணிச் சாறு மூர்தரு குப்பை மேனி
மெத்தவே பிரண்டைச் சாறு மேவிய கழற்சிச் சாறு
சுத்தமாம் வேளைச் சாறு துலங்குவேப் பெண்ணெய் தானும்
சித்தமாய் வகைக்கி ரண்டு படிதாளி தன்னிற் சேரே 17

பரிந்தநற் சாறு மெண்ணெய் பன்னிரு படியும் விட்டு
திருந்தவே காய்ச்சிக் கள்ளி யெருக்கும்பால் சேரு ளக்குப்
பொருந்துநீர் வெட்டி முத்தும் புகன்றசேங் கொட்டை தானும்
கருந்தடங் கண்ணி னாளே யரைத்துடன் கலந்து காய்ச்சே 18

வெள்ளையுங் கவுரி பின்னும் விடந்தரு பச்சை நாவி
வள்ளலார் சந்த னந்தான் வகைக்கிவை கழஞ்சு மூன்று
மெள்ளவே யரியின் றார மிகாமலே பொடியாய்ப் பண்ணித்
துள்ளவே தூவி யெண்ணெய் சுகந்தருபதத்திற் காய்ச்சே 19

பதத்திலே வந்த போது பரிவுற வடித்த வெண்ணெய்
சுகத்திலே யுடம்பி லிட்டுச் சுவறவே பிடித்த பின்னை
அகத்துளே கழஞ்சு கொண்டேயடுத்தெட்டு நாளுஞ் சென்றாற்
செகத்திலே பெருவி யாதி தீருமென் றிருடி சொன்னார் 20

குட்டரோகநிதானம்முற்றிற்று.

Virus Printers Inuvil